Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර

பக்கம் 20 ரூபா 12/00

ஒக். 08-14, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 377

## இறுதி நேரத் தேர்தல்

## அலைதடுமாறும் தலைமைகள்



# முரசம்

## ஏமாற்றம் – தொடரமுடியாது!

***அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.***

தேர்தலுக்கு இன்னும் சில தினங்களே இடையிலுள்ளன. அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் வாக்காளர்களைத் தம்பக்கம் ஈர்த்தெடுப்பதற்காக பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னெப்போதும் இல்லாதளவு தேர்தல் தொடர்பான வன்முறைகள் மிகக் கூடுதலான அளவில் அதிகரித்து வருகின்றன. வேட்பாளர்கள் சிலரும் கொலை செய்யப்பட்டும் இருக்கின்றனர். வாக்களிப்பதற்கான ஒக்டோபர் 10ம் திகதிக்கிடையில் மேலும் என்னென்ன அசம்பாவிதங்கள் நடைபெறும் என்று எவராலும் கூற முடியாது.

தேர்தல் வன்முறைகள் தென்னிலங்கையில் அதிகரித்துள்ள அளவைப்போல் வட-கிழக்கு மாநிலத்தில் வன்முறைகள் அதிகமாகத் தலைகாட்டவில்லை. இருப்பினும் யாழ்குடா நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய மோதல்தான் மிக மோசமான நிலையினை உருவாக்கியுள்ளது. ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகளில் யாழ் வாழ் மக்கள் இடம் விட்டு இடம்பெயர்ந்து, சொல்லொண்ணாத் துயரங்களுக்கு ஆட்பட்டு வந்துள்ளனர். எண்ணற்ற உயிர்கள் பலியாக்கப்பட்டுள்ளன. கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் இழக்கப்பட்டுள்ளன. பரம்பரை பரம்பரையாகப் பேணிப் பாதுகாத்து வந்த அவர்களுடைய இருப்பிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு காடு மண்டிய பிரதேசமாக்கப்பட்டுள்ளன.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக பசியும் பிணியும் மக்களை வாட்டி வதைக்கிறது.

பொதுத்தேர்தலை அறிவித்து விட்டு, அரசாங்கமே புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட நவீன ஆயுதங்களையும் மேலதிகமான படையினரையும் கொண்டுபோய் யாழ்குடா நாட்டில் இறக்கி, விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்ட போர் தொடங்கியிருப்பதாக அறிவித்து வருகிறது.

இந்த நிலையில் வட மாநிலத்தில் பாராளுமன்ற ஆசனங்களைத் தம் வசமாக்கிக் கொள்ள, அங்கு போட்டியிடும் வேட்பாளர்களால் வாக்காளர்களை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்; வாக்குகளை எவ்வாறு யாசிக்க முடியும்? வடபுலத்தில் வாழும் மக்கள் மத்தளம் போல் இரு புறத்தாலும் அடிவாங்கி வருகின்றனர். இவர்களால் ஆரோக்கியமான முறையில் தேர்தலை எதிர்கொள்ளமுடியுமா?

இது இவ்வாறிருக்க, தேர்தலில் குதித்துள்ள அரசியல் கட்சிகள், தாமேதான் இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சனையைத் தீர்க்க சாதகமான திட்டத்தை வகுத்திருப்பதாக தம்பட்டம் அடித்து வருகின்றன.

இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் வாக்குகளைக் கவர்ந்திழுக்கவே இத்தகைய வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகிறார்கள் என்பது உண்மைதான்.

இருப்பினும், இம்முறை இடம்பெறும் தேர்தல், இனப்பிரச்சனையை எப்படியாவது தீர்த்துவைக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தப் போவதாகவே கருதக்கூடியதாக இருக்கிறது.

பொய்யும் புனை சுருட்டும் நீண்ட நாட்களுக்கு நீடிக்கப் போவதில்லை. சுதந்திரம் பெற்று கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஆட்சி பீடமேறிய அதிகார வர்க்கத்தார் சிறுபான்மையின மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளையே அளித்து வந்துள்ளனர். பிரச்சனை சற்றுக் கடுமையடையும் போது ஏதாவது சாக்குப் போக்கைச் சொல்லி சமாளித்துவிட்டு, ஆட்சியாளர்கள் தப்பித்து வந்துள்ளார்கள். இதன் விளைவை இன்று நாடு அறுவடை செய்கிறது.

பேரழிவுகள் இமயம் போல் இடம்பெற்று விட்டபின்னரும் தொடர்ந்து ஏமாற்றம் ஏற்படுவதை எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

சர்வதேச சமூகமும் இங்கு நடைபெற்று வந்த–நடைபெறுகின்ற–இனிமேல் நடைபெறப் போகின்ற சம்பவங்களை உன்னிப்பாகவே அவதானித்த வண்ணமே உள்ளது.


'சிலரை சிலகாலம் ஏமாற்றலாம்; பலரைப் பலகாலம் ஏமாற்ற முடியாது'.

இப்படியான ஒரு சூழ்நிலையில் இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் பொதுத் தேர்தலில் எத்தகைய தீர்ப்பை வழங்கப் போகிறார்கள்?

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.***

# ஆன்மீகம்



## மகத்தான பணி

மகத்தான பணியினை ஆற்ற வேண்டுமாயின் நீண்ட காலத்திற்கு இடையறாத முயற்சி பேரளவிற்குத் தேவைப் படுகிறது. இந்தப் பணியில் ஒரு சிலர் தோல்வி காணலாம். அதற்காக நாம் மனம் உளைய வேண்டியதில்லை. ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்கும் போது நடுநடுவே பலர்வீழ்ச்சியுறுவதும் பலதடைகள் ஏற்படுவதும் சகஜமே.

மேலும் பலப்பல இடையூறுகளும் இன்னல்களும் கூடவந்து சேரலாம். கூடவே நாளும், கோளும், நம்மைவந்து நலிவுறச் செய்யலாம். ஆனாலும் மனந்தளராது இறை நம்பிக்கையோடு எல்லாவற்றையும் எதிர்கொண்டு ஆன்மீகம் எனும் பெரு நெருப்பிலிட்டுப் பொசுக்க வேண்டும்.

இறைவனை நோக்கிச் செல்லும் பாதை மிகவும் செங்குத்தான, கரடுமுரடானது. ஆனாலும், இதில் சென்ற சிலர் தோல்வி கண்டு துவண்டுமுள்ளனர். தோல்விதான் வெற்றிக்கு இட்டுச் செல்லும் வாயிற்படி என்பதை மறவாமல் மீண்டும் ஆயிரம் இன்னல்கள் வந்து மோதினாலும், அவற்றின் நடுவே மனம் தளராது இறைநாமம் மறவாது பண்பாட்டை நிறுவவேண்டும்.

பூசகர் அரசரெத்தினம்–சேனையூர்–06.

## இஸ்லாம் வெறுக்கும் இலஞ்சம்!

இலஞ்சம் வாங்குவதற்கும் கொடுப்பதற்கும் இஸ்லாத்தில் இடமில்லை. எத்தனையோ இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறப்பான வருவாய் தரக்கூடிய தொழில்கள் எம்மத்தியில் இருந்தும், ஆகுமாக்கப்படாத இவ் இழிவான செயல்மூலம் பொருளீட்டி தானும் உண்டு தனது குடும்பத்திற்கும் உண்ணக் கொடுத்து தமது உடலை வளர்த்து உள்ளத்தைக் கெடுப்பவர்கள் நம்மில் எத்தனை பேர்? இப்படிப்பட்டவர்களுக்கே அல்லாஹ் தனது திருமறையில் இப்படிக் கூறுகிறான்.

"மனிதர்களே! பூமியில் உங்களுக்கு ஆகுமானதாக்கப்பட்ட தொழில்களிலிருந்து பெறப்பட்ட நல்லவற்றையே உண்டு, பிறருக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருள்களை தவறான முறையில் உண்ணாதீர்கள். (உங்கள் கட்சி பொய்யானதென) நீங்கள் அறிந்திருந்தும் (இதர மனிதர்களின் பொருள்களின்) எதனையும், பாவமான வழியில் விழுங்கிவிடும் பொருட்டு (இலஞ்சம் கொடுக்க) அத்துடன் அதிகாரிகளிடம் செல்லாதீர்கள்! ஷைத்தானின் அடிச்சுவட்டை பின்பற்றாதீர்கள். அவன் உங்களுக்கு பகிரங்க விரோதியாவான். இதனை அறிந்து நடப்போர் நிச்சயம் வெற்றியாளர்களே!" (அல்குர் ஆன் 2:188)

வை.எம்.தாஹிர்கரீம்–கல்முனை 06.

## தேவனால் மறக்கப்படுவதில்லை


சங்கீதம் 27:10

வாழ்க்கையில் நன்றி மறப்பது நல்லதல்ல. ஆனால் இன்று நன்றி மறந்த உலகமாகத்தான் இந்த உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் மனிதர்கள் மத்தியில் பொதுநலம் மறைந்து தன்னலம் தலை தூக்கி நிற்பதேயாகும்.

சகோதரனே, சகோதரியே, வாழ்க்கையில் மனுஷரால் ஏமாற்றப்பட்ட நிலையில் வாழ்கிறாயா? 'எல்லோரும் என்னைக் கைவிட்டுவிட்டார்கள்.' என்ற விரக்தி உங்கள் வாழ்க்கையில் இருக்கிறதா? நீ தேவனை விசுவாசித்தால் கவலை வேண்டாம். நீங்கள் தேவனால் மறக்கப்படுவதில்லை. ஒரு வேளை மனிதர்கள் உங்களை மறந்து போகலாம். ஆகவே நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள் ஏசாய, 2:22) தகப்பனும் தாயும் கைவிட்டாலும், கர்த்தர் உங்களைச் சேர்த்துக் கொள்வார். ஆகவே உங்கள் கவலைகள், விரக்திகள் எல்லாவற்றையும் கைவிட்டு, தேவன் மேல் உங்கள் முழு நம்பிக்கையையும் வையுங்கள். அப்பொழுது நீங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டோ, விரக்தியடைந்தோ போக மாட்டீர்கள். ஏனென்றால் நீங்கள் மனுஷரால். மறக்கப் படலாம், ஆனால் தேவனால் மறக்கப்படுவதில்லை.

வி.கமலா–கல்கிசை.

## கவிதைப் போட்டி இல.377



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 14.10.2000

கவிதைப் போட்டி இல.377
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.374



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### பாதுகாப்பு

பல உயிர்களை பலி எடுக்கும்
கடும் போரின் மத்தியிலும்
செல் வரும் வழி பார்த்துப் பார்த்து
மரத்தின் பின் மறைந்து நின்று
உயிரைக் காப்பாற்றி விட்டோம் என்றா,
எட்டிப் பார்த்து சிரிக்கின்றீர்கள்?

என்.ரதி–பொன்னாலை.

### சொன்னதும் சொல்வதும்!

பாரதி சென்னது
'ஓடி விளையாடு பாப்பா.....'
போரது சொல்வது
'.... ஒளிந்து விளையாடு பாப்பா'

அ.சந்தியாகோ–கண்டி.

### மரணம்!

வருகின்றது செல்
வன்னியை நோக்கி
மரத்தில் மண்டையை
மறைக்காவிட்டால்
மரணம் மழலைகள் இங்கே!

ப.அம்பிகாபதி–மன்னார்.

### உதிர்ந்த நாட்கள்

கண்ணி வெடியின் தாகத்திற்கு
காலொன்றை தானம் கொடுத்துவிட்டு,
சிறு வயதில் மலர்ந்த காலத்தை
மீட்டிப்பார்க்கும் பெரும்
தியாகி நான்!

ஏ.எச்.முஹமட் அனீத்–
புதிய காத்தான்குடி–03.

### புலரட்டும்!

பொதியும் புதைச் சாச்சி
வெண்டாமரையும் சிவப்பாச்சி
அரசியல் திட்டமும் அழுகியாச்சி
வாழ்வோ அனலாச்சி
புரியாத நீ புன்னகைத்திரு...
புலரட்டும் நின் காலமாவது!

மா.மோகனா–மஸ்கெலியா.

### விளையாட்டு அல்ல

அவர்கள் பட்டாசு வெடிக்கவில்லை.
வெடிகுண்டு வைக்கிறார்கள்
விலகி ஓடு!

கு.பிரசாந்தி–மாத்தளை.

### இது நேரமில்லை!

ஓடி ஒளிந்து விளையாட
இது நேரமில்லை!
யுத்தத்துக்கு போன
உங்கள் அப்பா இன்னும்
வீது வந்து
சேரவில்லை!

ஷிபானா ஹாரிஸ் அலி–
வளவ்வத்தை

### தேர்தல்

எந்தக் கட்சி
ஆட்சிக்கு வரும்?
சமாதானம் எப்பவரும்?
ஏமாற்றம் தான் வரும்
பார்த்திரு குழந்தாய்!

எஸ்.பி.பாலமுருகன்–
பதுளை.

### தஞ்சம்...!!

ஓடி விளையாடும் பாப்பாவொன்று
ஒளிந்து நிற்பதோ எதற்கு–இன்று?
நாடு முழுவதும் சண்டை; எமக்கு
காடு மட்டுமே தஞ்சம்–என்கிறது!!

சிவம்–குருக்கள்மடம்.

### சாதி

பிரிந்து வாழும் குணங்கள்
கொண்டதில்லை சாதி!
கூடிவாழும் இயல்பு
கொண்டது மனிதசாதி
புரிந்து கொண்டிவ்வுலகில்
வாழ்வதே நல்லசாதி!

கரன்–புத்தளம்.

### விதி

மறைத்துப் பார்ப்பதின்
மர்மமென்ன மக்காள்?
'தலை மறை'வென்பது தமிழன்
தலைவிதி தானே! புதிதா?

எம்.நிரஞ்சுலா தேவி–
மொனராகலை.

### வெட்கம் வேண்டாம்!

மரம் ஒட்டி எட்டிப் பார்க்கும்
குட்டித் தங்கைகளே!
சிறைசென்ற உம் அண்ணன் தானே
வருகின்றேன்! வெட்கம்வேண்டாம்
வெளியே வாருங்கள்!

சி.சசிதரன்–கொழும்பு–13.

# வாசக[ர்]சாலை

இனிய தமிழ் முரசே!

தமிழ் வளர, தமிழ் எழுத்தாளர்கள் பெருக முரசே! நீ செய்யும் சேவை அளப்பரியது. ஆக்கங்களை அனுப்பிவிட்டு 'வியாழன் வரும், தினமுரசு வரும்', என எதிர்பார்த்துக் காத்திருக்கும் புதிய எழுத்தாளர்கள் எத்தனை பேர்? தனது ஆக்கம் தினமுரசில் பிரசுரமாகி இருந்தால் 'கலங்கரை விளக்கினைக் கண்டு கப்பலோட்டி எவ்வளவு சந்தோசம் அடைகின்றானோ!' அது போன்ற சந்தோசம் அடையும் எழுத்தாளர்கள் எத்தனை பேர்? ஆனால் தொடர்ந்து ஆக்கங்களை எழுதிவிட்டு பிரசுரமாகவில்லையே! என்று மனம் தளர்ந்து எழுதுவதையே! நிறுத்தி விட்டவர்கள் எத்தனை பேர்? இவர்களுக்கு தினமுரசு ஆசிரியர் தரும் பதில் என்ன? நான் கவிதைப் பகுதிக்கு பல கவிதைகளை அனுப்பியும் ஒன்றுகூட பிரசுரமாகவில்லை. இது ஏன்? என் போன்ற இன்னும் எத்தனைபேர் இருக்கலாம். அவர்கள் சார்பாகவும் என் வினாவுக்கு விடை தரவும். தினமுரசின் 'கடி ஜோக்ஸ்' பகுதியில் வாசகர்களின் ஆக்கங்களுக்கும் இடம் கொடுத்தால் என்ன?

ரீ.குணவர்த்தன–களுவாஞ்சிக்குடி.

**உங்கள் ஆக்கங்கள் முரசில் இடம் பெறுவதுண்டல்லவா? கவிதைகள் பிரசுரமாகவில்லையே.. என்ற கவலை வேண்டாம். எத்தனையோ வாசகர்–எழுத்தாளர்களுக்கும் இடம் தர வேண்டியது முரசின் கடமை. தொடர்ந்து எழுதுங்கள்–இடம்பெறும்!**


**–ஆசிரியர்–**

முரசு ஆசிரியருக்கு!

உங்களது ஆக்கங்கள் தரமாக உள்ளன. ஆனாலும், இன்னும் முன்னேற இடமுண்டு 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' என்ற தொடர் உட்பட ஓரிரு ஆக்கங்கள் (சந்திக்கு வராத செய்திகள்) 'அமரர் ஆசிரியர் அற்புதன்' அவர்களின் மறைவிற்குப் பின்னர் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவை மீண்டும் மலர வேண்டும் என்பதே எம(ன)து விருப்பமாகும். அத்துடன் 'அடக்கு முறைக்கு' உட்பட்டு 'விடுதலை' பெற்ற நாடுகளின் வரலாறுகள் இடம் பெறுவது வரவேற்கத்தக்கது. பாதுகாப்பு நிலவரங்கள் சற்று விறுவிறுப்பாக அமைந்தால் நல்லது. மற்றும் சிறுவர்களுக்கு 'பாப்பா முரசு' போன்று உயர்வகுப்பு மாணவர்களுக்கான சமகாலத்தில் கட்டாய தேவையாகவுள்ள நடைமுறை விடயங்கள், 'சினிமாப் பகுதியில் வாரமொரு பாடல், என்பன இடம்பெற்றால் இன்னும் முரசின் தரம் மேன்மைபெறும் என்பதே எனது கருத்தாகும்.

கா.சீலன்–கிளிநொச்சி.

மலரும் மல்லிகையில் மணக்கும் தினமுரசுக்கு,




சூரியன் உதித்தால் தான்
உலகுக்கு வெளிச்சம்;
இரவு வந்தால் தான்
நிலவுக்கு வெளிச்சம்;
தினமுரசு பார்த்தால் தான்
எங்கள் மனதிலும் வெளிச்சம்!

கடல் கடந்து உழைக்க வந்தேன். பிறந்த நாட்டிலும் வாரம் தோறும் உன்னை தவறவிடமாட்டேன். கடல் கடந்து வந்தும் நீ வரும் நாளை எதிர்பார்த்திருப்பேன். தவறிவிட்டால் என் உயிர் நாடி நின்று விட்டதுபோலாகிவிடும். நீ என் உயிர் தோழனாகிவிட்டாய். முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களையும் படித்து அறியாதவைகளையும் அறியவைத்தாய். அதன் பெருமை உன்னையே-சாரும். 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அலசுவது இராஜதந்திரி', 'செய்திச் சிதறல்', 'ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி எஸ்.டி.எஸ்.சிவநாயகம்' போன்ற அனைத்தும் உன்னைப் புகழ வார்த்தை ஏது உண்டு? 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி திசாநாயக்கா வரை' தொடர்ந்து எழுதி நிறுத்தி விட்டாய். 'புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்' என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதி அதையும் நிறுத்தி விட்டாய். என் போன்ற அறியாத உள்ளங்கள் அறிய உனது சேவை தொடரட்டும் என் உயிர் நண்பனே! வளர்க உன் பணி.....

பி.பி.தேவி–குவைட்.

**மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074–514282
தொலை நகல் (Fax):– 074-513266**





என் அபிமான முரசே!

நீ கொண்டு வரும் அத்தனை அம்சங்களும், பிரமாதம்தான். ஆனால் தவிர்க்க முடியாமல் ஓரிருவர்கள் உன் உடலில் வீணானவைகளையும் புகுத்தி விடுகின்றார்கள். அது உன் குற்றமில்லை. இருப்பினும் தவறான கருத்துக்களை கொண்ட ஆக்கங்களை எழுதுபவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவ்வாறான ஒரு தவறான கருத்தைக் கொண்ட கவிதையை 'தேன் கிண்ணம்' பகுதியில் கடந்த 373வது முரசில் (10-16, 2000) 'காலத்திற்கேற்ற காதல் இது' என்ற கவிதையில் டி.எம். பைசல் (கரும்பை) அவர்கள் கவிதையின் கடைசி வரியில் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற காலம் கடந்து 'ஒருத்திக்குப் பலர்' என்று உருவாகும் காலமடா! என எழுதியிருந்தார். இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது. முரசில் பிரசுரமாக வேண்டும்! என்பதற்காக எதை வேண்டுமென்றாலும் எழுதுவதா? அவருக்கு ஒரு பெண்மீது வெறுப்பு இருக்கலாம்; அதற்காக எல்லா பெண்களையும் சேர்த்து 'ஒருத்திக்கு பலர்' என்று பெண்களை இழிவு படுத்துவது மிகவும் மோசமானது. ஏன் எல்லா பெண்களும் பலருடனா வாழ்கிறார்கள்? இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம். எந்த ஓர் ஆக்கமும் எவரையும் பாதிக்கும் படியாக அமையக்கூடாது. ஆனால் இவர் பெண் குலத்திற்கே பெரும் இழிவை உண்டாக்கி விட்டார். முரசின் வாசகர்களுக்கு இதன் மூலம் நான் தெரிவிப்பது என்னவென்றால், இனியாவது ஒருவரும் இப்படியான தவறுகளை விடவேண்டாம் என்பதேயாகும். இன்னும் இப்படியான ஆக்கங்களை இடம்பெறவைத்து முரசை மாசு படுத்த வேண்டாம் என முரசு அதிகாரிகளுக்கும் நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். தவறுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் தான் முரசு மேலும் வளர்ச்சி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

த.சுஜாதா–கொழும்பு–13.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# தமிழ் பேசும் மக்கள் யாருக்கு வாக்களிப்பது?

## தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய நிலைப்பாடு!

இன்றைய சூழ்நிலையில் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் இடம்பெறும் பொதுத் தேர்தலில் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்கள் எவ்வாறு வாக்களிக்கப் போகிறார்கள் என்பதே கேள்விக் குறியாக இருக்கிறது.

'இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களுக்கு எத்தகைய உரிமையும் கிடையாது, அவர்கள் எத்தகைய உரிமையையும் கோருவதற்கு அருகதையற்றவர்கள்' என்று பேரினவாதிகள் உச்சஸ்தாயியில் கூக்குரலிடுகின்றனர்.

அவ்வாறிருந்தும் இந்த நாட்டில் பண்டு தொட்டு வாழ்ந்து வரும் சிறுபான்மை மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பெரும்பான்மையின அரசியல்வாதிகள் இல்லாமலில்லை.

இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சி பீடமேறும் இரு பெரும் கட்சிகளான ஐக்கியத் தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றையொன்று எவ்வாறு தாக்கி அடக்கி ஒடுக்கலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றன. சிறுபான்மையினருக்காக ஏதாவது செய்தாக வேண்டும் என்று ஒரு கட்சி திட்டமிட்டால், மற்றக் கட்சி அவர்களுக்கு துரோகப்பட்டம் சூட்டி சிங்கள இனத்தையும் பௌத்த மதத்தையும் சீரழிக்கிறார்கள் என்று கூக்குரலிட ஆரம்பித்து விடுகிறார்கள்.

இத்தகைய நிலையிலும் சிறுபான்மையினத்தவரின் அபிலாசைகளை ஓரளவாவது தீர்த்து வைக்க வேண்டும் என்று சில தலைவர்கள் துணிவுடன் செயலில் இறங்கியும் வருகின்றனர். "இத்திட்டத்துக்கு அனுசரணையாக இருப்போம்" என்று போலித்தனமான குரல் கொடுத்துவிட்டு, இறுதியில் பின் கதவால் வெளியேறி நின்று 'காட்டிக் கொடுக்கும் கயவர்கள்' என்று கொக்கரிப்பதையே கண்கூடாகக் காண்கிறோம்.

இந்த இரு கட்சிகளையும் தவிர, பெரும்பான்மையின மக்கள் மத்தியில் இன்று வாக்குச் சேகரிக்கும் எந்தக் கட்சியிடத்திலும் உருப்படியான திட்டம் எதுவும் கிடையாது.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய வாக்குகளை எவ்வாறு பயன்படுத்தப் போகிறார்கள்?

தமிழ் பேசும் மக்களிடம் வாக்குச் சேகரிக்க முன்வரும் கட்சிகள் எவற்றுக்கும் தனியாக நின்று இந்த நாட்டின் ஆட்சியுரிமையைப் பெறும் வாய்ப்பு ஏற்படப் போவதில்லை. எனவே பெரும்பான்மை கட்சி ஒன்றுடன் சேர்ந்துதான் செயற்பட்டு தமது அபிலாசைகளை வென்றெடுக்க வேண்டும். சிறுபான்மையின மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி அவர்களுக்கும் இந்த நாட்டில் சம உரிமையுடன் வாழும் யோக்கியதை இருக்கிறது என்று உறுதியாக நின்று, அதற்கேற்ற திட்டங்களை வகுத்து திடமான நடவடிக்கை எடுக்க எவர் முன் வருகிறார்களோ அவர்களுடன் இணைந்து செயற்படுவதைவிட வேறு மார்க்கம் எதுவுமில்லை.

எனவே தீர ஆலோசித்து தங்களுடைய பொன்னான வாக்குகளை எவ்வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதைச் சிந்தித்து செயலாற்ற வேண்டிய கட்டாயத்தில் தமிழ் பேசும் மக்கள் இன்று நிற்கிறார்கள். ■

## புலிகளின் தாக்குதலில் பொதுமக்கள் சாவதற்கு

## சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்!

திருமலை மாவட்டத்திலுள்ள மூதூரில் ஒக்டோபர் 1ம் திகதியன்று இடம் பெற்ற குண்டுத்தாக்குதலின்போது 29 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிப் பொதுமக்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அப்பாவிப் பொதுமக்கள் எக்காரணமுமின்றி படுகொலை செய்யப்படுவதை சர்வதேச மன்னிப்புச்சபை வன்மையாகக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது. இத்தகைய செயல் மிலேச்சத்தனமானது என்று கூறும் மன்னிப்புச்சபையின் அறிக்கை இத்தகைய செயலில் ஈடுபடும் எவரும் வன்மையாக்க கண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் வலியுறுத்தியிருக்கிறது.

மூதூரிலுள்ள கலாசார நிலையத்தின் அருகில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் கலந்துவிட்டு வெளியேறிய பொதுஜன முன்னணி வேட்பாளர் எம்.பைதுல்லா அவர்களை இலக்கு வைத்தே விடுதலைப் புலிகளால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. இவர் பொலிஸ் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவில் ஒரு நிபுணராகச் செயற்பட்டுள்ளார் என்றும் விடுதலைப் புலிகளுக்கெதிரான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார் எனவும் கூறப்படுகிறது. தேர்தலில் போட்டியிடுவதற்காகவே பைதுல்லா பொலிஸ் சேவையிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

இந்தக் குண்டுவெடிப்பின் போது காயமடைந்த 50க்கும் மேற்பட்டோரும் அப்பாவிப் பொதுமக்களே என்று தெரியவருகிறது. இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் கண்டன அறிக்கை செவ்வாய்க்கிழமை காலை வெளியிடப்பட்டுள்ளது. ●

## பிரதியமைச்சர் தாக்குதல்களில்

## எழுந்துள்ள சந்தேகங்கள்!

பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா மீது 24 மணி நேரத்துக்குள் இருதடவைகள் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, அவர் கலந்து கொள்வதாயிருந்த சகல பொது நிகழ்ச்சிகளும் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டன என்று தெரிகிறது.

மட்டக்களப்பு, பொலன்னறுவை மாவட்ட எல்லையிலுள்ள கடவத்தமடு என்ற இடத்துக்குச் சென்றுவிட்டு, பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா ஏறாவூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது கோரகல்மடு என்ற இடத்தை அண்மிக்கும்போது வீதியின் குறுக்கே மாடுகள் பாய்ந்தன. இதனால் பிரதியமைச்சர் சென்ற வாகனம் வேகத்தைத் தணித்தது. மழையும் பெய்தமையினாலும் மாலை வேளையானமையினாலும் போதுமான வெளிச்சம் இருக்கவில்லை.

பிரதியமைச்சர் குண்டு துளைக்காத மோட்டாரில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவ்வண்டியின் முன்னும் பின்னும் ஜீப் வண்டிகளில் பொலிஸார் பாதுகாப்பாகச் சென்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் முன்புறம் சென்ற ஜீப் வண்டி குறிப்பிட்ட இடத்தைத் தாண்டியதும் திடீரென வீதிக்குப் பாய்ந்த ஆயுததாரிகள் தனது வண்டியை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர், என்று பிரதியமைச்சர் தெரிவிக்கிறார்.

வண்டியின் முன் கண்ணாடி மீதும் துப்பாக்கிக் குண்டுகள் சுடப்பட்டபோதும் கண்ணாடிக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. இச்சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமர் 750 மீற்றர் தூரத்தில் கிரிமுட்டி இராணுவ முகாம் அமைந்திருக்கிறது. ஹிஸ்புல்லா மீது அடுத்த தாக்குதல் இரண்டாம் திகதி திங்கட்கிழமையும் நடைபெற்றிருக்கிறது. அவர் அம்பாறை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தபோது களுவாஞ்சிக்குடியில் வைத்து குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தெருவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் வண்டியில் பொருத்தப்பட்டிருந்த குண்டை வெடிக்க வைத்தே இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இவ்விரு சம்பவங்களிலும் அதிஷ்டவசமாக பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா உயிர்த்தப்பியிருக்கிறார். இவ்விரு தாக்குதல்களையும் விடுதலைப் புலிகளே நடத்தியிருக்கலாம் என்று பரவலாக நம்பப்பட்டபோதிலும், பிரதியமைச்சர் மீது பல தனிப்பட்ட அரசியல் காரணங்களுக்காகவும் வேறுசில சக்திகள் இத்தாக்குதல்களைத் திட்டமிட்டிருக்கலாம் என்ற ஐயப்பாடும் எழுந்திருக்கிறது.

அமைச்சர் மீது இடம்பெற்ற இரு தாக்குதல்களிலும் அவருடைய பாதுகாப்புக்குப் பொறுப்பாயிருந்த பொலிஸ்காரர்களே படுகாயமடைந்துள்ளனர். ●

## ஐ.தே.க.வின் சூழ்ச்சியே

## புலிகளின் புதிய தாக்குதல்கள்!

கடந்த வருடம் வன்னியில் தேர்தல் சமயத்தின்போது புலிகள் பாரிய தாக்குதலைத் தொடுத்து அரசாங்கப் படைகள் கைப்பற்றியிருந்த நிலப்பரப்பை மீண்டும் தம் வசமாக்கிக் கொண்டனர்.

அப்பொழுது ஐ.தே.க.கட்சிக்கு ஆதரவான இராணுவ உயரதிகாரிகளின் ஆதரவுடனேயே புலிகள் அரசாங்கப் படைகளுக்கெதிராக பாரிய தாக்குதலைத் தொடுத்தனர்.

தற்சமயமும் புலிகள் வடபகுதியில் படையினருக்கு எதிராக யுத்தத்தைத் தொடங்கியுள்ளனர். நடைபெறப்போகும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு வெற்றியைத் தேடிக் கொடுப்பதற்காகவே புலிகள் இவ்வாறான தாக்குதலைத் தொடுத்து வருகின்றனர்.

இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணியின் செய்தித் தொடர்புப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, ஓயாதஅலைகள்-4 தாக்குதல் தேர்தலைக் குழப்புவதற்காக ஐ.தே.கட்சியின் சூழ்ச்சியுடன் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர். ஐ.தே.க ஏற்கெனவே புலிகளுடன் இரகசியமான ஒப்பந்தத்தைச் செய்துள்ளனர் என்பதையே இது காட்டுகிறது.

ஐ.தே.க.கட்சிக்கும் புலி இயக்கத்திற்குமிடையே உள்ள தொடர்பின் மூலம் சதித்திட்டங்கள் தீட்டப்பட்ட விபரங்கள் மூலம் வெளியாகியுள்ளன. ஐ.தே.க தலைவர்களில் ஒருவராக இருந்த ஜெனரல் லக்சி அல்கம வவுனியாத் தாக்குதல் சம்பவத்தின்போது புலிகளுடன் தொடர்பு வைத்திருந்து சதியில் ஈடுபட்டது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் தென்பகுதித் தேர்தல் வெற்றிகளை இலக்காகக் கொண்டு வடபகுதித் தாக்குதல்களை படையினரே முந்திக் கொண்டு தொடங்கினர் என்பது சகலரும் அறிந்ததே.

ஆனால் புலிகளே ஓயாதஅலைகள்-4 எனும் வடபகுதித் தாக்குதல்களை முந்தித் தொடங்கினர் என்றும் அது ஐ.தே.கட்சியின் சூழ்ச்சிதான் என்றும் இப்பொழுது சிங்கள மக்களிடம் அனுதாபம் தேடுகிறார்கள் என்று ஐ.தே.கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர்.

பொதுத் தேர்தல் தினத்திற்கு முன்னர் யுத்த முனையில் பாரிய இழப்புகளைச் சந்திக்க வேண்டி வரும் என்றுழ் இது தேர்தல் செய்திகளிலும் பின்னடைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவதானிகள் கருதுகிறார்கள். ■

## மட்டக்களப்பில் தமிழர் பிரதிநிதித்துவம் நிலைக்குமா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை தேர்தலில் 168 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். இவர்களுள் பல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த கிட்டத்தட்ட 100 தமிழ் வேட்பாளர்களும் ஏறத்தாழ 30முஸ்லிம் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் இரண்டு இலட்சத்து 75 ஆயிரம் பதியப்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். இதில் கணிசமான தொகையினர் விடுதலைப் புலிகளின் வசமுள்ள படுவான்கரை பிரதேசத்தில் உள்ளனர். இவர்கள் இம்முறை தேர்தலில் தங்கள் வாக்குகளை அளிக்க முடியாத நிலை ஏற்படும்.

இந்த ரீதியில் வாக்குகள் பாரதூரமாகப் பிரிந்து போக வேண்டிய நிலையேற்படும் சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதன் பயனாக இம்முறை தேர்தலில் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவம் குறையக்கூடும்; அல்லது முற்றாகவே இல்லாமல் போகக் கூடிய சூழ்நிலை கூட உருவாகலாம் என்று அவதானிகள் அஞ்சுகின்றனர். ■

## மூதூரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்

## வேட்பாளருக்கு முன்பே தெரிந்திருந்தது?

கடந்த திங்கள் மாலை (02.10.2000) 6.30 மணியளவில் மூதூரில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் பொது ஜன முன்னணி வேட்பாளர் எம்.எல்.பைத்துல்லா உட்பட 19 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் இருவர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டவர்களின் தொகை 24 ஆக உயர்ந்துள்ளது. சுமார் 40 பேர் திருகோணமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் ஹஸன் என்ற உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரும் அமீர் என்ற கான்ஸ்டபிளும் அடங்குவர்.

பைத்துல்லாவுக்கு ஆதரவு கொடுக்கும் முகமாக மூதூர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற கூட்டத்தையடுத்தே இச்சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தனக்கு நேரவுள்ள ஆபத்தை முன் கூட்டியே தெரிந்து கொண்ட வேட்பாளர் பைத்துல்லா விரைந்து கூட்டத்தை முடித்துக் கொண்டு, அடையாளம் காணப்படாதிருக்க வேறொருவரது முச்சக்கரவண்டியொன்றில் ஏறி அமர்ந்தபோது இத்தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

பைத்துல்லாவுக்கு உதவியாக இருந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரும் அவருடன் முச்சக்கர வண்டியில் ஏறிக் கொண்ட போது விரைந்து வந்த குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்ததாகக் கூறப்படுகிறது. பைத்துல்லா புலனாய்வுத்துறை அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதும் பொதுச் சேவையின் பொருட்டு கடந்த வருடம் பதவியை விட்டு விலகியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தையடுத்து மூதூர் நகரில் பதற்ற நிலை காணப்படுகிறது. மூதூர் நகரில் உள்ள தமிழர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி அந்தோனியார் ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை மூதூர் நகரில் முழுமையாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. திருகோணமலை நகரில் முஸ்லிம்கள் நெடுங்காலமாக வாழும் பகுதிகளில் சோகநிலை காணப்பட்டது.

வேட்பாளர் ஒருவர் பெரும் தொகையானோருடன் பலியானது வடக்கு கிழக்கில் இதுதான் முதற்தடவை என்பதும் இலங்கையில் வேட்பாளருடன் சேர்ந்து இச்சம்பவத்தில் தான் அதிக எண்ணிக்கையானோர் பலியானது என்பதும் குறிப்பிடத்தக்கது. ■

## தொங்குபாலத்தால் ஏற்படும் தொல்லைகள்?

ஊபென்னத், தம்பவின்ன, ஊபென்னத் மேற்பிரிவு போன்ற மூன்று தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வெலிமடைப் பகுதிக்குப் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட மற்றும் சகலரும் தமது அனைத்துத் தேவைகளுக்கும் ஒன்றரை மைல் தொலைவிலுள்ள வெலிமடை நகருக்குத் தொங்கு பாலத்தின் வழியாகச் செல்லவேண்டியுள்ளது.

20 அடி நீளத்தில் போடப்பட்டுள்ள இந்த மரத் தொங்குபாலம் உறுதியிழந்து காணப்படுகிறது. மழைக் காலத்தில் எவருமே பயணம் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. இந்த மரத் தொங்கு பாலம் கூட மக்களின் சிரமதானத்தின் மூலமே அமைக்கப்பட்டது.

இந்தப் பாலத்தின் வழியாகப் பயணம் செய்த மூன்று பாடசாலைப் பிள்ளைகள் தவறி விழுந்துள்ளார்கள்.

இப்பகுதித் தோட்டப் புற ஏழை மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டும் அரசியல்வாதிகள் வருகிறார்கள்.

லந்தேகமவில் போடப்பட்டுள்ள தொங்கு பாலத்தையும் மக்களின் போக்குவரத்துச் சிரமங்களைப் பற்றியும் யாரும் கவனிப்பதில்லை என்று குறை கூறப்படுகிறது. ●

## மட்டக்களப்பு முஸ்லிம் பகுதிகளில்

## பிரதேச விரோதப்போக்கு பரவுகிறது!

"மட்டக்களப்பு-கல்குடாத் தொகுதி முஸ்லிம்களுக்கு எம்.பி. ஒருவர் தேவை" என்ற கோஷத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதேச வாதப்போக்கு மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கிடையில் குரோத உணர்வையும் பிரிவினையையும் வளர்த்து விட்டிருப்பதாக அப்பிரதேச முஸ்லிம் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இலங்கை வரலாற்றில் ஓட்டமாவடி வாழைச்சேனைப் பகுதிகளிலிருந்து ஒரு முஸ்லிம் பிரதிநிதிதானும் பாராளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை. அதற்குப் பதிலாக செங்கலடி, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடிப் பிரதேசவாசிகளே எம்.பி.க்களாக தெரிவாகி வந்தனர். இந்தச் சரித்திரத்தை இம்முறை மாற்றவேண்டும் என்றும் ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்தவருக்கு மாத்திரமே அப்பிரதேச முஸ்லிம்கள் ஏகமனதாக வாக்களிக்க வேண்டும் என்ற ஒரு தீவிரப்போக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

வேறு பகுதிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் யாரும் தமது பிரசார நடவடிக்கைகளுக்காக ஊருக்குள் நுழையக் கூடாது! என்றும் பிரதேச விரோதப் போக்கு கிளப்பி விடப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இப்பிரதேசங்களுக்குச் சேவைசெய்த வேறு பிரதேச அரசியல் பிரமுகர்களை மாற்றுக் கருத்துக்கு இடமின்றித் தடுத்திருப்பது பகைமையை வளர்க்கும் செயல். வெறும் அரசியல் இலாபத்தை மாத்திரம் கருதி சமூக ஒற்றுமையைப் புறக்கணித்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்தத் தீவிரப்போக்கு ஊர்ப் பகைமையை வளர்த்து விடும். இது மிக்க வேதனைக்குரியது என்றும் சமூக நல விரும்பிகள் வேதனை வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய நிலைப்பாட்டினால் ஓட்டமாவடி-வாழைச்சேனை, முஸ்லிம் பிரதேசங்களில் வேறு பிரதேச அரசியல்வாதிகள் எவரும் தேர்தல் பரப்புரைகளுக்காக ஊருக்குள் நுழையவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ■

## முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சி மீது கூறும் புகார்

"அமைச்சர் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் அவரது அமைச்சுப் பதவியைக் கேட்டு கேட்டு அலுத்துப் போனோம். 4 மணித்தியாலங்களுக்கு மேலாகக் கூட காத்திருந்தோம். அரசிடமிருந்து உரிய கௌரவம் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அதன் பிரதி பலனை எதிர்வரும் பொதுத் தேர்தலின்பின் பொதுசன ஐக்கிய முன்னணி அனுபவிக்க நேரிடும்.

முஸ்லிம் சமூகத்தின் சுய கௌரவம் பாதிக்கப்படும் பட்சத்தில்-தமிழ் சமூகத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவும் அனுசரணையும் வழங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயார்!"

இவ்வாறு 02.10.2000 அன்று ஏறாவூரில் நடைபெற்ற தே.ஐ.முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் இணைத் தலைவரான றவூப் ஹக்கீம் தெரிவித்தார். ●

## சீமெந்து கேட்கும் சீருடையினர்

மட்டக்களப்பு-செங்கலடி கறுப்புப் பாலத்தடியில் உள்ள சீருடையினர் செங்கலடியிலுள்ள வர்த்தகர்களிடம் சீமெந்துப் பக்கற்றுகள் வாங்கித் தருமாறு கட்டாயப் படுத்துவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதனை மறுத்தாலோ எதிர்த்தாலோ தாம் திட்டமிட்ட பழிவாங்கல்களுக்கு ஆளாக வேண்டி வரும் என்பதால் இந்த வேண்டுகோளுக்கு யாரும் மறுப்புத் தெரிவிப்பதில்லை என்றும் கூறப்படுகிறது. மேலிடத்திற்கு இதனை முறைப்பாடு செய்து தம்மை இனம் காட்டிக் கொள்ள யாரும் முன்வராமையால், பலாத்காரமாக சீமெந்துப் பக்கற் கேட்கும் அதிகாரம் தொடர்கிறது.

பொது மக்களுக்கான தேவைகளுக்காகத் தான் இவைகள் பெறப்படுகின்றன என்றும் சீருடையினரால் காரணம் கூறப்படுகிறதாம். ஆனால் அது வெறும் கதைகளே என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வியாபாரியிடமிருந்து 5 சீமெந்துப் பக்கற்றுக்கள் வீதம் கேட்கப் படுகிறதாம்.

# திருமலை மீனவர்களுக்கு ஏற்பட்ட பெரும் துயரம்!

(திருமலை நிருபர்)

திருகோணமலை கடற்பரப்பில் கடந்த 22ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அநர்த்தமொன்றில் 6 மீனவர்கள் கொல்லப்பட்டார்கள். காயமடைந்த மற்றும் 6 மீனவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றும் நால்வர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதே பகுதியில் இதே காலத்தில் இதே பிரதேசத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேறு பல மீனவர்கள் பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை.

கொல்லப்பட்ட மீனவர்களில் ஆக இருவர் மட்டுமே தமிழர்கள். காயப்பட்டவர்கள் உட்பட ஏனைய அனைவருமே பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் என்று தெரிய வருகிறது.

திருமலை துறைமுகத்தை அண்டிய ஒரு குறிப்பிட்ட கடற்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வலயத்திற்குள் சென்று மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருந்த அப்பாவி மீனவர்களே கடற்படையினரின் தாக்குதலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். மீனவர்களுடன் விடுதலைப் புலிகளும் ஊடுருவி நாசம் விளைவிக்கப் போகிறார்கள் என்று கருதியே கடற்படையினர் முன்னெச்சரிக்கையாக தாக்குதல் நடத்தி உள்ளனர். என்று கடற்படைத்தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட இக்கடற் பிரதேசம் கற்பாறைகள் சூழ்ந்திருப்பதனால், மீன்பிடித்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கடற்பிரதேசத்தில் போதுமானளவு மீன் பிடிபடுவதில்லை. இதன் காரணமாக சில மீனவர்கள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கும் சில வேளைகளில் சென்று மீன் பிடித்து வருவது வழக்கம். இது தவிர போதுமான வெளிச்சமின்மையால் எல்லை தெரியாமல் சில மீனவர்கள் பாதுகாப்பு வலயத்திற்குள் சென்று விடுகின்றனர். இவ்வாறிருக்க இப்பிரதேசத்தில் புலிகள் எந்தக் காலத்திலும் ஊடுருவ முடியாது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலைக் கடலில் போதுமான மீன்பிடிபடாதமையினால் வறுமையில் வாடும் அப்பகுதி மீனவர்களுக்கு வெள்ளிக்கிழமையன்று இடம்பெற்ற விபரீதம் மேலும் துயரத்தைத் தந்திருப்பதனால் மீனவர்கள் பெருங் கவலையுடன் அழுது புலம்பிய வண்ணமுள்ளனர்.

# வினை விதைத்த கூட்டணி தினை அறுவடை செய்யலாமா?

## கனடா இளைஞர்கள் கேட்கும் கேள்வி

அன்று வினையை விதைத்தவர்கள் இன்று தினையை அறுவடை செய்யப் போவதாக அறை கூவுவது விந்தையான செயலாக இருக்கின்றது.

"ஆயுதங்களை ஏந்தித் தேர்தல்களில் நிற்கும் இளைஞர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும்!" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி அரசாங்கத்தை வற்புறுத்துவதாக சிலவாரங்களுக்கு முன்னர் லண்டன் மாநகரிலிருந்து ஒலிபரப்பாகும் ஒரு வானொலிச் செய்தியில் கேட்ட எமக்கு வியப்பாக இருந்தது.

கூட்டணியினரின் சந்தர்ப்பவாதத்தை இதிலிருந்து தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இன்று கூட்டணி வேட்பாளராக வடபுலத்தில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர்களிலொருவர் கடந்த காலங்களில் வன்னியில் ஆடிய ஆட்டங்களை அவர் மறந்திருக்கலாம். ஆனால் இடம் பெயர்ந்து கனடாவில் வாழும் எம் போன்றவர்கள் நிச்சயமாக எம் வாழ் நாளில் மறக்க மாட்டோம்.

தங்கள் அரசியல் எதிரிகளைச் சங்காரம் செய்வதற்காக போராளிகள் என்ற பெயரில் ஒரு காடையர் கூட்டத்தை வைத்துக் கொண்டு அவர் ஆடிய ஆட்டம் ஒன்றா, இரண்டா? எங்களிடம் எதுவும் தப்பாமல் விபரமாக பட்டியலிடப்பட்டு பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது. தனது அரசியல் வைரிகளான சூரியர்களையும் ஒழித்துக் கட்ட எத்தனை அடாவடித்தனங்களைச் செய்துள்ளார். 1972ம் ஆண்டளவில், சீன சார்பு கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த 12 இளைஞர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு ஒரு வருடகாலம் அவர்களைக் கொண்டு எத்தனையோ ஆட்டங்களை ஆடினார். அன்றிலிருந்தே தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஆயுதக் கலாசார விதை தூவப்பட்டது. ஆரம்பகாலத்தில் கூட்டணியினரே ஆயுதக் கலாசாரம் வேரூன்ற நீரிறைத்து பசளையிட்டு பெருவிருட்சமாக வளர உதவினர். அவர்களால் வளர்க்கப்பட்ட கடாக்கள் அவர்கள் மீதே பாய்ந்தது உலகமறிந்த இரகசியம்.

ஆயுதக்கலாசாரத்தை விதைத்துவிட்டு எண்ணற்ற இளைஞர்கள் பலியாவதைக் கண்டும் கேட்டும் சகிக்க முடியாத நிலையில் ஆயுதக் கலாசாரத்தை வளர்த்தவர்கள் நாட்டை விட்டே ஓடிச் சென்று தலைமறைவாக வாழ்ந்தனர். மக்கள் தாங்க முடியாத துயரத்தை தாங்கி துன்புற்றுக் கிடந்த நிலையைப் பற்றி எள்ளளவும் கவலைப்படாமல் எங்கோ இருந்து விட்டு, இன்று இங்கு வந்து "எங்கள் மக்களுக்கு இனிமையான வழி காட்டுகிறோம்!" என்று கூறிக் கொண்டு அவர்களுடைய வாக்குகளைத் திரட்டி அதிகார பீடத்தில் ஏறவா முயற்சிக்கிறீர்கள். காலத்திற்குக் காலம் எண்ணங்களையும் கருத்துக்களையும் சந்தர்ப்பத்திற்கேற்ற மாதிரி மாற்றிக் கொள்ளும் உங்களுக்கு மீண்டும் மக்கள் முன் நின்று வாக்குகளை யாசிக்க வெட்கமில்லையா?

**கனடா ஸ்காபுரோவில் இருந்து**
**சிவா-கணேசமூர்த்தி.**

குறிப்பு :

கனடாவிலிருந்து 23.09.2000 என்ற திகதியிட்டு சிவா, கணேசமூர்த்தி ஆகிய இருவரும் முரசுக்கு அனுப்பி வைத்த தொலை நகலில் இருந்த மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்து சுருக்கத்தை இங்கு தந்திருக்கின்றோம்.

-ஆசிரியர்-

# திரைப்படக் கூட்டுத்தாபனம் புரிந்துள்ள தமிழ்ப் படுகொலைகள்

அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த 7 தமிழ்த் திரைப்படங்கள் கொழும்பில் திரையிடப்பட்டன. இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இத்திரைப்பட விழாவை நடத்தியது.

இத்திரைப்பட விழாவையொட்டி தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் ஒரு சுவரொட்டியை வெளியிட்டிருந்தது. இதில் இடம் பெற்றுள்ள தமிழ்க் கொலைகளை இந்தச் சுவரொட்டியைப் பார்த்தே அறிந்து கொள்ளலாம்.





## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

### SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடிமனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

### வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

### மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் ஒக்டோபர் 22 முதல் 28 திகதி வரை**

(கொழும்பு விலாசம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street, No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல்: 072-609388

**கல்முனையில் ஒக்டோபர் 07, 08 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் அறிவிக்கப்படும்**


(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**


## 3வது பிறந்த நாள் வாழ்த்து

செ
ல்
வ
ன்
டி
லா
ன்



05
10
2000

ஜெர்மனியில் வசிக்கும் யாழ்ப்பாணம் பெரிய கோவிலைச் சேர்ந்த சவரியான் வெனிஸ்லாஸ்-உரும்பிராயைச் சேர்ந்த விமல ராஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் டிலான் தனது 3வது பிறந்த நாளை கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள தனது மதுரா அம்மம்மா வீட்டில் கொண்டாடினார்.

டிலானை அன்பு அம்மா-அப்பா, உரும்பிராயைச் சேர்ந்த மதுரா அம்மம்மா, பெரியம்மா, சின்னம்மா, ஹட்டனில் இருக்கும் ஆசமமா குடும்பத்தினர், யாழ்ப்பாணத்தில் இருக்கும் சவரியான் அப்பய்யா, றெஜின் அன்ரா, ராஜேஸ் அன்ரா, வவுனியாவில் இருக்கும் மலர் அன்ரா, ரொசான், ரொஹான், பல்கலைக்கழகத்தில் படிக்கும் பாமா அன்ரா, அத்தைமார்களான சுமதி, துஷி, தர்சனா, ஜெமினா, லண்டனில் வசிக்கும் ராஜன் மாமா, கனடாவில் வசிக்கும் பவானி குடும்பம், யெனதாஸ் குடும்பம், சுரேஸ் குடும்பம், ரமேஸ் குடும்பம், பெரியப்பா, சித்தப்பா, ஜெர்மனியில் இருக்கும் தொட்டம்மா குடும்பம், மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இறை ஆசி பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.




**கலை அலங்கார வகுப்புக்கள்**


- சிகை அலங்காரம்
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்காரம்
- 4 மாத கற்கைநெறி

Facial Bleaching முடிவெட்டுதல் போன்றவைகளையும் செய்து கொள்ள முடியும்.
வகுப்புக்கள் வார, வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

**ஆரம்பம்: விரைவில்**
சான்றிதழ்கள் வழங்கப்படும்
FASNAZ BEAUTY SALON
142, டபிள்யூ, ஏ.சில்வா மாவத்தை. கொழும்பு-06. தொலைபேசி: 589457

"உங்களது பெரிய பிரச்சனை, நடுத்தர பிரச்சனை சின்னப் பிரச்சனை. நம்பிக்கையாக உங்களுக்கு செய்து தரப்படும். 100% உத்தரவாதம். உங்கள் பிரச்சனைக்குரிய விடை உடனடியாக. உங்கள் பிரச்சனை எதுவாகினும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் செய்து தரப்படும். பெண் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, வாழ்க்கையில் வெற்றி, பணக்காரனாக வேண்டுமா? தொடர்பு கொள்ளுங்கள்."
தொடர்பு கொள்ளும்இடம்:
விலாசம் :
PR.DANSOKHO ALI, 55. Rue des Poissonniers,
75018 Paris, France.
தொலைபேசி-0142552036

பம்பலப்பிட்டியில்
**HOTEL WESTEERN**



எழில் மிகு கடற்கரையோரம் ஆனந்தமாய் ஓய்வெடுக்க உங்களுக்காக ஒரு நவீனகுளிரூட்டப்பட்ட ஆடம்பரஹோட்டல். இலங்கை, இந்திய, கீழைத்தேய, மேலைத்தேய, சீன உணவு, சகலவகையான உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானங்களுடனான MiniBar. தற்சமயம் சிறிய வைபவங்களுக்கு ஏற்ற வகையில் அழகிய அடக்கமான சிறிய 3 மண்டபங்கள். தொலைக்காட்சி, தொலைபேசி, போன்ற வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட அறைகள்.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து பதிவு செய்வதற்கான கட்டணங்கள்
US 25$ London 15 Pounds, France 150 Frank,
German 45Mark, Canada 35Dollars,
Swiss 45 Frank.

இக் கட்டணத்துடன் காலை உணவும் இரவு உணவும் இலவசம்

**HOTEL WESTEERN**
No.35, Frankfurt Place, Bambalapitiya.
Colombo - 04. Sri Lanka.
Tel : 941-507161/2, 074-518481/5
Hot Line: 004402086901666. Fax: 941-507163
E-mail: info@hotelwesteern.com
Web: www.hotelwesteern.com

S.K.Ads, Col-6

## COMPUTER CLASSES

வத்தளைச் சந்தியில் தமிழ் விளக்கத்துடனான Computer வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. Microsoft Office 2000. Page Maker 6.5, Corel DRAW 9.0, Internet & E-mail, Hardware. Children Course, English & Tamil தட்டெழுத்து வகுப்புக்கள் மற்றும் Colour& Black and White Typesetting செய்து கொடுக்கப்படும். Software Developments. Computer Assembling & Sales. Trouble Shooting & Services. அத்துடன் Spoken English Classes நடாத்தப்படுகின்றன.

**D.S. COMPUTER STUDIES**
Internet & E-mail dsocm@mail.visual. com
No.6A, Hekitta Road, Wattala. 075-349247.



### மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET,**
**MAY FIELD ROAD, COLOMBO-13.**
நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

உலகப் புகழ்பெற்ற
## எக்ஸ் ஒயில்

- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இறுதி நேரத் தேர்தல்

## அலை தடுமாறும் தலைமைகள்

தேர்தலின் இறுதிக்கட்டம் நெருங்கிவிட்டது. நாடு முழுவதும் ஒரே பரபரப்பு. பிரசாரங்கள் ஒன்றை மேவி ஒன்றாக முழங்குகின்றன. சுவரொட்டிகள் ஒன்றன் மேல் ஒன்றாக ஒட்டப்படுகின்றன. வெற்றியைத் தட்டிக் கொள்ளும் பகீரதப் பிரயத்தனத்தில், மக்கள் நம்புவார்களா இல்லையா என்ற யோசனைகூட இன்றி, வாய்க்கு வந்த வாக் குறுதிகளை அள்ளி வீசுகின்றன அரசியற் கட்சிகள்.

இந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்ற வாக்குறுதிகள் பல வேடிக்கை தருகின்றன. தான் ஆட்சிக்கு வந்தால் யாவரும் பாணுக்குப் பதில் கேக் சாப்பிடலாமாம்; பாடசாலை மாணவர்கள் டியூஷன் செல்ல இரண்டாயிரம் ரூபா வரை பணம் தருவாராமென்றெல்லாம் ஏதோ தன் வீட்டுப் பணத்தைத் தானம் செய்வதைப் போல் பேசுகிறார். ஒர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கப் போகும் ஒருவரின் பேச்சுப் போல் அவை அமையவில்லை. விளையாட்டுப் பேச்சாகத் தொனிக்கிறது.

அதை நம்புவதா இல்லையா, என்பது சிங்கள மக்களைப் பொறுத்த விடயம். எனினும் சிங்கள மக்களின் தீர்மானம் இவற்றைப் பொறுத்து அமையப் போவதில்லை. அது இந்த அரசாங்கம் மாற்றப்பட வேண்டுமானால் அதைப் பொறுப்பேற்க தகுதியான மாற்றுக் கட்சியொன்று உள்ளதா என்பதைப் பொறுத்தே அமையும். அந்த வகையில் தற்போதைய அரசாங்கத்தில் சிங்கள மக்களுக்கு எந்தவித அதிருப்திகள் இருந்தாலும், அதற்கு மாற்றீடாக எதிர்க்கட்சியொன்று இல்லையெனில் தவிர்க்க முடியாமல் மீண்டும் இதே அரசாங்கமே ஆட்சியேறும். இவ்விதத்தில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தன்னை ஒரு தகுதியான மாற்றீடாக நிறுவுவதற்குத் தவறிவிட்டது. அதனால் வெறுமனே குறை கூறுவதால் மட்டும் ஆட்சியைக் கைப்பற்றும் சாத்தியம் அதற்கு அரிதாகவே காணப்படுகிறது.

இந்தத் தேர்தலில் சிங்களக் கட்சிகளிடையே இவ்விரு பிரதான கட்சிகளைத் தவிர ஜே.வி.பி. சற்று செல்வாக்கை ஈட்டலாம். கடந்த பொதுத் தேர்தலில் அது ஒரேயொரு ஆசனத்தையே பெற்றிருந்த போதிலும் இத் தேர்தலில் மேலதிக ஆசனங்கள் அதற்குக் கிடைக்க வாய்ப்புண்டு. அது சில மாகாணசபைகளிலும் பிரதேச சபைகளிலும் வேரூன்றியுள்ளதானது இத்தடவை மேலும் பரந்த அளவில் செயற்பட அதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அத்தோடு அது தற்போதைய பாராளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பித்த தீர்வு யோசனைகளைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து தன்னை ஒரு கவர்ச்சி மையமாக்கிக் கொண்டது. இதனால் பூமி புத்திரா, சிஹல உறுமய போன்ற சிங்களப் பேரினவாத கட்சிகளின் வாக்காளர்களையும் தன்பக்கம் திருப்பிக் கொள்ள முயற்சிக்கிறது. சிங்கள இனவாதமும் கூட வெறுமனே அந்த இனவாதத்தைக் கக்குவதற்காக எந்தக் கட்சியின் பக்கமும் சாய்ந்துவிடாது. மாறாக ஒரு பலம் வாய்ந்த செயல் முனைப்புள்ள கட்சியின் பக்கமே அது சாயும். அந்தவகையில் ஜே.வி.பி. அவ் விடத்தைப் பிடிக்க முயற்சிக்கிறது. அதில் இம்முறை ஒரளவு வெற்றியும் பெறக்கூடும்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்த சிறிசேன கூரேயின் பிரஜைகள் முன்னணி, பெரிய அளவில் ஐ.தே.க.வை உடைக்கப் போவதில்லை. அது ஐ.தே.க.வின் மாற்று வடிவமாகத் தன்னை நிலைநாட்டிக் கொள்ளவில்லை. வெறுமனே ஐ.தே.க.வுக்கு தொல்லைத்தரும் குழுவாகவே ஸ்தாபனப்பட்டுள்ளது. ஒருசில ஆசனங்களை அது வெற்றிகொள்ளக் கூடும்.

சிங்கள அரசியல் இவ்வாறிருந்தாலும் அது சிறுபான்மைக் கட்சிகளிடம் தங்கியிருக்க வேண்டிய நிலைமை இம்முறை மேலும் வலுக்கும். அமையப் போகும் அரசாங்கம் சிறுபான்மைக் கட்சிகளுடனான கூட்டரசாங்கமாக அமைய நேரிடுவதும் தவிர்க்க முடியாததாகி விடக் கூடும். அந்தவகையில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன சென்ற தடவையைப் போல் முக்கியத்துவம் பெறுகின்றன. சிலசமயங்களில் வடக்கு-கிழக்குத் தமிழ்க் கட்சிகள்கூட அரசாங்கம் அமைப்பதற்கு அத்தியாவசியப் படலாம்.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரையில் அதன் ஸ்தாபகரான அமைச்சர் அஷ்ரப்பின் மரணம் ஒரு எதிர்பாராத பின்னடைவாகவே ஆகியுள்ளது. அவருக்குச் சமனான தலைமை அங்கு இல்லாத வெற்றிடமே இதற்குக் காரணமாகிவிட்ட அதேவேளை, அவ் வெற்றிடத்துக்கான தலைமைப் போட்டியும் கட்சிக்குள் உடனடியாகவே வெடித்துப் பகிரங்கமாகப் புலப்பட்டுவிட்டது. தேர்தலுக்கான ஒன்றுபட்ட செயற்பாடு அவசியப்படும் இத் தருணத்தில் இத்தகைய குளறுபடிகள் பெறுபேறையும் பாதிக்கவே செய்யும். அத்தோடு அஷ்ரப்பின் முஸ்லிம் காங்கிரஸ் போல் எதிர்கால முஸ்லிம் காங்கிரஸ் வலுவானதாக இருக்குமா என்பதுவும் கேள்வியே. அதன் பேரம்பேசும் வலு, முன்னைய நிலையிலிருந்து வீழ்ந்துவிட்டதான உணர்வு அதன் தேர்தல் பெறுபேறுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

அத்தோடு அஷ்ரப் இல்லாத நிலையில் முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம்கள் மட்டுமல்லாத ஒரு பொதுக் கட்சியாக மாற்றும் அவரது கனவு நிறைவேறுமா என்பதும் சந்தேகமாகியுள்ளது. அந்த முயற்சியில் இம்முறை அது தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் சில இடங்களில் போட்டியிட இறங்கியது. ஒரு விஷப் பரீட்சையாக அதற்கு அமையலாம். ஏனைய இன மக்களையும் ஈர்க்க முடியாமல், முஸ்லிம் மக்களிடமிருந்து விலகுவதாக அது ஆகிப் போகலாம். முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரே பழக்கமாகிவிட்ட முஸ்லிம் மக்களுக்கு இப் புதிய பெயர் மயக்கமாகலாம்.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டாட்சி அமைப்பதற்குப் பங்காளியாகக்கூடிய தன்மையை இழக்கப்போவதில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைப் பொறுத்தவரை இத் தேர்தலின் பெறுபேறுகள் சற்று வீழ்ச்சி காணுமெனவே புலப்படுகிறது. அதன் கவர்ச்சிமிக்க தனிப் பெரும் தலைவராக விளங்கிய தொண்டமான் இம்முறை இல்லை. அதேவேளை அவரின் இடத்தை ஏற்ற அவரது பேரன் ஆறுமுகம் தொண்டமானுடன் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பிணக்குற்று பிரிந்து சென்று இம்முறை ஐ.தே.க.வுடன் இணைந்து கேட்கின்றனர். கடந்த மாகாணசபைத் தேர்தல்களில் தொண்டமான் இருக்கும்போதே ஐ.தே.க.விற்கு மலையகத்தில் கணிசமான வாக்குகள் விழுந்திருந்தன. கடந்த பல வருடங்களாக இ.தொ.கா. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருந்து யானைச் சின்னத்தைப் பழக்கப்படுத்தி விட்டமை இதற்கு காரணமாக இருக்கலாம். அதேபோல் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் தொண்டமானின் மரணத்தின் மத்தியிலும் இ.தொ.கா.வின் ஆதரவினடிப்படையில் அதிக அளவு மலையகத் தமிழ் வாக்குகள் சந்திரிகாவுக்குக் கிடைக்கவில்லை. இந்நிலையில் அப்பட்டமான பிளவுகளுடன் தேர்தலை எதிர் கொள்ளும் இ.தொ.கா. முன்னைய அளவு ஆசனங்களை ஈட்டிக் கொள்வது சிரமமாக இருக்கும். பதிலாக அவ்விடத்தை மலையக மக்கள் முன்னணியும் நிரப்பிவிடப் போவதில்லை. அவர்கள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில் தம்மை மலையக மக்களின் குரலாக ஒலிக்கக்கூடிய ஒரு வலுவான கட்சியாக ஸ்திரப்படுத்திக் கொள்ளத் தவறி, பத்தோடு பதினொராவது கட்சி போல் பாராளுமன்றத்தில் காலம் கழித்துவிட்டு இறங்கியுள்ளமையே அவர்கள் பற்றிய மனப் பதிவை மலையக நெஞ்சங்களில் பொறிக்க முடியாமைக்குக் காரணம். ஆகவே தவிர்க்க முடியாமல் ஐ.தே.க.வே இவர்கள் விட்டுள்ள இடங்களைச் சுவீகரித்துக் கொள்ளப் போகிறது. எனினும் இ.தொ.கா.வின் ஆதரவானது கூட்டாட்சி அமைக்கத் தேவை என்ற நிலை மாறிவிடவில்லை.

அரசாங்கத்தில் கூட்டு வகிக்கக்கூடிய சிறுபான்மைக் கட்சிகளின் பலமும் இம்முறை குறைவடையும் நிலைமையில் அரசாங்கத்திற்கு வடக்கு-கிழக்குத் தமிழ்க் கட்சிகளின் தயவு வேண்டப்பட நேரிடலாம். அத்தோடு அரசியல் தீர்வு பற்றிய ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவதற்கான இறுதிச் சந்தர்ப்பமாக அமையக் கூடிய இவ்வேளையில் பலமும் ஆளுமையும் கொண்ட தமிழ்ப் பிரதிநிதித்துவமானது இங்கு அவசியப்படுகிறது.

ஆனால் வடக்கு-கிழக்கில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளில் பலவற்றுக்கு என்ன செய்யப் போகிறோம் என்று கூறுவதற்கு எதுவுமில்லை. அதனால் அவற்றின் பிரதான தேர்தல் பிரசாரம் மற்றவர்களை வசைபாடுவதாக மட்டுமே அமைந்திருக்கின்றன.

இம்முறை வடக்கு-கிழக்கில் விரிந்திருக்கும் தமிழ்த் தரப்பினரின் தேர்தல் களம் மிகுந்த அக்கறைக்குரிய ஒன்றாக ஆகியுள்ளது. யுத்தக் கெடுபிடிகளின் மத்தியிலும், யுத்தம் முன்னரைவிட மிக உக்கிரமான நிலையை எய்தியுள்ள வேளையிலும், ஆயுதப் போராட்ட வழியைத் தாண்டிய ஜனநாயக முறைமைக்கு பெருமளவான கட்சிகள், குழுக்கள் இவ் வடக்கு-கிழக்கு தேர்தலில் குதித்துள்ளமைதான் இங்குள்ள வினோதம்.

யாழ்ப்பாணத்தில் 20 கட்சிகள், மட்டக்களப்பில் 21, வவுனியாவில் 19..... என்றுமில்லாத எண்ணிக்கையிலான பகுதியினர் இம்முறை தேர்தல் வேட்டையில் குதித்துள்ளனர். இந்த அரசியலில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று விளம்பிக்கொள்ளும் பலர் இத் தேர்தலில் இறங்கியுள்ளதுதான் மேலும் வேடிக்கை. ஒருவேளை தம்மால் இவ்வரசியலில் எதுவும் செய்ய இயலாது என்பதைக் காட்டுவதற்காகவே அவர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனரோ என்றே எண்ணவும் தோன்றுகிறது.

எவ்வாறாயினும் இத் தேர்தலில் தமிழ் தரப்பினரிடையே யார்பக்கம் வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது என்பதை ஒரளவு நாம் அனுமானிக்கலாம். இதற்கு அவ்வக் கட்சிகள் குழுக்களின் பலம் பலஹீனங்கள், அவர்கள் முன்வைக்கும் விடயங்கள், எடுத்துக் கொண்ட தேர்தல் உத்திகள், சூழ்நிலைகள் என்பன ஆராயப்பட வேண்டியவையாகின்றன.

யாழ்ப்பாணத் தேர்தல் களமென்பது வடக்கு-கிழக்கில் இம்முறை மிகவும் தீர்க்கமான ஒரு களமாக அமையவுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அங்கு இத் தேர்தலுக்கு முகம் கொடுக்கும் மக்களின் தெரிவில் "யார் தம்மோடு நிற்பார்கள், தமது தேவைகளுக்கு உதவுபவர்களாகவும், பிரச்சனைகளுக்கு முகம்கொடுப்பவர்களாகவும் இருப்பார்கள்?" என்ற விடயமே இம்முறை பிரதானமானதாக உள்ளது. அரசியல் நிலைப்பாடுகள் அடுத்தபடியானதாகவே உள்ளது.

ஏற்கெனவே இருந்த யாழ்ப்பாணச் சூழலில் இயக்கமுள்ள அரசியல் அலகாக உள்ளூராட்சி சபைகளே இருந்தன. இவற்றில் 10 சபைகள் ஈ.பி.டி.பி.யின் வசமும் இரண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியிடமும், ஒன்று புளொட்டிடமும் மற்றொன்று டெலோவிடமும் இருந்தன. இவற்றில் தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாநகர சபையைப் பொறுப்பேற்றிருந்தும் அதனால் தன் வசமிருந்த இரு சபைகளையும் செயற்படுத்த முடியவில்லை. புலிகளால் அச்சுறுத்தலென்று ஒரு காரணமும், அரசாங்கம் உதவவில்லை என்று மறுகாரணமும் சொல்லிக்கொண்டு அது அவற்றைக் கிடப்பில் போட்டுவிட்டது. மாநகர சபை மேயர் பதவியைக்கூட நிரப்ப முடியாதவர்களாக அவர்கள் பரிதவித்தனர். ஆனால் இதே அச்சுறுத்தலுக்கும் காரணங்களுக்கும் மத்தியில் ஈ.பி.டி.பி.யால் தனது சகல உள்ளூராட்சி சபைகளையும் மிக வினைத்திறனுடன் செயற்படுத்த முடிந்துள்ளது. அவ் வேலைகள் யாவும் அப் பகுதிகளில் மக்களால் உணரப்படக்கூடிய வகையில் வெளிப்படையாக உள்ளது.

உண்மையில் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டணியின் பழைய வாக்குகள் அதற்கு வழங்கியிருந்த சந்தர்ப்பத்தை அது சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அது தன் ஆளுமையையும் செயற்றிறனையும் நிலைநாட்டுவதற்குப் பதிலாக, இயலாமையையும் பின்வாங்கும் தன்மையையுமே வெளிப்படுத்திக் கொண்டது. இதனால் கூட்டணியால் யாழ். மக்களுக்கு எந்தவொரு காரியமும் ஆகவில்லை. இத்தகைய பின்னணியில் யாழ்ப்பாண மக்களுக்கு நன்மையோ, தீமையோ ஈ.பி.டி.பி.யோடுதான் என்ற நிலை நெடுநாட்களாக நீடித்து இப்பழக்கத்தில் 'ஈ.பி.டி.பி. ஏதோ செய்யுது' என்ற மனப்பதிவு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அத்தோடு முன்னைய காலங்களில் பல்வேறு ஆயுத இயக்கங்களால் ஏற்பட்ட இம்சைகள், அடாவடித்தனங்கள் என்பன இவர்களின் நிர்வாகத்தில் இருக்கவில்லை. இதே வேளை தொடர்ந்தும் யாழ். மக்களுக்குள் இருந்தவர்கள் என்ற ஒரு நன்றிக்கடனையும் இவர்கள் சம்பாதித்துக்கொள்ள முடிந்தது.

இத்தகைய சூழ்நிலையில் நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தைக் கைவிட்டுவிட்டு, தற்போது தேர்தலுக்காக அங்கு சென்றுள்ள கூட்டணியினரால் ஈ.பி.டி.பியால் கட்டி எழுப்பப்பட்ட ஆதரவை உடைத்து மக்களிடமிருந்து பழைய வாக்குகளைத் திரும்பவும் கவர்ந்து விட முடியுமா என்பது சந்தேகமே.

எவ்வாறாயினும் கூட்டணியால் யாழ். மக்களுக்கு தாம் என்ன செய்யப் போகிறோம் என்ற ஒரு தெளிவான கருத்தை முன்வைக்க முடியவில்லை. அவர்களால் வெறுமனே ஏனைய கட்சிகளை வசைபாட மட்டுமே முடிந்தது. மற்றவர்களை வசை பாடுவதற்காக ஒரு பிரதிநிதித்துவம் தமக்குத் தேவை என்ற நிலை யாழ். மக்களுக்கு இல்லை. தமக்காக ஒரு துரும்பைத்தன்னும் நகர்த்த வல்ல பிரதிநிதித்துவமே தேவையென்பதே யாழ் மக்களின் இன்றைய நிலை.

இதேவேளை இதையும் தாண்டி கூட்டணிக்கு விழக்கூடிய வாக்குகளையும் பங்கிட அகில இலங்கை தமிழ்காங்கிரசும் மற்றும் சில சுயேட்சைக் குழுக்களும் களமிறங்கியிருக்கின்றன.

பொதுவாக கூட்டணி உட்பட இம்முறை தேர்தலில் குதித்துள்ள பல கட்சிகளின் தந்திரோபாயம் தமக்கு புலிகளின் ஆதரவு உள்ளது என்ற ஒரு பிரமையை ஏற்படுத்தி வாக்குகளைச் சுவீகரிப்பதாகும். ஆனால் யாழ்ப்பாணத்தில் தனது இரண்டு மேயர்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கூட்டணியால் அதை நம்பவைப்பது சாத்தியப்படாத ஒன்றாகிவிட்டாலும் மட்டக்களப்பில் அதற்கு நம்பிக்கையிருந்தது. யாழ்ப்பாணத்தில் இவ்விடயத்தில் தம்மால் கூட்டணியை விஞ்சிவிட முடியுமென்ற நப்பாசை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுக்கு இருந்தது. குமார் பொன்னம்பலத்துக்கு புலிகள் மானிதர் பட்டம் வழங்கியதை தேர்தலுக்கான மூலதன மாக்க முடியுமென அவர்கள் மனப்பால் குடித்திருந்தார்கள். ஆனால் யாழ்ப்பாணத்திலும், லண்டனிலும் புலிகள் கடைசி நேரத்தில் விடுத்துள்ள அறிவித்தல் இந்தத் தந்திரோபாயத்தைப் போட்டு உடைத்துவிடச் செய்து விட்டது.

புலிகள் தாம் யாரையும் இத் தேர்தலில் ஆதரிக்கவில்லையெனவும் தமது பெயரை யாரும் பயன்படுத்தக் கூடாதெனவும் அறிவித்துள்ளதானது இவர்களின் தேர்தல் உத்திக்கு ஆப்பு வைத்துவிட்டதால், புதிய தேர்தல் உத்தியை வகுக்க மார்க்கமும் நேரமுமின்றி திண்டாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர்.

இந்நிலையில் யாழ். தேர்தலில் அதிக வெற்றிவாய்ப்பு ஈ.பி.டி.பி.யின் பக்கமே சாய்ந்துள்ளது. கூட்டணி இரண்டாமிடத்துக்கும் மூன்றாவது இடம் புளோட், ஈ.பி.ஆர்.எல்.எ.ப். வரதர் அணிகள், தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றுக்கிடையிலான போட்டியாகவும் விளங்கலாம், டெலோ மேலும் பின்தங்கிய நிலையில். சில சந்தர்ப்பத்தில் மூன்றாவது கட்சிக்கு ஆசனங்கள் இல்லாதும் போகலாம்.

இதேவேளை மட்டக்களப்பில் கூட்டணி தன்னை நிலைநாட்டிக் கொண்டுள்ள போதிலும் அங்கும் அதற்கு சிறிய சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது. அங்கு தாம் புலிகளிடம் பேசிக் கொண்டே தேர்தலில் போட்டியிடுவதாக ஒரு கருத்தை அவர்கள் பரப்பிவந்தனர். ஆனால் புலிகளின் அறிவித்தல் அதனைப் பொய்யென ஆக்கிவிட்டது. இதைவிட கடந்த காலத்தில் கூட்டணியினரால் அங்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படாமலும் இருந்தமை ஒரு குறைபாடாக வெளித் தெரிகிறது.

அதன் பாராளுமன்ற உறுப்பினரான துரைராஜசிங்கமும் இத்தடவை விலகிக் கொண்டுள்ளார்.

நிறைவேறாத வாக்குறுதிகள் குறித்த கூட்டணி மீதான அதிருப்திகாரணமாக கூட்டணி தன் முன்னைய 3 ஆசனங்களில் ஒன்றை இழக்கவும் நேரிடலாம். மட்டக்களப்பில் போட்டிடும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கும் ஒரு ஆசனம் கிடைக்க வாய்ப்பு அதிகம் உண்டு. ஏனைய கட்சிகளுக்கு நம்பிக்கையில்லை. எனினும், மொத்தம் 5 ஆசனங்களே அங்கு ஈட்டப்பட முடியும் என்ற யதார்த்தத்துக்கு மத்தியில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவை அங்கு ஒரு ஆசனத்தையாவது பெற்றுக் கொள்ள பகீரதப் பிரயத்தனமெடுத்து வருகின்றன.

அம்பாறையைப் பொறுத்தவரை அதிக சிக்கல் இல்லை. கூட்டணியின் வேட்புமனு அங்கு நிராகரிக்கப்பட்டுவிட்டதால் அங்கு அனைத்துக் கட்சிகளும் கூட்டாகப் போட்டியிடும் தமிழர் மகாணசபையின் சுயேச்சை அணியே தமிழ்த் தரப்பில் தெரிவாகும். அதில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினராக அங்கு சேவையாற்றிய குணசேகரத்துக்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைக்குமெனவே எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலையில் பல தமிழ்க்கட்சிகள் மோதுகின்றன. அங்கு வாக்குகள் சிதைந்தால் தமிழ்த் தரப்பில் ஒரு பிரதிநிதி கூட இல்லாது போய்விடும் ஆபத்து நிலவுகிறது. கூட்டணி கடுமையான பிரயத்தனம் எடுத்தால் ஒன்றைத் தக்கவைத்துக் கொள்ளலாம். ஆயினும் கூட்டணியில் இம்முறை புது முகங்களே போட்டியிடுவதால் செல்வாக்கு கேள்விக்கிடமானது.

வன்னியில் 19 கட்சிகள் மோதுகின்றன. புளொட், வவுனியாவிலும் டெலோ மன்னாரிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஈ.பி.ஆர்.எல்.எ.ப்.பில் வரதர் அணிக்கு மன்னாரில் ஓரளவு செல்வாக்கு உண்டு. சுரேஷ் அணிக்கு வவுனியாவில் களம் உண்டு. இவற்றுக்கு மத்தியில் கூட்டணியும் இங்கு ஒரு பிரதான கட்சியாக போட்டியிடுகிறது. இதில் புளோட் முன்னணி வகிக்கலாம். டெலோ ஒரு ஆசனத்தையாவது பெறலாம். கூட்டணியும் முன்னர் தான் இழந்த பிரதிநிதித்துவத்தை இங்கு மீளப்பெறக்கூடும். வரதர் அணியும் சுரேஷ் அணியும் ஒரு ஆசனத்துக்காக மோதிக் கொள்ளலாம்.

மொத்தத்தில் இத்தேர்தலில் தமிழ்த் தரப்பிலான பிரதான மோதல் ஈ.பி.டி.பி.க்கும் கூட்டணிக் குமானதாகவே அமையப் போகிறது. இதில் கூட்டணி கோட்டை விடுமாயின் அதன் அரசியலின் அஸ்தமனத்துக்கான ஆரம்பமாக இத் தேர்தல் அமைந்துவிடும். ஏனெனில் அது தனது பழைய வாக்குகளை ஒருமுறை இழந்துவிட்டால் பின்னர் ஈட்டிக் கொள்வது சிரமமானதாகிவிடும். அதனைத் தீர்மானிக்கக் கூடிய பிரதான களமாக அமையப்போவது யாழ்ப்பாணம்தான்.

எவ்வாறாயினும் தேர்தலின் இறுதித் தருணங்கள் தலைவிதிகளை மாற்றியமைக்கலாம். அடுத்த இதழில் அதனை அலசுவோம்.

**நரன்**

## செய்திச் சிதறல்

✪ மட்டக்களப்பு-வவுணதீவு இராணுவ முகாம்மீது புலிகள் இயக்கத்தினர் படுவான்கரையிலிருந்து மோட்டார் குண்டுத் தாக்குதலை நடத்தினர். கடந்த முதலாம் திகதி காலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் இரு படை வீரர் கொல்லப்பட்டார்கள். மேலும் 5 பேர் காயங்களுக்குள்ளானார்கள். சம்பவத்தையடுத்து படையினரின் பதில்தாக்குதல்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி இடம்பெற்றது.

✪ பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேர்தல் தொடர்பான வன்முறைச்சம்பவங்கள் நாடு பூராவும் நடைபெற்றுள்ளன. இவற்றில் 37 கொலைகளும் நடைபெற்றிருப்பதாக ஒக்டோபர் 2ம் திகதி வெளியான தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு மையம் அறிவித்திருக்கிறது. உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய தாக்குதல்களும் படுகாயங்களை விளைவிக்கக் கூடிய சம்பவங்களும் பெருவாரியாக நடைபெற்றிருக்கின்றன.

✪ தேர்தல் வன்முறைகள் தொடர்பாக சில பகுதிகளில் பொலிஸாரிடம் முறையிட்டபோது, அவர்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்யாமலும் உதாசீனம் செய்வதாகவும் புகார்கள் கூறப்பட்டு வருகின்றன. தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் சில தினங்களேயிருப்பதனால் இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் மேலும் பலமடங்கு அதிகரிக்கக் கூடுமென்று பெரும்பாலும் நம்பப்படுகிறது.

✪ ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க திடீரென்று இடம் குறிப்பிடப்படாத வெளிநாட்டுக்குச் சென்றிருக்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன. கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டடமொன்றில் நிகழ்ந்த தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலின் போது அவருடைய வலது கண்ணில் ஏற்பட்ட ரணத்துக்கான சிகிச்சைக்காகவே அவர் வெளிநாடு சென்றிருக்கிறாரென்று சில வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. ஆனால் திருமதி சந்திரிக்காவின் மகனுடைய பல்கலைக்கழக அனுமதி தொடர்பாகவே லண்டன் மாநகர் சென்றுள்ளார் என்று பிரிதொரு செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

✪ ஜனாதிபதி வெளிநாடு புறப்படுவதற்கு முன்னர் மிகக் கடுமையான எச்சரிக்கையொன்றினை அவருடைய கட்சிக்காரர்களுக்கு விடுத்துள்ளார். 'பொதுத் தேர்தலில் போட்டியிடும் பொது ஜன முன்னணி வேட்பாளர் எவரும் எத்தகைய வன்முறையிலும் ஈடுபடலாகாது. அவ்வாறு வன்முறைமூலம் வாக்குச் சேகரித்து பாராளுமன்றத்திற்கு வரும் எவருக்கும் எத்தகைய பதவியும் வழங்கப்படமாட்டாது. அவர் எத்தகைய அந்தஸ்த்தில் அல்லது எத்தகைய உயர் நிலையில் இருந்தாலும் பாராபட்சமின்றி அவரை நிச்சயமாக நிராகரித்துவிடுவேன்.' என்று கூறியிருக்கிறார்.

✪ யாழ் மாவட்டத்தில் குறிப்பாக தென்மராட்சிப் பகுதியில் அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் பயங்கர மோதல்களினால் பொதுமக்கள் தாங்கொணாத துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இப்பிரதேசங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதிகளில் வந்து சேர்ந்துள்ளனர். அங்குள்ள பாடசாலைகள், தேவாலயங்கள் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு எதிர்பாராமல் வந்து சேரும் அகதிகளுக்கான உணவுகளை வழங்குவதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் தொண்டர்கள் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

✪ பத்தாம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலைக் குழப்பும் நோக்கோடு பாரிய வன்செயலை நடத்துவதற்கு புலிகள் திட்டமிட்டிருப்பதாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க அனுராதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

✪ பாதுகாப்புத்துறை பிரதியமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் புதல்வர் ஒருவர் கண்டி மாநகர நீதிபதியினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். கண்டியில் வைத்து மாற்றுக்கட்சி உறுப்பினர்கள் மீது அவரும் அவருடைய கூட்டாளிகளும் தாக்குதல் நடத்தியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. இக்குற்றச்சாட்டின் மீது அவர்களைக் கைது செய்த பொலிஸார் அவர்களை நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தினர், சில நாட்களுக்கு முன்னர்தான் ஜெனரல் அனுருத்த ர்த்வத்த, தன்னுடைய புதல்வர்கள் எவரும் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதில்லை என்று ஒரு பொதுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.



# வாஜ்பாய் உடல் நிலை என்ன ஆயிற்று?

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு என்ன நேர்ந்தது?

நாகபுரி பா.ஜ.க. மாநாடும், அமெரிக்க விஜயமும் சுருக்கப்பட்டது ஏன்?

கவலைப்படும் அளவுக்கு பிரதமர் நோய் வாய்ப்பட்டுள்ளாரா?

அவரது பணிகளில் இனி தொடர்ந்து செயற்படுவது இயலாத காரியம் என்கிறார்களே, இது உண்மையா?

பொதுவாக வயதாகிவிட்டாலே சில விரும்பத்தகாத உறவினர்கள் உடலிலேயே தங்கி விடுவது மனித இயல்பு. அல்லது இயலாமை!

76 வயதாகிவிட்ட வாஜ்பாய்க்கு நினைவாற்றல் இருக்கிறதா? வயதாகி விட்டால் மறதி தானாகவே புகுந்து விடும்! அந்த மறதி இவருக்கு?

இருக்கிறது! கடந்த ஆண்டு சுதந்திர நாளன்று செங்கோட்டை கொடியேற்றும் நிகழ்ச்சியில் ஒரு காலில் 'ஷூ' அணியமறந்துபோயிருந்தார்.

காதுகள் கேட்கின்றனவா?

இல்லை. கருவிகளை பயன்படுத்துகின்றார்.

பார்வை?

குறைந்திருக்கிறது!

இதயம்?

மிகவும் நன்றாக வலுவாகவே இருக்கிறது.

நிமிடத்திற்கு 72 முறை என பல்ஸ்ரேட் இருக்கிறது.

நுரையீரல்?

கோளாறு இல்லை!

கிட்னி?

ஒரு கிட்னி தான் இருக்கிறது.

நீரிழிவு?

இல்லை! இஷ்டத்துக்கு இனிப்புகள் சாப்பிடுவதால் எடை கூடி முழங்காலில் முட்டுவலியை தந்துவிட்டது!

இரத்த அழுத்தம் மிகவும் நார்மல் (80-130)

28 ஆண்டுகளுக்கு முன்பு இரைப்பைப் புண்ணுக்கு (பெப்டிக் அல்சர்) அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின் பிரச்சனை எதுவும் இல்லை.

"புற்றுநோய் என்று பறந்த வதந்திகளில் உண்மை எதுவும் இல்லை" என்று பிரதமரின் குடும்ப டாக்டர் வலியுறுத்தி சொல்கிறார்.

இந்த ஆண்டு சுதந்திர நாளன்று பிரதமர் வாஜ்பாய் தடுமாறி விழ இருந்தார் என்று செய்திகள் வெளிவந்தன என்பதை மறக்க முடியவில்லை.


**அடிக்கடி சோர்வு/ நடக்கமுடியாமல் கால்களில் தடுமாற்றம்.**

முன்னைப் போல் செயல்பட இயலவில்லை. பிரதமர் நோய் வாய்ப்பட்டவரைப் போலவே காணப்படுகிறார். காலை நேரத்தில் மிகவும் களைப் படைந்து விடுகிறார் என்றெல்லாம் பேசப்படுகின்றன.

இடது முழங்கால் முட்டில் நடப்பதற்கு வசதியாக சுரக்கும் சுரப்பி இப்போது சுரப்பதில்லை. இதனால் முக்கியமான இணைப்புப் பகுதியான 'கார்டிலேஜ்' பழுதாகிவிட்டது. இதனால்தான் பிரதமரால் நடக்க இயலவில்லை என்கிறார்கள் டாக்டர்கள்.

இதனால் விமானத்தில் படிக்கட்டுகளில் பிரதமரால் ஏறி இறங்க இயலவில்லை.

"இடது காலில் அறுவைச்சிகிச்சை செய்து கொண்டால் சரியாகிவிடும். மற்றப்படி அவருக்கு வேறுவகை நோய் எதுவுமில்லை" என்று பிரதமரின் டாக்டர் ரந்தீப் குளேரியா அழுத்தம் கொடுத்து சொன்னாலும் சிலர் பா.ஜ.க. தலைவர்களின் கருத்து வேறுவிதமாக இருக்கிறது.




ஆனால் டாக்டர்கள் சொல்வதெல்லாம் "அமெரிக்கப் பயணத்துக்குப் பிறகு கட்டாயம் அவர் முழங்காலில் அறுவைச்சிகிச்சை செய்து கொள்வது அவசியம். இரண்டு இலட்சம் வரை செலவாகலாம். 'பிளேட்' பொருத்திக் கொள்வது நல்லது" என்கிறார்கள்.

டாக்டர்கள் கருத்து இப்படி இருந்தாலும் பா.ஜ.க.வில் ஒரு குழுவினர் பிரதமரை கட்டாய ஒய்வு எடுத்துக் கொள்ளும் படி வலியுறுத்திக் வருகிறார்கள்.

நாகபுரி தேசிய குழுக்கூட்டத்தில் எந்தவித முன்னறிவுப்பும் இல்லாமல் வாஜ்பாய் வெளியேறிச் சென்றதுமே முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

"முகம் வெளுத்துப் போய் விட்டது!"

"முகம் சற்று வட்டமாக இருப்பதுடன் வீக்கமும் இருக்கிறதே!"

"குரல் கூட மங்கிவிட்டது!"

"அவரால் அமெரிக்கப் பயணத்தை தொடர முடியுமா?"

இப்படி எல்லாம் பேசத் தொடங்கி விட்டார்கள் பி.ஜே.பி. பிரமுகர்கள்.

அதனால் உத்தரப்பிரதேசத்தில் கட்சியை வலுப்படுத்த கல்யாண் சிங்கை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வர வேண்டும் என்கிறார்கள்.

"வாஜ்பாயின் உடல் நலனைக் கருதி அடுத்த இடத்திற்கு உரியவர் லால் கிருஷ்ண அத்வானி தான்" என்று ஒரு குழுவினர் குழுசேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

"இப்படி பேசுவது அநாகரிகமானது. நல்ல உடல் நலத்துடன் வாஜ்பாய் இருக்கும் போதே அவர் இடத்துக்கு ஒருவரை குறித்து விவாதிப்பது அநாகரிக அரசியல்" என்று கட்சிக்குள் இப்போது எதிர்ப்பு எழுந்திருக்கிறது.

"அத்வானி தான் அடுத்த பிரதமர் என்றால் அதை தேசிய கூட்டணி (என்.டி.ஏ.) ஒப்புக் கொள்ளுமா?"

தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்வாக ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடுவைத் தான் முன்நிறுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

நாயுடுவை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, மம்தா பானர்ஜி, பிரகாஷ் சிங் பாதல், நவீன்பட்நாயக் ஆகியோர் ஆதரிக்கக் கூடும் என்கிறார்கள். ஏனென்றால் பாபர் மசூதி தகர்த்தலில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள அத்வானியை நாயுடு ஆதரிக்க மாட்டார். அப்படி ஆதரித்தால் ஆந்திர மாநிலத்தில் இ.காங்கிரசின் வளர்ச்சிக்கு வழியமைத்துக் கொடுத்து விட்டதாகிவிடும் என்று தெலுங்கு தேசம் கருதுகிறது.

அத்வானியா?

சந்திரபாபுவா?

அரசியலில் இருந்து ஒய்வு எடுக்கும் நேரம் பிரதமருக்கு வந்து விட்டதா? நாளை நடப்பதை யார் அறிவார்.?

(நன்றி-தேவி)

# காணாமல் போனோர் நினைவு நாள்

## நினைவுச்சின்ன அமைப்பினரின் கோரிக்கை

இந்நாட்டில் இற்றைவரை 60 ஆயிரம் பேர் வரை காணாமல் போயிருக்கிறார்கள். இத்தனை பேரும் என்ன ஆனார்கள். உயிருடன்தான் இருக்கிறார்களா? அல்லது மாண்டு மடிந்து மண்ணோடு மண்ணாகிப் போய் விட்டார்களா? என்பது எவருக்குமே தெரியாது.

சிலகாலத்துக்கு முன்னர், காணாமல் போவோரின் கதையைத் தமது பதவி வேட்டைக்குத் துரும்பாக பயன்படுத்தி அரசியல் வாதிகள் ஆதாயம் பெற்றனர். ஆனால் இன்று அனுபவம் கிடையாது. மறைந்தவர்கள் மறக்கப்பட்டவர்களாகி விட்டார்கள்.

இருப்பினும், தங்கள் அன்புக்குப் பாத்திர மானவர்களை துடிக்கப்பதைக்க இழந்து விட்ட பெரும் சோகத்தை மறக்க முடியாமல் அவ்வப்போது தனிமையில் கண்ணீர்வடிக் கின்றனர்.

கொடூரமான முறையில் மனிதர்கள் காணாமல் போகும் சம்பவங்கள் ஏனைய நாடுகளைவிட இலங்கையில்தான் அதிகம் என்று பல சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் கூறுகின்றன.

மனிதர்கள் காணாமல் போவதற்கு காரணகர்த்தாக்கள் இவர்கள் தான் என்று காணப்படுவோரை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி தண்டனை வழங்கும் முறை சிலி, பொஸ்னியா, குரோஷியா போன்ற நாடுகளில் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் இலங்கையில் அத்தகைய குற்றம் புரிந்தவர்கள் அடையாளம் காணப்பட்ட போதும் சட்டத்தின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரமாகத் திரிந்தார்கள். இந்நாட்டில் நிலவும் யுத்தச் சூழ்நிலையால் காணாமல் போவதும் கொலை செய்யப்படுவதும் வெகுதாராளமாக நடைபெற்று வருகிறது. பயங்கரவாதிகள் என்ற பெயரில் பல அப்பாவிகள் பரிதாபமாக கொலை செய்யப்பட்டுவருகின்றனர். இவற்றையெல்லாம் தட்டிக் கேட்கும் தகுதி எவருக்கும் கிடையாது.

தாங்கள் பிறந்த பிரதேசத்தை விட்டு, உற்றார் உறவினரை விட்டகன்று எங்கேயோ கண்காணாத பிரதேசத்தில் தமது உயிரைப் பறிகொடுக்கின்றனர் பலர். இவ்வாறு மாண்டு மடிவோரை சடலங்களாகத்தான் பெற்று அவற்றுக்கு உரிய மரியாதையுடன் கூடிய இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கும் முடியாத பரிதாபநிலையில் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் வதைபட்டு வருந்துகின்றனர்.

காணாமல் போவதென்பது ஒரு பயங்கரத் தொற்றுநோய் போல் பரவி வருவதைத் தடுத்தாக வேண்டும் என்ற நோக்குடன் 'காணாமல் போனோரை நினைவு கூர்வதற்கான அமைப்பு' ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஆசிய மனித உரிமைகள் கமிஷனின் துணையுடன் சீதுவை என்ற இடத்தில் காணாமல் போனோருக்காக ஒரு நினைவுச்சின்னத்தை நிறுவியுள்ளனர். இந்த வருடம் பெப்ரவரி மாதம் 4ம் திகதி சுதந்திரத்தினத்தன்று இந்த நினைவுச்சின்னம் திறந்து வைக்கப்பட்டது.

மேற்கொண்டும் காணாமல் போதல் போன்ற அநாகரிகமான சம்பவங்கள் இந் நாட்டில் நடைபெறாமல் தடுப்பதற்காக விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு இதற்கான அமைப்பு பல திட்டங்களை வகுத்துள்ளது.

காணாமல் போனோரின் நினைவுக்காக வருடத்தின் ஒருநாளை பிரகடனப் படுத்துவதற்காக இவ்வமைப்பு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறது. இதற்காக ஒக்டோபர் 27ம் திகதியை காணாமல் போனோர் தினமாக பிரகடனப்படுத்தும்படி ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

சீதுவையிலுள்ள காணாமல் போனோருக்கான நினைவுச் சின்னத்தின் சுவர் ஒன்றில் காணாமல் போனோரின் 2000 புகைப் படங்களை வைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

மேற்படி விபரங்களை காணாமல் போனோரின் நினைவுச் சின்ன அமைப்பின் செயலாளர் ஜெயந்தி தந்தனியா ஓர் அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பு:-

இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த காணாமல் போன நபர்களின் நினைவைக் கருத்தில் கொண்டே இத்தகைய அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருப்பதாக எமக்குத் தெரிகிறது. யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் பிரதேசங்களிலும் காணாமல் போனோரின் உறவினர்கள் சங்கங்கள் அமைத்து அவ்வப்போது தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

காணாமல் போவோர்பற்றிய பிரச்சனை பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமல்ல. சிறுபான்மை மக்களுக்கும் இது ஒரு பெரும்பிரச்சனைதான். ஆகவே இரு இனத்தவர் ஒன்றுபட்டு ஒரேகுரலில் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதே உரிய பலனை அளிக்கும் என்று முரசு கருதுகிறது.

## அலசுவது - இராஜதந்திரி

# வன்முறைகள், யுத்தக்கெடுபிடிகள் சூழ்ந்த தேர்தல்களம்

ஒரு புறம் வன்முறைகள் கட்டுமீறியுள்ள அதே சமயம், மறுபுறம் மோசமான யுத்தம் சூடுபிடித்துள்ள ஒரு சூழ்நிலையிலேயே இலங்கையில் இத்தடவை பொதுத் தேர்தல் இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி கடந்த பொதுத்தேர்தலின்போது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இலங்கை எதிர்நோக்கும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்போவதாக வாக்குறுதியளித்திருந்தது.

ஆனால் கடந்த ஆறுவருடகால பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்திலேயே வடக்கு கிழக்கில் என்றுமில்லாதவாறு

ரத்வத்தவின் மகன் மீதும், அவரது சகாக்கள் இருவர் மீதும் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ஆளுங்கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவர், குறிப்பாகப் பாதுகாப்புத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ரத்வத்தவின் மகனே சட்டம், ஒழுங்கை மீறுமளவுக்கு நடந்துள்ளாரெனில், ஏனைய சாதாரண விஷமிகள் எவ்வளவு தூரம் தமது கைவரிசையைக் காண்பித்திருப்பார்கள் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கிழக்கிலங்கையில் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா பயணஞ்செய்த மோட்டார் காரும் துப்பாக்கி நபர்கள் சிலரின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது.

மக்கள் மத்தியில் அச்சமோ, ஒளிவு, மறைவோ இன்றி நடமாடுமளவுக்கு மேன்மை பெற்றிருந்தார்.

தேர்தல் காலங்களில் யாழ்ப்பாணத்துக்குச் செல்வதாயின் கொழும்பிலிருந்து ரயில்வண்டி மூலமாகவே சென்று, தமது நடவடிக்கைகளை தாமே மேற்கொண்டு மக்களோடு மக்களாக அந்நியோன்யத்தை தந்தை செல்வநாயகம் பேணியிருந்தார்.

இந்த இரு தலைவர்களைப்போலவே அன்று ஏனைய அரசியல் தலைவர்கள் பலரும் தமது கௌரவத்தையும், தாம் சார்ந்த அரசியல் கட்சிகளின் கௌரவத்தையும் காத்துவந்தனர்.

ஆனால் இன்று அனைத்துமே தலைகீழாக மாறியுள்ளன. தேர்தல்களில் வேட்பாளர்களாக நிற்பதற்குக் கூடத்

மோசமான இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று பெருமளவிலான உயிர்ச் சேதமும் நேர்ந்திருப்பதைக் காணமுடிகின்றது.

தற்போது தேர்தல் இடம்பெறவுள்ள தருணத்தில் கூட வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மராட்சிப் பிரதேசம் கெடுபிடி யுத்தத்துக்குள்ளாகியிருப்பதுடன் படைத்தரப்பிலும், புலிகள் தரப்பிலும் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகியுள்ளனர். மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் உடல் ஊனங்களைக் கொண்டிருக்குமளவுக்குக் காயமுற்றுள்ளனர்.

தென்னிலங்கையில் தேர்தல் வன்முறைகளைப் பொறுத்தவரை ஜே.வி.பி. என்றழைக்கப்படும் ஜனதா விமுக்தி பெரமுனவைச்சேர்ந்த உறுப்பினர் ஒருவர் இத்தடவை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட காலப்பகுதியில் கொழும்பில் வைத்து இனந்தெரியாதவர்களால் அடித்துக் கொல்லப்பட்டிருந்தார்.

தற்போது வாக்களிப்பு நடைபெறவுள்ள தறுவாயில் மாத்தளைப்பகுதியில் மற்றுமொரு ஜே.வி.பி. உறுப்பினர் ஆர்ப்பாட்டமொன்றில் பங்குபற்றியிருந்த வேளை பொலிஸார் சுட்டதில் உயிரிழந்துள்ளார்.

இதுதவிர வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் கடந்த ஒருமாதகாலத்தில் சிறிதும், பெரிதுமாக கொலைகள், தீவைப்பு, குண்டுவீச்சு உட்பட எண்ணூறு வன்முறைச் சம்பவங்கள் வரை நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கிடையில் கூட போட்டி பூசல்கள் ஏற்பட்டு மோதல்கள் நிகழ்ந்துள்ளன. அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் என்ற பதவிகளில் இருப்போர் கூட தமது 'அடியாட்கள்' சகிதம் தமது தரப்பைச் சேர்ந்தவர்களுடனேயே மோதிக் கொண்டுள்ளனர்.

ஆளுந்தரப்பில் இருப்போர் எவ்வளவு தூரம் தமது அதிகாரங்களைத் துஷ்பிரயோகஞ் செய்கின்றனர் என்பதற்கு கண்டியில் கடந்தவாரம் நிகழ்ந்த ஒரு சம்பவம் நல்லதோர் எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

மின்சக்தி அமைச்சரும், பிரதிப்பாதுகாப்பமைச்சருமான அனுருத்த ரத்வத்தவின் மகன் சானுக்க என்பவரும் அவரது இரு கூட்டாளிமார்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கண்டி நீதிபதி முன்பாக நிறுத்தப்பட்டனர். இதன்பின்னர் நீதிபதி இவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தின் ஐ.தே.க. வேட்பாளர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவே அனுருத்த

இச்சம்பவத்தில் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெய்வாதீனமாக உயிர்த் தப்பியுள்ளார்.

இலங்கையில் இத்தடவை பொதுத் தேர்தலைக் கண்காணிக்க ஏராளமான சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் வந்துள்ளனர். இவர்களில் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த அவதானிகள் முக்கியமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டிலுள்ள தேர்தல் மாவட்டங்கள் பலவற்றுக்கும் பயணஞ்செய்த ஐரோப்பிய யூனியன் அவதானிகள், தேர்தல்வன்முறைகள் அதிகரித்துவருவதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் பொலிஸார் வன்முறைகள் குறித்துப் பாராமுகமாக இருப்பது சம்பந்தமாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரை வன்முறைக் கலாசாரம் என்பது கடந்த ஒரு தசாப்த காலத்தில் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு ஆட்சியதிகாரங்களில் இருப்போரின் அதிகாரத் துஷ்பிரயோகங்களும், வடக்கு-கிழக்கில் நீடித்துச் செல்லும் யுத்தத்தின் காரணமாகத் தோன்றியுள்ள பலதரப்பட்ட பிரச்சனைகளுமே மூலகாரணங்களாக இருக்கின்றன.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற தேர்தல்கள், அவற்றுக்கான பிரசாரங்கள் என்பவை மிகவும் சுமுகமானவையாகவே இருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபலம் மிக்க பிரதமராக இருந்த காலஞ்சென்ற டட்லி சேனநாயக்கா அவர்கள் தமது தரப்பினருக்காகப் பிரசாரங்களைச் செய்வதற்காக தாமே தமது மோட்டார்காரைச் செலுத்தியவராக நாட்டின் பல பாகங்களுக்கும் சென்றிருந்தார்.

மெய்பாதுகாப்பாளர்களோ, அல்லது அவரது வண்டிக்குப்பின்னால் ஆதரவாளர்களது வாகனவரிசையோ அப்போது காணப்படவில்லை.

மக்களபிமானத்தைப் பெற்றவராக விளங்கிய அமரர் டட்லி சேனநாயக்கா மக்கள் மத்தியில் அச்சமின்றி நடமாடினார். தனது கௌரவத்தையும் மக்களுடனான உறவையும் அப்பழுக்கற்ற விதத்தில் அவர் மிக உயர்வாகவே பேணியிருந்தார்.

அமரர் டட்லி சேனநாயக்கா அவர்களைப் போலவே தமிழ்த்தலைவர் அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் கூட



மாத்தளையில் சுடப்பட்டு இறந்த ஜே.வி.பி. உறுப்பினர் எ.டி. சிறிதேவவின் பிரேத ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தும் பொலிஸார். (நன்றி: டெய்லி மிரர்)

தகுதியற்ற பலர் மக்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் செல்ல எத்தனிக்கின்றனர்.

தனிப்பட்டமுறையில் தமக்கென மெய்பாதுகாப்பாளர்களை வைத்துக் கொண்டும், அவர்களுக்கு நவீன ஆயுதங்களை வழங்கியும் அடாவடித்தனங்களில் தேர்தல் வேட்பாளர்கள் நடந்துவருவதை அவதானிக்கமுடிகின்றது.

தேர்தல் பிரசாரங்களில் குதிக்கும் வேட்பாளர்களைச்சுற்றிவர ஏராளமான மெய்பாதுகாவலர்கள் அபாயகரமான ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர்.

இது தவிர தேர்தலில் போட்டியிடும் முக்கிய அரசியல்வாதிகள் தாம் பயணஞ்செய்ய வேண்டிய இடங்களுக்கு ஆகாய மார்க்கமாக ஹெலிகாப்டர்களைக் கூட சர்வ சாதாரணமாகவே பாவிப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இருபது வருடங்களுக்குமுன்னர் இருந்த அரசியல்வாதிகள் மக்களிடையே மக்களோடு மக்களாக கலந்துறவாடுமளவுக்கு தமது பாதுகாப்பைத் தாமே உறுதி செய்து கொண்டனர்.

ஆனால் இன்றைய அரசியல்வாதிகள் மக்களிடமிருந்து தம்மைத் தொலைவில் வைத்த நிலையிலேயே தமக்கெனப் பிரசாரங்களைச் செய்து வருகின்றனர். இதன் மூலம் இன்றைய அரசியலாளர்கள் மக்களபிமானத்தை எவ்வளவு தூரம் இழந்துள்ளார்கள் என்பது புலனாகின்றது. அத்துடன் வன்முறைக் கலாசாரம் கூட

இன்றைய தேர்தல் அரங்குகளை எவ்வளவு தூரம் ஆட்டிப்படைக்கின்றதென்பதையும் அவதானிக்க முடிகின்றது.

தென்னிலங்கையில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ள அதேசமயம் வடக்கே யுத்தம் பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

தென்மராட்சிப் பகுதி ஒரு யுத்தவலயமாக மாறியுள்ள நிலையில் அங்கே தமது நிலபுலன்களை கைவிட்டு மக்கள் வடமராட்சி மற்றும், வலிகாமம் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த வாரங்களில் தென்மராட்சியில் 'கினிஹிர' எனப்பெயரிட்டு ஆயுதப்படையினர் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தனர். ஆனால் புலிகளும் இதற்குப் பதிலடியாக 'ஓயாத அலைகள்' என்ற தாக்குதலை படையினருக்கு எதிராக தென்மராட்சியில் ஆரம்பித்துள்ளனர்.

புலிகளது 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை முக்கியமானதொன்றாகும். ஏனெனில் முல்லைத்தீவு இராணுவ முகாமைக் கைப்பற்றும் நடவடிக்கையில் ஆரம்பிக்கப்பட்ட புலிகளது ஓயாத அலைகள் தாக்குதல் மூன்று கட்டங்களைத் தாண்டியதாக இருக்கின்றது.

முதலாவது ஓயாத அலைகள் தாக்குதலில் முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளிடம் முழுஅளவில் வீழ்ச்சிகண்டது. இதன் பின்னர் இரண்டாவது, மூன்றாவது தாக்குதல்கள், கிளிநொச்சி, வன்னிப்பிரதேசங்களில் புலிகளுக்கு முக்கிய வெற்றிகளைக் கொடுத்ததுடன், ஆனையிறவுத் தளத்தையும் வீழ்ச்சியுறச் செய்திருந்தன.

இவற்றையடுத்து தற்போது தென்மராட்சிப் பகுதியில் ஓயாத அலைகள் தாக்குதலைத்தொடுத்துள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். இவ்வறிப்பை நோக்குகையில் வெற்றி, தோல்விகளைவிட தென்மராட்சிப்பிரதேசம் 19ம் நூற்றாண்டுக்கும் அப்பாற்பட்ட ஒரு காலப்பகுதிக்கு செல்லவுள்ளதையே தெளிவாக அனுமானிக்க முடிகின்றது.

ஏற்கனவே யுத்தக் கெடுபிடிகளினால் சல்லடைபோடப்பட்டு மிகவும் உயர்வான வாழ்க்கைத் தரத்தோடு இருந்த தென்மராட்சிப் பிரதேசம் துவண்டு, துவம்சமாகிப் போயுள்ளது.

பாடசாலைக் கட்டிடங்கள், வீடுமனைகள், வர்த்தகமையங்கள் என்பவை நிர்மூலமாகி மனித சஞ்சாரமற்ற வனாந்தரமாக தென்மராட்சி மாறிப்போயுள்ளது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை தற்போதைய தேர்தல் முடிவுற்றதும் தேர்தல் வன்முறைகளும் தணிந்து புதிய பாராளுமன்றமும் கூட்டப்படலாம்.

ஆனால் வடக்கு-கிழக்குப்பிரதேசங்களைப் பொறுத்தவரை அங்கே தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு ஒரு சுமுகநிலை எப்போது தோன்றும்? என்பது விடைகாணமுடியாத கேள்வியாக இருக்கின்றது.

தென்னிலங்கையின் தேர்தல் பிரசாரங்களை எடுத்து நோக்கினால் யுத்தத்தை நிறுத்தி ஒரு நேர்த்தியான அரசியல் தீர்வை வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாகக் கொண்டு வருவது பற்றி எந்தவொரு அரசியல் கட்சியும் ஆணித்தரமாகப் பேசுவதாக இல்லை.

எனவே பொதுத்தேர்தல் முடிந்த பின்னரும் யுத்தமென்பது வடக்கு-கிழக்கில் தொடர்ந்து இடம்பெறும் சாந்தியங்களே பலமாக இருக்கின்றன.

1977ம் ஆண்டிலேயே வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இறுதியாக ஒழுங்கான முறையில் பொதுத்தேர்தல் இடம்பெற்றது. அத்துடன் வடக்கு-கிழக்கு மக்கள் கூட தமது அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தி, சுதந்திரமாகவும் அச்சமற்றமுறையிலும் 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஒரே அணி, ஒரே கொள்கை என்ற அடிப்படையில் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தனர்.

ஆனால் 1977ம் ஆண்டின்பின்னர் கடந்த 23 ஆண்டுகாலத்தில் வடக்கு-கிழக்கு மக்களால் ஒரு நேர்த்தியான தேர்தலில் பங்குபற்றும் வாய்ப்பு மட்டுமல்ல. கொள்கைப்பிடிப்பும், நேர்மைத்திறனும் கொண்ட பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் தெரிவு செய்ய முடியாமலேயே இருக்கின்றது.

இந்நிலையில் தேர்தல்கள் வந்துபோகலாம். ஆனால் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை, அப்பிரதேச மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வெற்றிகரமான அரசியல் தீர்வுகள் ஏற்படாதவரை அழிவுகளும், அனர்த்தங்களுமே தொடருமென்பதை அனுமானிக்க முடிகின்றது.

தென்னிலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் நடவடிக்கைகளும் வடக்கு-கிழக்கில் தொடர்ந்து செல்லும் யுத்தமும், இனப்பிரச்சனைத் தீர்வுக்கான சூழ்நிலைகளைத் தட்டிக்கழித்தே வருகின்றன.

இன்னும் சில தினங்களில் புதிய பாராளுமன்றம் கூட்டப்படலாம். அத்துடன் புதிய முகங்களும் பாராளுமன்றத்தினுள் பிரவேசிக்கலாம்.

ஆனால் இலங்கையின் முழு அளவிலான சுமுகநிலை, மற்றும் அபிவிருத்தி என்பவை வடக்கு-கிழக்குப்பிரச்சனைக்கான அரசியல் தீர்விலேயே பெரிதும் தங்கியுள்ளன.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தட்டிக்கழிப்பதன் மூலமோ அல்லது அப்பிரச்சனைக்குப் பரிகாரமாக யுத்தத்தை முன்னெடுப்பதன் மூலமோ நாட்டில் அமைதியையும், அபிவிருத்தியையும் எதிர்பார்க்க முடியாது.

எனவே இலங்கையின் 21 ம் நூற்றாண்டின் வளர்ச்சி, அபிவிருத்தி என்பவை வன்முறைகள், யுத்தக்கெடுபிடிகளுக்கு மத்தியில் வெளியாகும் தேர்தல் முடிவுகளிலல்ல. வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான முற்று முழுதான அரசியல் தீர்விலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளதெனக் கருதலாம்.

## அதிரடி அய்யாத்துரை



**ஒலிம்பிக் போட்டி**களில் சுசந்திகா உறுதி தளராது வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார். ஏனைய இலங்கை போட்டியாளர்கள் தோல்விகளைத் தழுவியபோது சுசந்திகாவும் கோட்டை விட்டு விடுவாரோ என்று எண்ண வேண்டியிருந்தது. ஆனால் வென்றுவிட்டார். அரசியல் ரீதியாகவும், பொறாமை கொண்டோராலும் சுசந்திகாவுக்கு நிறையவே அழுத்தங்கள். ஆனால் அவர் மனந்தளராது தனது திறமையை வெளிக்காட்டிவிட்டார். இரண்டாமிடத்தை ஒருபுள்ளி வித்தியாசத்திலேயே தவறவிட்டார். பிரச்சனைகள் இல்லாவிட்டால் முதலாமிடத்தைக் கூட சுசந்திகா வென்றிருக்க முடியும்.

**பத்திரிகைகளில் அரசியல்வாதிகளின்** பெயர்கள், படங்களே வெளியாகியிருந்த தருணத்தில் சுசந்திகாவின் புகழ் அனைத்து இடங்களிலும், ஊடகங்களிலும் உலகலாவிய ரீதியில் வெளிவந்த வண்ணமுள்ளது. சுசந்திகாவுடன் முட்டிமோதிய அரசியல்வாதிகளும் வாலைச்சுருட்டிக் கொண்டிருக்க வேண்டியதாயிருக்கிறது.

**குருநாகல் மாவட்டத்தில் அண்மையில்** இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க பொ.ஐ.ஐ.மு.சார்பில் போட்டிபோடுகிறார். பிரசாரங்களுக்காக தமது தொகுதி கிராமங்களுக்கு அவர் போகும்போது இராணுவத்திலிருந்து தப்பிவந்து தலைமறைவாக இருப்போர் அவரைக் கண்டு ஓடி மறைகின்றனராம். முன்னாள் வடபகுதி தளபதியாக இருந்தவர். அதனால் தாம் மாட்டுப்பட்டால் என்ன செய்வதென்றே அப்பேர்வழிகள் ஒடித்தப்புகின்றனராம்.

**அமைச்சர் அஷ்ரப்பின் மறைவு** ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து மீள முன்னரே, பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா மீது கொலை முயற்சி நடந்துள்ளது. கிழக்கிலங்கையின் இளந்தலைமுறை அரசியல்வாதி ஹிஸ்புல்லா. எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்குது என்று தெரியாத சூழலில் அரசியல் நடக்குது. வன்முறைகளும் அரசியல் கலாசாரத்தோடு இரண்டறக் கலந்து விட்டதால் எச்சரிக்கையோடு இருக்கவேண்டியவராகிறார் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா.

**நவராத்திரிகாலம், கல்வி, செல்வம் என்று** அமைதியாக இருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்விக் கூடங்களும், பணங்கொழிக்கும் விளைநிலங்களும் வீணாகிப் போயிருக்குது. ஆனால் ஆயுத பூசை மட்டும் குறைவின்றி கோலாகலமாக நடக்குது. கோயில் மணி ஓசைகள் துயில் எழுப்பிய பூமியில் கனரக ஆயுதங்கள் முழக்கமிட்டு மீளாத்துயில் கொள்ளச் செய்கின்றன.

காண்களைத் தேய்த்துக் கொண்டார். துளியும் சந்தேகமில்லை; மிரண்டு போய் எழுந்தார். பின் நிலவுக் காலத்தின் பிறை வெளிச்சம், பசிய செடிகளையும் மரக்கிளைகளையும் கரும் பச்சையில் குளிக்க வைத்திருந்தது.

என்றாலும் அந்த ஓலைக் குடை மட்டும் மஞ்சளாக வட்டமாக நகர்ந்து கொண்டிருந்தது.

பக்கத்து மனையில் குடியிருந்த கேசவன் பட்டத்திரியின் அதே வேகத் தோடு.... வேலி ஓரத்திலிருந்த வண்டிப் பாதையில் போய்க் கொண்டே இருந்தது குடை. ஐஸாக் அனிச்சையாக இயங்கினார். பரபரப்பாக வந்து வேலிப் படலை அவிழ்த்து கிழக்குத் திசையைப் பார்த்தார். வயிறு கலங்கியது.

குடை மட்டும் போகிறது...

நடுநடுங்கிப் போனார் ஐஸாக், "கர்த்தரே!" என்று கத்தினார். திண்ணை வந்து கால்களைக் கட்டிப் பிடித்தபடி கூனிப் போய் உட்கார்ந்துவிட்டார். அதற்குப் பிறகு அவர் கண்களைத் திறந்த போது,

எதிரில் பிலோமினா.

மனைவியைக் கண்டபிறகுதான் ஆசுவாசம் வந்து, "பட்டத்திரி போறாரு, பட்டத்திரி போறாரு.." என்று புலம்பினார்.

'அவ தந்திரம் தனக்கு அந்தரம்' என்பார்கள். அடுத்த வீட்டில் வாழ்ந்த ஒண்டிக்கட்டையான பூசாரியாரை ஏமாற்றிக் கொலை செய்து அவருடைய சொத்தைத் தனதாக்கிக் கொள்ளத் திட்டமிட்ட பேராசைக்காரன் தான் செய்த பாவத்தை மன்னிக்கும்படி பாதிரியாரிடம் கோரிக்கை விடுத்தான்.

அவனால் ஏமாற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பூசாரியின் உருவமாக பாதிரியாரே தோற்றமளித்தார். தன்னைத்துரத்தி வரும் பூசாரியாரின் ஆவியிடமிருந்து தப்பிப் பிழைக்க ஊரைவிட்டே ஓட முயன்ற பேராசைக்காரனுக்கு என்ன நடந்தது....? மாயாஜாலக்கதை மன்னர் இருகூரான் தரும் இன்னொரு இருவாரத்தொடர்.

# பட்டத்திரியின் வெட்டிக்குடை



## இருகூரான்

கேசவன் பட்டத்திரி வெள்ளி மலை விப்ர நாராயணர் கோவிலுக்குப் பிரபாத பூஜை செய்யப் போவதில் என்ன ஆச்சர்யம்?

"அவர் அவரோட கடமையைச் செய்யறாரு. நம்ம கடமையை நாம செய்ய வேண்டாமா? இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. நாரணன் துறை மாதா கோவில்லே ஜெபத்துக்குப் போகணும்:

"சீக்கிரம் ஆயத்தப்படுங்க!" என்றபடியே துடைப்பத்தை எடுத்து முற்றம் பெருக்க ஆரம்பித்தாள்.

"நீங்கள் ஆயத்தப்பட்டாத்தான், குழந்தைகளும் ஆயத்தமாகும்...." என்று முனகினாள்.

'சரக் சரக், என்று சருகும், மண்ணுமாக ஒதுங்கும் குப்பைகளைப் பார்த்துக் கொண்டே இருந்தார் ஐஸாக். மனத்திலும் குப்பை மண்டியது. கேசவன் பட்டத்திரியின் மனையைத் தன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவர் மேற்கொண்ட குறுக்குவழி குற்றமாய்க் குவிந்தது.

பாவத்தின் அம்பாரம்! மனைவியிடமோ, மக்களிடமோ கூடச் சொல்லாத ரகசியம்! மாதா கோவில் பாதிரியாரிடம் பாவமன்னிப்புக்காக மண்டியிட்ட போது ஐஸாக் தன் மனபாரத்தை இறக்கி வைத்தார்:

"வெள்ளி மலையை விட்டுப் போகணும்னு பட்டத்திரி சொல்ல ஆரம்பிச்சதுமே அவர் மனையையும் என் மனையோடு சேர்க்கிற ஓர் ஆசை வந்தது ஃபாதர். ஆனா வாங்கற அளவுக்கு ரொக்கம் கையிலே இல்லை! அதனாலே எனக்கு வேற வழியும் தெரியலே! ஒண்டிக் கட்டையான அந்தப் பட்டத்திரியைப் பணம் கையிலே இருக்கறதா நம்ப வச்சு நகரத்துக்குப் போனேன். பத்திரம் பதியறப்ப, 'ஐயையோ பையை எடுத்துட்டு வரலையே' அப்படின்னு காதிலே ரகசியமாச் சொன்னேன்'அதுக்கு என்னய்யா, பரவாயில்லை! இல்லம் வந்துட்டுத்தானே. எல்லாத்தையும் எடுத்துட்டு நாளைக்குப் போகப் போறேன்? அப்ப கையிலே குடும்போதும்'னாரு பட்டத்திரி. அதையே மூலதனமா வச்சு பத்திரமும் பதிவு செஞ்சு எடுத்துட்டேன்.

வரும் வழியிலே வண்டியை நடுவிலே நிறுத்தி ஒரு புதர்மறைவிலே ஒதுங்கினாரு. அப்பப் பார்த்து அவர் கழுத்திலே துண்டைப் போட்டு இறுக்கிக் கொலை செஞ்சு, அங்கிருந்த ஒரு பாழுங் கிணற்றிலே போட்டுட்டேன் ஃபாதர்.

ஆனா செத்துப் போன பட்டத்திரி மூணாம் நாள்..... அதே ஓலைக் குடையோட.... என் வீட்டு வாசல் வழியா... பிரபாத பூஜைக்குப் போறாரு! இது எப்படி? எப்படி?"

புலம்பிக் கொண்டே இருந்தார் ஐஸாக். பீடத்தின் கூண்டுக்குள் இருந்த பாதிரியார் எந்தப் பதிலும் கூறவில்லை. ஆறுதலுக்கு அவர் எதையாவது சொல்வார் என்று காத்திருந்தவருக்கு பாதிரியாரின் நீண்ட மவுனம் பெரும் சோதனையாயிற்று. அதே நேரம்,

சில்லிட்டுப் போன ஒரு கையின் ஸ்பரிஸம்!

திடுக்கிட்டு அலறினார்.

"நான் தான் மகனே! நீ செய்தது நம்பிக்கை மோசடி மட்டுமில்லை; கொலை பாதகமும் கூட," என்று அமைதியாகக் கூறிவிட்டு நடந்தார் பாதிரியார்.

மனைவியும் மக்களும் ஜெபக் கூட்டம் முடிந்ததுமே வெளியே சென்று விட்டனர். எனவே பாதிரியாரைப் பின் தொடர்ந்தார் ஐஸாக்: "ஏதாவது ஒரு பரிகாரம் சொல்லுங்கள் ஃபாதர்!."

பாதிரியார் திரும்பிப் பார்த்தார்.


தூக்கிவாரிப் போட்டது.

மாதா கோவில் பாதிரியாரின் உருவத்திலும் அதே பட்டத்திரியின் முகமா?

நிமிர்ந்து பார்க்கும் திராணியில்லாமல் "கர்த்தரே!" என்று கத்தினார், ஐஸாக்.

(அடுத்தவாரமும் வரும்...)

# முதல்வர் நடத்திய யாகம்



இந்திய அரசியல்வாதிகள் செய்வதை எல்லாம் செய்து விட்டு, பின்னர் யாகம் நடத்திப் பாவங்களைக் கழுவிக்கொள்ள முயற்சிப்பார்கள். தமிழகத்தில் பல அரசியல்வாதிகள் யாகங்களை நடத்தியுள்ளார்கள்.

அண்மையில் கர்நாடக மாநில முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா தனது வீட்டில் பெரும் யாகத்தை நடத்தியுள்ளார்.

பட்டுப்புடவைகள், நகைகள் உட்பட பல விலையுயர்ந்த பொருட்களை வைத்து 60 புரோகிதர்கள் நடத்திய 'சதா சண்டிகா' என்ற அந்த யாகத்தில் முதல்வர் எம்.எஸ்.கிருஷ்ணா, அவர் மனைவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சரி, எதற்காக இந்த யாகம்?

சந்தனக்கடத்தல் வீரப்பனால் கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட விவகாரத்தால் தனது பதவிக்கு எந்த விதத்திலும் ஆபத்து ஏற்படாமல் இருக்கத்தான் இந்த யாகம் நடத்தப்பட்டது.

இது வெளியே தெரியக் கூடாது என்பதற்காக, ராஜ்குமார் நலமுடன் திரும்பி வருவதற்காக நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் யாகத்தின் முக்கிய நோக்கம் ஆட்சியைக் காப்பாற்றத்தானாம்.

# கம்பி எண்ணும் காதலன்

பல்கலைக்கழக மாணவனான தன் காதலன் தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி விட்டதாகக் குற்றஞ்சாட்டி அவனைக் கம்பி எண்ண வைத்துவிட்டாள் ஹொங் கொங் நாட்டைச் சேர்ந்த ஒரு யுவதி.

தப்புச் செய்தால் தண்டனையை அனுபவிக்கத்தான் வேண்டும் என்கிறீர்களா? அந்தப் பல்கலைக்கழக மாணவன் தனது காதலியின் அனுமதியுடன் தான் அவளுடன் சேர்ந்தான்.

அப்படியானால் ஏன் குற்றஞ்சாட்டினாள் அந்தப்பெண்? தன்னுடன் சேரும் போது ஆணுறை அணிய வேண்டும் என்று கூறியிருந்தாள் அவள். ஆனால் காதலன் அப்படிச் செய்யவில்லை.

இதனால் கோபமடைந்த காதலி அவன்மீது வழக்குத் தொடுத்து 3 வருட சிறைத்தண்டனையையும் பெற்றுக் கொடுத்துவிட்டாள்.

ஒரு பெண்ணுடன் விருப்பத்திற்கு மாறாக உறவு கொண்டால் அவர் மனைவியானாலும், அது பாலியல் வல்லுறவுதான் என்கிறது சட்டம்.

# அடுத்த வாரிசு அல்கோர்



இங்கு பாராளுமன்றத்தேர்தல் பிரசாரம் மும்முரமாக நடந்து வருவதுபோல், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் போரும் சூடு பிடித்துள்ளது.

இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய அமெரிக்க உபஜனாதிபதி அல்கோரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் மகன் ஜூனியர் புஷ்ஷும் குதித்துள்ளனர்.

"பிரசாரத்தின் போது கிளின்ரன் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறும்படியும், அதே சமயம் கிளின்ரனோடு பிரசார மேடைகளில் தோன்ற வேண்டாம் என்றும்" ஒரு பகுதியினர் அல்கோருக்கு அறிவுரை கூறுகின்றனர்.

இதற்குக் காரணம் கிளின்ரன் - மோனிக்கா கிளுகிளு விவகாரம் தான். இது அல்கோரை பாதித்துவிடும் என்பது தான் அவர்களது கவலை.

இன்னொரு பகுதியினரோ, "என்னதான் சொன்னாலும் கிளின்ரனின் மீதிருக்கும் கவர்ச்சிக்கு மயங்கும் வாக்காளர்களும் பலர் இருக்கின்றனர். எனவே கிளின்ரனையும் பிரசாரத்தின்போது அழைத்துச் செல்லுங்கள்" என்று அறிவுரை கூறியுள்ளனர்.

"அடுத்த வாரிசு அல்கோர்" என்று கூறிவிட்டு ஒதுங்கிவிடும்படி கிளின்ரனைக் கேட்டுள்ளார் அல்கோர்.

# ஏமாற்றிய ஜேம்ஸ்பொண்ட்

உலகின் மூலை முடுக்குகளில் இருக்கும் பலராலும் விரும்பப்படும் ஜேம்ஸ் பொண்ட் பட நாயகன் பியர்ஸ் புரோஸ்னன் இந்தியர்களை ஏமாற்றி விட்டார்.

இவர் 'ஓமேகா' கடிகாரத்தின் விளம்பரத் தூதுவராக அண்மையில் செல்லவிருந்தார். அப்படியே இந்தியப் பயணத்தை முடித்துவிட்டு தலாய்லாமாவைத் தரிசித்து விட்டு நாடு திரும்பவிருந்தார்.

ஆனால் இந்தியா செல்லாமல் தலாய்லாமாவை மட்டும் தரிசித்துவிட்டு தாய் நாடு திரும்பிவிட்டார் பொண்ட். இதனால் இந்தியத் தலைநகர் புதுடில்லி மற்றும் மும்பாய் இரசிகர்களுக்குப் பெருத்த ஏமாற்றம்.

ஏன் டில்லி மற்றும் மும்பாய் இரசிகர்கள் மட்டும் ஏமாற்றம் அடைய வேண்டும் என்கிறீர்களா? புரோஸ்னன் இந்தியா சென்று தங்கவிருந்தது இந்த இரு இடங்களிலும் தான்.

# மண் தின்னும் மனிதர்

'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா?' 'பராசக்தி' படத்தில் கலைஞர் மு.கருணாநிதி எழுதிய இந்த வசனத்தை அசத்தலாகப் பேசியிருந்தார் நடிகர் திலகம் சிவாஜிகணேசன்.




இந்த வசனம் கேரளாவைச் சோந்த ராஜன் என்பவருக்குப் பொருந்தும். 35 வயதான ராஜன் மண்ணைக் குவித்து வைத்துக் கொண்டு நாம் சோறு சாப்பிடுவது போல் சாப்பிடுகிறார்.

இவர் இப்படி மண்ணைச் சாப்பிடுவது ஒன்றும் வித்தை காட்டுவதற்காக அல்ல, பசிகொண்டமையால். வேலைகிடைக்காததால் வீட்டைவிட்டு வெளியேறிய இவர் பைத்தியக்காரர் போல் ஆகிவிட்டார்.

பசியின் கொடுமை தாங்காது மண் தின்ன ஆரம்பித்தவர், சிலநாட்களில் இதையே தனது தினசரி உணவாகவும் பழக்கப்படுத்திவிட்டார்.

காய்ந்த மணலை விரும்பிச்சாப்பிடும் இவர், ஈரமண்ணைச் சாப்பிட விரும்புவதில்லையாம். மழை காலம் வந்தால் காய்ந்த மண் இல்லாததால் ஈரமண்ணைச் சாப்பிடுகிறாராம்.




# படபடக்க வைக்கும் பக்தி

← நாகபஞ்சமி தினத்தை இந்துக்கள் சிறப்பாக கொண்டாடுவார்கள். நாகதம்பிரான் ஆலயங்களில் நாகபாம்பு குடியிருக்கும் புற்றுகள் பல இருக்கும். இவற்றின் அருகில் பக்தர்கள் பாத்திரங்களில் பால், பழம் கரைத்து வைப்பார்கள். இதனை நாகபாம்புகள் வந்து குடித்துவிட்டுப் போகும்.

கல்கத்தா நகரிலிருந்து வடக்கே தொண்ணூறாவது கிலோமீற்றரிலுள்ள கடியத்தோலா என்ற கிராமத்தில் ஒரு பக்தன், நாகபஞ்சமி தினத்தன்று கொடிய விஷமுள்ள நாகபாம்பு ஒன்றினைப் பிடித்து அதன் வாய்ப்பகுதியை தனது வாய்க்குள் நுழைத்துக் கொண்டிருப்பதை படத்தில் காண்கிறீர்கள்.

(பட உதவி: ஏ.ரசூல், டுபாய்)

# பூசணிக்காய் பிரமிட்டுக்கள்



தகவல் பெட்டி

↑ உலக அதிசயங்களில் ஒன்றான எகிப்து நாட்டின் பிரமிட்டுக்கள் போல் காணப்படும் இந்த பிரமிட்டுக்கள் அண்மையில் ஜெர்மன் நாட்டில் அமைக்கப்பட்டிருந்தன.

வருகின்ற நவம்பர் மாதம் 5ம் திகதி வரை ஜெர்மனியில் 'பூசணிக்காய் கண்காட்சி' நடைபெறுகிறது. இதற்காக பூசணிக்காய்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பிரமிட்டுக்கள் தான் இவை.



# மகிழ்ச்சிகரமான ஆர்ப்பாட்டம்

← மீன்பிடிப் படகொன்றில் நூற்றுக் கணக்கான பாகிஸ்தானிய மீனவர்கள் ஏறி அமர்ந்து மகிழ்ச்சிகரமான ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தும் காட்சி இது. இந்த ஆர்ப்பாட்டத்தை இவர்கள் நடத்துவதற்கான காரணம் என்ன தெரியுமா? பாகிஸ்தான் அணுகுண்டு வெடிக்க வைத்து பரிசோதனையை சில வருடங்களுக்கு முன்பு நடாத்தியது அல்லவா? இத்தகைய அணுகுண்டு பரிசோதனையை இடைநடுவில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் மீனவர்கள் இறங்கியுள்ளார்கள்.

அத்தோடு மட்டுமல்லாமல் இடைநடுவில் நிறுத்திவிட்ட கஸ்னாவி ஏவுகணைப் பரீட்சைகளையும் உடனடியாக தொடர வேண்டும் என்றும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நத்தை ஓட்டப்போட்டி

↓ மிக மெதுவாக வேலை செய்பவர்களை நத்தை வேகத்தில் வேலை செய்பவர்கள் என்று அழைப்பார்கள். இந்த நத்தைகளை வைத்து ஓட்டப்போட்டி ஒன்றை நடத்தியிருக்கிறார்கள்.

ஸ்பெயின் நாட்டின் ட்ரைக்கோ நகரில் நடந்த இந்தப் போட்டியில் கோமா என்ற நத்தை முதலிடம் பெற்றது. இந்தப் போட்டி 243 மில்லி மீட்டர் தூரத்திற்கு நடந்தது.





# ரிக்ஷா இழுக்கும் ரோபோ

← அண்மையில் ஜப்பான் ஒசாகா நகரில் நடைபெற்ற ரோபோ கண்காட்சியில் பலரது கண்களையும் கருத்தையும் கவர்ந்த ரோபோ இவர் தான்.

அறிவியல் வளர்ச்சியின் சின்ன ஒரு எடுத்துக்காட்டுத்தான் இந்த ரோபோவார். 2001ம் ஆண்டில் சந்தைக்கு அறிமுகமாகவிருக்கும் இந்த ரோபோ, ஜப்பானில் நடந்த 'கன்சாய் ரோபோ 2001' காட்சியில் இடம் பிடித்தார்.

இக்காட்சியில் இந்த ரிக்ஷா இழுக்கும் ரோபோவுடன் இன்னும் பல ரோபோக்கள் இடம் பிடித்திருந்தன.

காட்சியைப் பார்வையிட வந்த சில சிறார்கள், ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்ததும் விறுவிறுவென இழுத்துச் சென்ற காட்சி தான் இது.

இந்த ரோபோவை இயக்க இதன் தலையிலும், மார்பிலும் மின்சார மோட்டார்கள் உள்ளன.

(பட உதவி : ஏ.அரவிந்தன்-மலேசியா)

## கவிதாலயா தயாரிக்கும் 'ஸ்ரீராஜராஜேஸ்வரி'

இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் சின்னத்திரைக்குச் சென்றுவிட்டார். எனினும் அவரது படத்தயாரிப்பு நிறுவனமான கவிதாலயா நிறுவனம் தொடர்ந்து தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது.

'ராஜகாளியம்மன்' என்ற பக்திப் படத்தை வெற்றிப் படமாக்கிய கவிதாலயா நிறுவனம் தற்போது தயாரித்துவரும் படம் 'ஸ்ரீராஜராஜேஸ்வரி'. இதுவும் பக்திப்படம் தான்.

'கன்னாத்தாள்' என்ற பக்திப் படத்தை இயக்கிய பாரதிகண்ணன் இப்படத்தின் கதை-திரைக்கதை எழுதி இயக்குகிறார்.

ராம்கி கதாநாயகனாக நடிக்க ரம்யா கிருஷ்ணன், சங்கவி, பானுப்பிரியா, ஜானவி, வடிவேலு, நிழல்கள் ரவி, விஜுச்சக்கரவர்த்தி, தியாகு, சந்திரசேகர், டெல்லி கணேஷ், பொன்னம்பலம் ஆகியோர் நடிக்கின்றனர்.

ராஜராஜன் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்திற்கு தேவா இசையமைக்கிறார்.

## நக்மாவுக்குப் பதிலாக சுவ...

பிரபு கதாநாயகனாக நடித்து வரும் 'தாலிகாத்த அம்மன்' ... பிரபுக்கு ஜோடியாக கௌசல்யா நடிக்கிறார். இப்படத்தில் ... இன்னொரு ஜோடியும் உண்டு.

பிரபுவுக்கு மற்றொரு ஜோடியாக சுவாதி நடிக்கிறார். இவர் ஏற்... 'கவுண்டர் மாப்பிள்ளை' படத்தில் பிரபுவுடன் நடித்துள்ளார். 'தாலி... அம்மன்' படத்தில் சுவாதி நடிக்க இருந்த வேடத்தில் முதலில் நக்மா... ஒப்பந்தம் செய்துவிட்டுப் பிறகு நீக்கிவிட்டனர்.



பிரகாஷ்ராஜ்-குஷ்பு-மாஸ்டர் கார்த்திக்
படம்: சின்னச் சின்னக் கண்ணிலே

## 'நாகாத்தம்மனாக' ரம்யா...

கே.ஆர்.விஜயாவுக்குப் பின் பக்திப் படங்களி... கதாநாயகியாக அதிகம் நடித்தவர் என்ற சாதனை... ரம்யா கிருஷ்ணன் தட்டிப் பறித்து விடுவார் போல... தெரிகிறது.

ரம்யா கிருஷ்ணன் அம்மனாக தெலுங்கில் நடித்த... படமொன்று 'நாகாத்தம்மன்' என்ற பெயரில் மொழி... மாற்றப்பட்டு வருகிறது.

காதல் ஜோடியாகச் சுற்றித் திரிந்த இரு நாகங்... களில் ஒன்றான பெண் நாகம் விதிவசத்தால் செத்து... போக, தன் காதல் ஜோடி எப்படியும் ஒரு நாள்... மறுபிறப்பெடுத்துத் தன்னை வந்து சேருவாள் என்ற... நம்பிக்கையோடு 100 வருடங்களுக்கும் மேல் காத்... திருக்கிறது ஆண்நாகம்.

இப்படத்தில் அம்மனாக ரம்யாவும், அம்மனின் பக்தையாகவும் நாக கன்னிகையாகவும் இரு வேடங்... களில் மகேஸ்வரியும் நடிக்கிறார்கள். இவர்களுடன் அருண்பாண்டியன், வெண்ணிற ஆடை மூர்த்தி, செந்தில், சார்லி, பப்லு ஆகியோரும் நடித்துள்ளனர்.

தினா இசையமைத்துள்ள இப்படத்தை கே.எஸ்.ஆர்.தாஸ் என்பவர் இயக்கியுள்ளார்.

## கமல் பாடிய பாட்...

கமல் தான் நடித்து வரும் படங்களில் சொந்தக்... பாடி வருவது ஒன்றும் புதிதல்ல. ஆனால் ஏ.ஆர்.ர... இசையில் கமல் இதுவரை பாடியதில்லை.

இப்போது கே.எஸ்.ரவிக்குமார் தயாரித்து இயக்கி... 'தெனாலி' படத்தில் ஏ.ஆர்.ரகுமான் இசையில் ... முறையாகப் பாடியுள்ளார் கமல்.

'ஆலங்கட்டி மழை தலாட்ட வந்தாச்சு....' என... தொடங்கும் பாடலை கமல் பாடினார். 'ஏதோ ... பாட்டு....' உட்பட பல பாடல்களை இயற்றிய கலை... குமார் இப்பாடலை எழுதியுள்ளார்.

**முகப்பில்**
**அருண்குமார்-மீனா**
படம்:
அன்புடன்



பூஜா பட்ரா

## மினி சினி

★ தனது மகன் எபியை கதாநாயகனாக வைத்துப் பல கோடி ரூபா செலவில் எடுத்த 'கோடீஸ்வரன்' படத்தை வரும் தீபாவளி தினத்தன்று வெளியிட முயற்சிசெய்து வருகிறார் தயாரிப்பாளர் குஞ்சுமோன்.

★ 'திருநெல்வேலி' படத்தின் பின் உதயா-விந்தியா இணைந்து நடிக்கும் 'பூங்குயிலே' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார் ரிந்திகா. 'தலைமுறை' படத்தில் லட்சுமி என்ற பெயரில் அறிமுகமானவர்தான் இவர்.

★ நடிகர்-இயக்குநர் ஆர்.பார்த்திபன், தான் எழுதிய கவிதைகளைத் தொகுத்து 'கிறுக்கல்கள்' என்ற பெயரில் புத்தகமாக வெளியிடப் போகிறார். இதைத் தமிழக முதல்வர் மு.கருணாநிதி வெளியிடவுள்ளார்.

★ மு.களஞ்சியம் தயாரித்து இயக்கும் 'மிட்டாமிராசு' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக முதலில் மீனாவை நடிக்கக் கேட்டார்கள். ஏனோ அவர் மறுத்து விட, இப்போது பிரபுவுக்கு ஜோடியாக ரோஜா நடித்து வருகிறார்.

★ கிஸ்ராவோடு 'தேரே மேரே சப்னே' படத்தில் அறிமுகமானவர் ப்ரியா கில். இந்தி-தெலுங்குப் படங்களில் நடித்து வரும் ப்ரியா கில் விரைவில் தமிழில் அறிமுகமாகவுள்ளார்.

★ மம்முட்டி கதாநாயகனாக நடித்திருக்கும் 'துபாய்' என்ற மலையாளப் படத்தில் மம்முட்டி ஜோடியாக இந்தி நடிகை அஞ்சலா சவேரி நடித்துள்ளார். இப்படத்தில் ப்ரீதா விஜயகுமாரும் முக்கிய வேடமொன்றில் நடித்துள்ளார்.

★ சந்தனக்கடத்தல் வீரப்பனை வைத்து ராம்கோபால் வர்மா இயக்கிய 'ஜங்கிள்' என்ற இந்திப்படத்தில் ஒரு பாடல் காட்சியில் ஆடி அசத்திய காஷ்மீரா ஷா தமிழ்ப் படம் ஒன்றில் நடித்து வருகிறார்.

★ அரவிந்தசாமி கதாநாயகனாக நடித்த 'இந்திரா' படத்தை இயக்கிய சுஹாசினி மணிரத்னம் விரைவில் படமொன்றை இயக்கத் திட்டமிட்டுள்ளார்.


## காதோடு சொல்லுகிறோம்

பிரமாண்டமாகப் படம் எடுக்கும் அந்த 'மணி'யான இயக்குநர், தற்போது தனது மனங்கவர்ந்த நாயகியை வைத்து தயாரிக்கும் பக்திப்படத்திற்காக நிறைய கடன் வாங்கியுள்ளாராம். படம் முடிந்து வெளிவரத்தயாராகி இருக்கிறது. இருப்பினும், வாங்கிய கடனைக் கொடுத்தால்தான் படத்தை வெளியிட அனுமதிப்போம் என்று கடன் கொடுத்தவர்கள் முட்டுக்கட்டை போட்டுள்ளனராம்.

சில வருடங்களுக்கு முன் தமிழில் நம்பர் வன்னாக இருந்து அப்போதைய தமிழக மந்திரி ஒருவருடன் கிசுகிசுக்கப்பட்டவர் இந்த நடிகை. இப்போது சுத்தமாக வாய்ப்புக்கள் இல்லாமல் இவர் அடிக்கடி வெளிநாட்டில் இருக்கும் தனது சகோதரி வீட்டிற்குப் போய் வருகிறாராம். அந்த அக்கா வீட்டில் தான் நடிகையின் வாரிசு 'சுக'மாக வளர்ந்து வருகிறதாம்.

சில காலமாகப் பிரிந்திருந்த நண்பர்கள் இருவரும் இணைந்து உருவாக்கிய படம் அண்மையில் வெளியானது. நடிக நண்பரின் வீட்டில் இதற்குப் பலத்த எதிர்ப்பு. எனினும் நண்பருக்காக அந்தப் படத்தில் நடித்துக் கொடுத்தாராம் நடிகர். அந்தப் படத்தில் நடித்ததற்காக நடிக நண்பருக்கு இன்னமும் அந்த தயாரிப்பாளரான நண்பர் ஊதியம் கொடுக்கவில்லையாம்.

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி குமரியான அந்த நடிகை இளம் நாயகனுக்கு ஜோடியாக திருமணத்திற்கு முன் ஒப்பந்தமான படம் அது. நடிகை இன்னும் ஓரிரு நாட்கள் நடித்துக் கொடுத்தால் போதும், படத்தை வெளியிட்டு விடலாம். ஆனால் 'என் மனைவியைத் திருமணத்திற்குப் பின் நடிக்க விடமாட்டேன்' என்று சொல்லிவிட்டாராம் நடிகையின் கணவரான நடிகர்.



ரீமா சென்
படம்: சித்திரம்



## அரசிய...

அரசியலில் ...
நடிகைகளுக்கு ...
ஜெயப்பிரதா, ...
நடிகைகள் விரை...
கட்சிகளில் இணை...
இந்த வரிசையி...



சினி விசிட்

# பூஜாவின் கோபம்

மலையாள இயக்குநர் பிரியதர்ஷனுக்கும் உங்களுக்கும் 'இது'வாமே? என்று இந்தி நடிகை பூஜா பத்ராவிடம் கேட்டார் ஓர் ஆங்கில சினிமா சஞ்சிகையின் நிருபர்.

பூஜாவுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்து விட்டது. பொரிந்து தள்ளிவிட்டார் அந்த நிருபரை.

"முட்டாள்தனமான கற்பனை. இந்தியில் இரண்டு படங்களிலும், மலையாளத்தில் மூன்று படங்களிலும் பிரியதர்ஷன் இயக்கத்தில் நடித்தேன். இதற்காக அவரையும் என்னையும் சேர்த்து முடிச்சுப் போடுவதா?

அப்படிப் பார்த்தால் தபு, பிரியதர்ஷனுடைய இயக்கத்தில் என்னை விட அதிகப்படங்களில் நடித்துள்ளாரே. அவருடன் முடிச்சுப் போடுவது தானே" என்று கோபமாகக் கொட்டினார் பூஜா பத்ரா.

அது சரி பூஜா பத்ரா சொன்னதற்கு தபு என்ன சொல்லப்போகிறாரோ?

# அதிர்ஷ்டசாலி அருண்குமார்

இளம் நடிகர்களில் அழகு, திறமை இருந்தும் அதிஷ்டம் இல்லாதவராக இருந்தார் விஜயகுமாரின் வாரிசு அருண்குமார். இவரது படங்கள் தொடர்ந்து தோல்வி அடைந்தமை இவரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

அண்மையில் இவர் நடித்து வெளியான 'கண்ணால் பேசவா' வசூலுக்குப் பாதகமின்றி ஓடுகிறது. தற்போது இவர் நடித்து வரும் 'அன்புடன்' பலத்த எதிர்பார்ப்புகளுடன் வளர்ந்து வருகிறது.

காரணம் அதில் அருண்குமாருக்கு ஜோடியாக ரம்பா நடிக்கிறார். அத்துடன் இவருடன் சேர்ந்து மீனா ஒரு பாடல்காட்சியில் தோன்றி நடனமாடியிருக்கிறார்.

அடுத்து இவர் ஒப்பந்தமாகியிருக்கும் 'புத்தன்' படத்தில் அருண்குமாருக்கு ஜோடியாக சிம்ரானை நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.


ரம்பா, மீனா, சிம்ரான், ஆகிய முன்னணி நடிகைகளுடன் ஜோடி சேர்ந்து நடிக்கும் அருண்குமார் அதிர்ஷ்டசாலிதான்.

# வி.சீ.குகநாதனின் 'வடுகப்பட்டி மாப்பிள்ளை'

அஜித்குமார்-ரஞ்சித் நடித்த 'மைனர் மாப்பிள்ளை' உட்பட பல வெற்றிப் படங்களை இயக்கிய வி.சி.குகநாதன் இப்போது இயக்கும் படம் 'வடுகப்பட்டி மாப்பிள்ளை'.

விவிங்ஸ்டன்-மும்தாஜ் ஜோடியாக நடிக்க நகைச்சுவையுடன் கூடிய கதை யமைப்போடு உருவாகி வரும் இப்படத்தில் விவேக், வடிவேலு, கோவை சரளா, வினு சக்கிரவர்த்தி, அனுமோகன், வையாபுரி உட்பட பலர் நடிக்கின்றனர்.

இதில் சேகர் பாவனா என்ற இளம் ஜோடியும் இடம்பெறுகிறது.



பிரபு-மும்தாஜ்
படம்: பட்ஜெட் பத்மநாபன்

திரையுலக மறுபக்கம் 169

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

# சினிமாவில் கிரிக்கெட் சூதாட்டக்காரர்?

தென்னிந்தியாவில் பிரபல தயாரிப்பாளர் ஒருவருக்கு கிரிக்கெட் சூதாட்டத்தில் தொடர்பு இருப்பதாக தமிழகத்தில் இருந்து வரும் சினிமா சஞ்சிகை ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

அதிரடி நாயகிக்கு ஒப்பனைக்கலைஞராக இருந்தவர் இப்போது பெரிய தயாரிப்பாளராகி யிருக்கிறார். பலகோடி ரூபாய் செலவில் சூப்பர் நடிகர் இலஞ்ச இலாவண்யத்தை எதிர்க்கும் பாத்திரமேற்று நடித்த படத்தைத் தயாரித்தவர் இந்தத் தயாரிப்பாளர்.

ஆந்திரமாநிலத்தைச் சேர்ந்த இந்தத் தயாரிப்பாளருக்கும், ஆந்திரமாநில கிரிக்கெட் வீரர் அஸாருதீனுக்கும், கிரிக்கெட் சூதாட்டத்தில் நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்று பேசப்படுகிறது.

சில காலத்திற்கு முன் ஆந்திரத்தலைநகர் ஹைதராபாத் நகரில் நடந்த நட்சத்திர கிரிக்கெட் போட்டிக்கு அஸாருதீனை இந்தத் தயாரிப்பாளர் அழைத்து வந்தார். இருவருக்குமிடையே அந்தளவு நெருக்கம்.

அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று வந்து கொண்டிருக்கும் இந்தத் தயாரிப்பாளர், சூதாட்ட விஷயமாக புக்கிகளைச் சந்தித்துப் பேசச் செல்கிறாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

தமிழில் பிரமாண்டமாகப் படமெடுக்கும் பிரபல இயக்குநரை வைத்து இந்தியில் கோடி கோடியாகக் கொட்டிப் படமொன்றைத் தயாரித்து வருகிறார் இந்தத் தயாரிப்பாளர். இந்தப் பணம் கூட கிரிக்கெட் சூதாட்டத்தின் மூலம் தான் வந்திருக்க வேண்டும் என்று பேச்சு அடிபடுகிறது.

தெலுங்குக்காரரான இவர் சென்னையில் உள்ள உல்லாச விடுதியொன்றில் அடிக்கடி பார்ட்டி கொடுத்து வருகிறார். பிரபல புள்ளிகள் இந்தப் பார்ட்டியில் பங்கெடுத்து வருகின்றனர்.

திரையுலகப் போர்வையில் இருந்து கொண்டு கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டுவருவது உண்மையானால் விரைவில் சட்டத்தின் பிடியில் சிக்கிக்கொள்வார்.

ஒரு சாதாரண ஒப்பனைக்கலைஞராக இருந்து தயாரிப்பாளரான இவருக்கு இப்படி கோடிக்கணக்கில் பணமும், அந்தஸ்தும் வந்தது என்று பலரும் யோசிக்கிறார்கள்.

இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை.

# பாராட்டு மழையில் சிம்ரான்

தமிழில் சிம்ரானின் மார்க்கெட் இறங்கு முகமாகிவிட்டது என்று கூறிக் கொண்டிருக்க, 'பார்த்தேன் ரசித்தேன்' படம் வெளியாகி வெற்றிகரமாக ஓடுகிறது. சிம்ரானின் நடிப்பைப் பார்த்து பலரும் பாராட்டியுள்ளார்கள்.


இதைப் போல் இவர் நடித்து அடுத்து வெளிவர இருக்கும் 'ப்ரியமானவளே' படம் இதை விட நன்றாக இருக்கும் என்று கூறிவருகிறார்.

'பார்த்தேன் ரசித்தேன்' படத்தில் சிம்ரான் சிறப்பாக நடித்துள்ளதாக பத்திரிகைகள் பாராட்டு மழை பொழிகின்றன.

# வருடத்திற்கு ஒன்று

இந்தி நடிகை மனிஷா கொய்ராலாவுக்கு தமிழ்த் திரையுலகம் மிகவும் பிடித்து விட்டதாம். வருடத்திற்கு ஒரு படமாவது தமிழில் நடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

'பம்பாய்', 'இந்தியன்', 'முதல்வன்' ஆகிய நேரடித் தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறார் மனிஷா.



புதுமுகங்கள்
குனில்-நிஷா
படம்: உயிரின் உயிரே

# அடுத்த ப்ரீதா

விஜயகுமாரின் மகள் ப்ரீதா விஜயகுமார் கிடுகிடுவெனப் பல படங்களில் நடித்தார். இப்போது தமிழில் அவரைக் காணவில்லை.

இந்நேரத்தில் கன்னடத்தில் இருந்து தமிழுக்கு வந்திருக்கிறார் ப்ரீதா என்ற புதுமுகம். 'ரிலாக்ஸ்' மொழிமாற்றுப் படத்தின் இரண்டு நாயகிகளில் ஒருவர் தான் ப்ரீதா.

தற்போது இவர் தமிழ்ப்படங்களில் நடிக்க வாய்ப்புத் தேடி வருகிறார்.

# ஆனந்தம்-குழப்பம்

'ஆனந்தம்' மணிரத்னம் இயக்கிய 'இருவர்' படத்திற்கு முதலில் வைத்த பெயர்.

இப்போது மம்முட்டி-முரளி இணைந்து நடிக்கும் படத்திற்கு 'ஆனந்தம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. 'ஆனந்தம் விளையாடும் வீடு' என பெயர் அறிவிக்கப்பட்டு இப்போது 'ஆனந்தம்' ஆகி விட்டது.

இப்போது இதே பெயரில் இன்னொரு படம் தயாராகவிருப்பதாக அறிவிப்பு வந்துள்ளது.

'ஆனந்தம்' என்ற பெயரில் இரண்டு படங்களும் வெளிவரப் போகிறதா என்று தெரியவில்லை.

# ...லில் ரம்பா

...து விடப் பல தெலுங்கு நடிக...
... அதிகமாகி விட்டது.
...ஜயசாந்தி வரிசையில் பல நடிக...
... தமது அபிமான அரசியல்...
... போகின்றனர்.
...முதலிடத்தில் இருப்பவர் ரம்பா.

# சுதீஷின் அடுத்த படம்

விஜயகாந்தை வைத்து 'வல்லரசு' படத்தைத் தயாரித்த விஜயகாந்தின் மைத்துனரான எல்.கே.சுதீஷ், அடுத்த படத்திற்காக ஆயத்த வேலைகளில் ஈடுபட்டுள்ளார்.

இப்படத்திலும் விஜயகாந்த்தான் நாயகன். 'வல்லரசு' படத்தில் மகாராஜனை இயக்குநராக்கியது போன்று இப்படத்திலும் தமிழ்ச்செல்வன் என்ற புதியவரை அறிமுகப்படுத்துகிறார் விஜயகாந்த்.

தமிழ்ச்செல்வன் பிரபல இயக்குநர் ஷங்கரிடம் உதவியாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரட்மன் பட அல்பம்



கிரிக்கெட்டில் பிதாமகர் என அழைக்கப்படுபவர் அவுஸ்திரேலியாவின் சேர். டொனால்ட் பிரட்மன். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் சதங்கள், இரட்டைச் சதங்கள், முச்சதங்கள் அடித்துச் சாதனைகள் பல படைத்திருக்கும் இவர் வாழ்க்கையிலும் சதத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

கடந்த ஆகஸ்ட் 23ம் திகதி 92 வது பிறந்த தினத்தைக் கொண்டாடிய பிரட்மனின் குழந்தைப் பருவம் முதல் தற்போது இருப்பது வரையான தோற்றங்கள் இவை:

# ஹிட்லரும் ஜோதிடமும்



ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர் ஹிட்லர். இவருக்கு, ஜோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை உண்டு.

ஒரு சமயம் பெரிய ஜோதிட வல்லுநரை அழைத்துவரச் சொல்லி அவரிடம்,

"என் ஆயுட் காலம் எப்போது முடிகிறது; நான் எப்போது சாவேன்?" என்று கேட்டார் ஹிட்லர்.

ஹிட்லரின் ஜாதகத்தை மிகத் தீவிரமாக ஆராய்ந்த ஜோதிடர்,

"யூதர்களின் பண்டிகையன்று நீங்கள் இறப்பீர்கள்!" என்று சொன்னார்.

(யூதர்கள் தான் ஜெர்மனியைச் சுரண்டியவர்கள். அவர்களால் தான். ஜெர்மனியர்கள் வறுமையால் வாடுகின்றனர் என்ற எண்ணம் கொண்டிருந்தவர் ஹிட்லர். இதனால் இவர் பல யூதர்களைக் கொன்று, கொடுமைப் படுத்தியவர்)

ஜோதிடரின் பதிலைக் கேட்ட ஹிட்லர்,

"யூதர்களுக்குத்தான் பல பண்டிகைகள் வருகின்றனவே;. எந்தப் பண்டிகையில் நான் இறப்பேன் என்பதைச் சரியாகச் சொல்லும்!" என்றார்.

அதற்கு ஜோதிடர்,

"நீங்கள் என்று இறக்கிறீர்களோ, அந்த நாள் தான் யூதர்களின் பண்டிகையாகக் கொண்டாடப்படும்!" என்றார்.

## பேனா நண்பர்கள்



பெயர்: கே. பத்மநாதன்,
வயது: 21
முகவரி:
கண்ணகி கிராமம்-3,
அக்கரைப்பற்று.
பொழுது போக்கு:
பத்திரிகை வாசித்தல்.



பெயர்: கே. சத்தியா,
வயது: 17
முகவரி: இல. 80/2,
சிதம்பரபுரம், வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை, பேனா நட்பு.

# இந்தவாரம் உங்கள் பலன்

**08.10.2000 முதல் 14.10.2000வரை**

ஜோதிடர் 'காண்ர'

**மேடம்:**
தடைகள் விலகிக் கொள்வதும் தாமதமான திருமண, தொழில் விடயங்கள் பயண, வெளியிடத்தொடர்புகள் வெற்றிகரமாக அமையும். பெண்களுக்கு கல்வி, குடும்ப உயர்வுகள் கிடைக்கும். துலாராசிக்காரரால் நன்மைகள் ஏற்படும்.
அதிஷ்டநாள் : திங்கள், வெள்ளி
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 5
அதிஷ்ட திகதிகள்: 10, 14

**இடபம்:**
கடன் பிரச்சனைகள் ஓரளவு தீரும். சுபகரும முடிவுகள் நன்மையில் முடியும். மாமன், வழித் தொடர்புகள் பணச்சேர்க்கை என்பன ஏற்படும். உடன் பிறந்த சகோதரரால் பல்வேறு பட்ட பிரச்சனைகள் ஏற்படும்.
அதிஷ்டநாள் : செவ்வாய், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : பிறவுன்; எண்: 4
அதிஷ்ட திகதிகள்: 9, 13

**மிதுனம்:**
தடைநிலைமாறி தொழிலில் உதவிகள் சேரும். உடல் அசதியும் கரும தாமதம் சில வரும். கைத்தொழில், விவசாய முயற்சி செய்வோர் நன்மைகள் பெறுவார்கள்.
அதிஷ்டநாள் : வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம் : நீலம்: எண்: 2
அதிஷ்ட திகதிகள்: 11, 12

**கடகம்:**
இழுபறியுடன் உடல் நிலை சிக்கலாக அமையும். கொடுக்கல் வாங்கல் கடன் பிரச்சனைகள் என்பன பளுவாக அமையும். அரச எதிர்ப்புக்கள் பயமான நிலை தென்படும். வார இறுதியில் பூச நட்சத்திரக்காரர் ஓரளவு நன்மைகளை பெறுவார்கள்.
அதிஷ்டநாள்: புதன், சனி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 7
அதிஷ்ட திகதிகள் : 8, 11

**சிம்மம்:**
பலரின் பாராட்டுக்களும் பெருமையும் கிடைக்கும். எடுத்த கருமச் சிறப்புடன் பெருமளவு பணவசதிகள் வந்து சேரும். முக்கிய, தொழில் இரகசிய திட்டங்கள் தொடரும். மக, பூர நட்சத்திரருக்கு அதிக இலாபமும், கல்வியில் வெற்றியையும்கொடுக்கும்.
அதிஷ்டநாள்: புதன், வியாழன்
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 1
அதிஷ்ட திகதிகள்: 10, 11

**கன்னி:**
உடலில் நோய்துன்பம் தரும். தாய், தகப்பனின் உதவிகள் சில சேரும். அலைச்சல் என்பனவும் பிள்ளைகளின் கரும விடயமும் கல்வி சிக்கலாக இருக்கும். திருமண பலன் தாமதமடையும்.
அதிஷ்டநாள்: திங்கள், ஞாயிறு
அதிஷ்ட நிறம்: இளங்கபிலம்; எண்: 9
அதிஷ்ட திகதிகள்: 9, 12

**துலாம்:**
பலமாறுபட்ட முடிவுகள் எடுக்கும் மனதில் பதற்றமும் மருத்துவச் செலவும் அட்டமபார்வை விரயமான காலமாக உள்ளதுடன் பெரிய மாற்றங்கள் தென்படும். கவனம் எடுக்கவும். சுவாதி பெண்கள் கலங்கவேண்டி வரும்
அதிஷ்டநாள்: ஞாயிறு, வெள்ளி
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 3
அதிஷ்ட திகதிகள்: 10, 12

**விருட்சிகம்:**
எடுத்த முயற்சிகள் நல்ல முடிவுகளைக் கொடுக்கும். பணவரவும் மனதில் ஸ்திரமான நம்பிக்கையும் ஏற்படும் எதிர்பார்த்த புதியதிட்டங்கள் வெற்றி பெறும். கல்வி, தொழில் நுட்பம் சம்பந்தப்பட்டோர் உயர்வு பெறுவார்கள்.
அதிஷ்டநாள் : புதன், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 6
அதிஷ்ட திகதிகள் : 9, 11

**தனுசு:**
முடிவெடுக்கமுடியாத நிலை உண்டாகும். பணச்செலவு ஏற்படும். தூரஇடத்துச் செய்திகளால் நன்மை உள்ளது. மனைவி, உறவினர் வழிஉதவிகள் வரும். மூல, உத்திராட நட்சத்திரர் பல யோகமான பலன்களைப் பெறுவார்கள்.
அதிஷ்டநாள் : செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 5
அதிஷ்ட திகதிகள்: 10, 14

**மகரம்:**
பிள்ளைகளால் பெருமையும் தடைப்பட்ட பணவரவும், தொழில் வசதியும் உண்டாகும். வாகனவரவுண்டு இரும்பு தொழில் செய்வோர் பெரும் இலாபம் அடைவார்கள். பரீட்சைகள், வெளியிட பயணம் வெற்றியாக அமையும்.
அதிஷ்டநாள்: செவ்வாய், வியாழன்
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 9
அதிஷ்ட திகதிகள்: 9, 14

**கும்பம்:**
களைப்பான நிலை காணப்படும். செலவுகள் அதிகமாகும். மனதில் பயமான உணர்வு ஏற்படும். திருமண தாமதப்பேச்சுக்கள் எடுத்த முடிவில் மாற்றம். தொழில் கருமத் தடைகள் ஏற்படும் சதயநட்சத்திரர் கவனம் தேவை.
அதிஷ்டநாள்: ஞாயிறு, புதன்
அதிஷ்ட நிறம்: மருண்; எண்: 4
அதிஷ்ட திகதிகள்: 11, 13

**மீனம்:**
மனதில் உவகை பெருகும். தடைப்பட்ட முயற்சிகள் தொடரும். கல்வி, பயண வசதிகள் பெருகுவதுடன் பெரியோர் சந்திப்பும், ஆலயதரிசனமும் கிடைக்கும். மனம் நன்றாக அமைதி யடையும். உத்திரட்டாதி நட்சத்திரருக்கு பயண வெற்றி கொடுக்கும்.
அதிஷ்டநாள் : வெள்ளி, திங்கள்
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 3
அதிஷ்ட திகதிகள் : 9, 12

## ஜனநாயகம்

உரிமைகள்,
உறுதிப் படுத்த(ப்)
பட்டுள்ளதாம்
யாப்புக்களில்.....
***
சட்டத்தின் முன்
சமனாம்
யாவரும் நாடுகளில்....
***
உயிர் வாழ,
உத்தர வாதம்
அளிக்கப்பட்டுள்ளதாம்
அரசாட்சிகளில்....
***
சிறுபான்மையினருக்கே
கூடியளவு
முக்கியத்துவமாம்
அன்றாட வாழ்க்கைதனில்....
***
விரும்பிய நேரத்தில்
வேண்டிய இடத்துக்கு
சென்று வர,
அனுமதிக்கப் பட்டுள்ளதாம்
பிரயாணங்களில்.....
***
குற்றவாளியெனக்,
கண்டு கொள்ளாதவரை
கூட்டிலும் அடைக்க முடியாதாம்
எந்த நபரையும்....
***
மதச்சார்பற்று
நடு நிலைமை வகிப்பதே
அரசின் பிரதான
கொள்கைத் தத்துவமாம்....
***
அப்படியானால்,
இலங்கையுமொரு
'ஜனநாயம்' தான்
தமிழனுக்கு
நடப்பதென்னமோ
கடவுளுக்குத்தான் தெரியும்!!

ஷல்மானுல் ஹரீஸ்-
வாழைச்சேனை.

## விலைவாசி

'ஏ' விலைவாசியே
'நீ' சற்று யோசி!
***
'விர்' ரென நீயும் ஏறுவதால்
'கிர்'ரென என் தலையும் சுற்றுகிறது.
***
கிட்ட நானும் வந்தால்-நீயோ
எட்டப் போய் விடுகிறாய்.
***
உன்னால் பட்டினி பலபேர்;
உணவின்றி மரணம் சிலபேர்.
***
பணக்காரனுக்கு உன்னைப்பற்றிக்
கவலையேயில்லை.
ஏழைக்கோ கவலையே நீதான்!
***
மலை போல் உயரும் விலைவாசியே
மனமிரங்கி விரைவாய் இறங்கி வந்து விடு!

மெ.மரியதாஸ்-பண்டாரவளை.

## ஓ தமிழா...

தமிழா; எதைத் தேடுகிறாய்?
இழந்து விட்ட நல் இதயங்களையா?
***
கவலைப்படாதே, காலம் உள்ள வரை.
அவர்கள் காற்றாய் நம்மை ஸ்பரிசிப்பார்கள்!
***
தமிழா, எதை செவிமடுக்கிறாய்?
மரண ஓலமாகிவிட்ட மனிதர் பாஷைகளையா?
***
மயங்கிவிடாதே! சில வேளை அவை,
விடியலுக்கான புது தேசிய கீதமாகலாம்!
***
தமிழா, எதைப்பார்க்கிறாய்?
மயானங்களாகி விட்ட மானிடர் மண்ணையா?
***
திகைத்து விடாதே; புது உலகம் தோன்ற
சில கல்லறைகளும் காரணமாகலாம்!
***
தமிழா, என்ன சிந்திக்கின்றாய்?
புது உலகம் காண என்ன வழியென்றா?
***
தளர்ந்து விடாதே, வெள்ளைப் புறாவின்
வருகைக்காக வெளியே எழுந்து வா!
***
தமிழா, ஏன் நின்று விட்டாய்?
ஓ மறந்து விட்டாயா?
***
உள்ளே போய்
அடையாள அட்டையை
எடுத்து வா!

சி.சிவகுமாரன்-வட்டகொடை.

## நீ நினைத்தது தவறு

இதயமுள்ள ஆண மகன்
என்று உன்னை எண்ணினேன்
நீயோ இதயத்தை
பலரிடமும் பங்கு பிரித்து
கொடுத்து விட்டு வாழ்கிறாய்!
**
உயர்வான மனிதரிலும்
உன்னதமானவன் நீ யென்று
உள்ளமதில் மகிழ்ந்திருந்தேன்.
சராசரி ஆண்களில் நீயும்
ஒருவன் என்று காட்டிவிட்டாய்!
**
உன் நாடகத்தை
அரங்கேற்ற என் மனதை
மேடையாக்கினாய் நீ
நான் பதுங்கியிருப்பது பயத்தினால்
என்று நினைத்து விடதே!

'புயல்' செங்கலடி.

## அநாதை!

பள்ளி செல்லத் தேவையில்லை.
பரீட்சை எழுதத் தேவையில்லை,
பட்டப்படிப்புப் படிக்கத் தேவையில்லை.
பல்கலைக்கழகம் செல்லத் தேவையில்லை.
ஜாதி, மதம் பார்க்கத் தேவையில்லை.
ஆண், பெண், எனப்பிரிக்கதேவையில்லை.
ஆம்! எந்த வயதிலும்
இலவசமாகவே கிடைக்கும்
பட்டம் தான் 'அநாதை'

எஸ்.றோஜனா-அரியாலை.

# நில் – கவனி – முன்னேறு

நாம் அடைகின்ற வெற்றிகள் யாவும் செய்கின்ற செயலின் முயற்சிகளே!

நம்மிடமுள்ள திறமையால் நாம் மற்றவர்களுக்கு வழிகாட்டும் உன்னதமானவராக வர முடியும். செல்வம் மட்டுமில்லாமல் சிந்தனை சேவை என்ற வழிகளிலும் மேன்மை அடைய முடியும். நாம் செய்கின்ற முயற்சிகள் வெற்றியாக அமையவேண்டும்.

எந்தப் பிரச்சனையையும் நாம் திறந்த



மனத்துடன் ஆராய முன்வந்தால், நமக்குப் புதிய சிந்தனைகள் தோன்றும். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று எண்ணிவிடாமல், புது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

புதிய பாதை வகுக்கத் துணிந்தால், பரந்த மனத்தோடும் சிறந்த அறிவோடும் பாடுபட்டால் வெற்றி நிச்சயம். எதை நம்பி எதற்காக முயற்சி செய்கின்றோமோ அதை அடைந்தே தீருவோம்.

வீட்டின் கூரை விட்டம் இதனை தூண்கள் தாங்குவது போன்று நம் இலட்சியம், குறிக்கோள், ஆசை என்னும் தூண்களால் தாங்கிக் கொள்ளும் படி செய்ய வேண்டும்.

பாலிலிருந்து தானே வெண்ணையும், நெய்யும், தயிரும், மோரும் கிடைக்கின்றன.

இந்த 4 பொருள்களையும் தேடி அலைவதற்குப் பதிலாக நமக்குப் பாலே கிடைத்துவிட்டால் மற்ற நான்கையும் பெறுவதற்கு வழி கிடைத்துவிடும் இல்லையா!

பணக்காரராக வாழ விரும்புவது நியாயமானது. ஆசை இல்லாவிட்டால் வாழ்க்கையே சலிப்பாகிவிடும்.

நம்முடைய மனதில் எதை எண்ணுகிறோமோ அதன் மீது அளவில்லாத ஆசை கொள்ளவேண்டும். அந்த ஆசையை நாளுக்கு நாள் வளர்த்து அதை ஒரு வேட்கையாக கொள்ள வேண்டும்.

செல்வந்தனாக வேண்டும் என்று எண்ணும் போதே அந்த எண்ணத்தை சர்வ சாதாரணமான எண்ணமாகக் கொள்ளாமல், ஆசை வேட்கையுடன் கூடிய எண்ணமாகவே மாற்றி விட வேண்டும்.

அந்த ஆசை வேட்கை தான் நம்முடைய மூளை நரம்புகளை தட்டி விட்டு மூளையை சிந்திக்க வைக்கிறது. ஆசைபடாவிட்டால் சிந்தனை செய்ய வேண்டிய மூளையின் நரம்புகள் வேலையின்றி உற்சாகம் இழந்து ஒய்ந்துவிடும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கவிதை பாடும் கண்கள் வேண்டுமா?



நாம் பேசாமலே பலவகை உணர்ச்சிகளைக் கண்களால் வெளிப்படுத்தலாம். இந்தக் கண்களைப் பேணிப்பாதுகாக்காமல் பலர் அலட்சியப்படுத்தி விடுகின்றனர். விளைவு கண்கள் பாதிப்படைகின்றன.

நடுத்தர வயதை அடைந்தால் போதும், கண்களைச் சுற்றிக் கருவளையம் ஏற்பட்டு, கண் இமைகளை, கண்களைச் சுற்றிய பகுதிகள் வீங்கி விகாரமாக மாறிவிடும். இதற்குப்பல காரணங்கள் உள்ளன.

இந்தக் கோளாறுகளை ஓரளவுக்குச் சரிசெய்து விடலாம். சவர்க்காரங்களில் உள்ள இரசாயனம், தூக்கமின்மை, விட்டமின் சத்து குறைபாடு, இரத்தசோகை, மாதவிடாய் கோளாறுகள், மலேரியா, ரைஃபோயிட், பதற்றமான மனநிலை, கவலை என்று இதற்குப் பல மறைமுக காரணங்கள் உள்ளன.

தலையணையில் தலையை சற்று உயரமாகத் தூக்கி வைத்து உறங்க வேண்டும். இதனால் கண்களைச் சுற்றிய பகுதிகள் வீங்கி விகாரமாகக் காரணமாகும் திரவம் சேராது.

சிலருக்கு கண் நோய்கள், அரிப்பு, கண்களைத் தேய்ப்பது போன்றவற்றாலும் கண்களில் வீக்கம் ஏற்படும். வயதாகி விட்டால் கண்களுக்குக் கீழ் உள்ள பகுதிகளில் கொழுப்பு சேர்ந்து இந்தப் பகுதிகள் வீங்கிக் காணப்படும்.

கண்களின் மீது வெள்ளரிக்காய், உருளைக்கிழங்கு வில்லைகளை வைத்துக் கொண்டு சிறிது நேரம் படுத்திருந்தால் கண்கள் புத்துணர்வு அடையும்.

குளிர்ச்சியான பன்னீரில் தேயிலைத் தூள் பைகளை நனைக்க வேண்டும். இந்தப் பைகளை கண்களின் மீது வைத்துக் கொள்ளவும். இப்படிச் செய்து வந்தாலும் கண்கள் பளபளப்புடன் காணப்படும்.

சுத்தமான விளக்கெண்ணெயை இரவு படுக்கப் போவதற்கு முன்பாகக் கண் இமைகளின் மீதும் கண்களைச் சுற்றிலும் தடவிக் கொண்டு படுக்கவும். கண்கள் புத்துணர்வு அடையும்.

## அழகு + ஆரோக்கியம் = தண்ணீர்

உங்கள் வாழ்க்கையில் தண்ணீருக்குக் கொஞ்சம் முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா? இல்லையேல், இதைப்படித்து விட்டு முடிவு செய்யுங்கள்:

★ இது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அடிக்கடி இதைப் பற்றி எழுதியுள்ளோம். ஆனால் செய்கிறீர்களா? தினமும் 15 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.



★ பழரசம் பருகினாலும் அதிலும் தண்ணீர் சேர்த்துப் பருகுங்கள்.

★ அருவியில் உடல் குளிரக் குளிக்க வாய்ப்புக் கிடைக்கிறதா? மனம் போல நீந்திக்குளிக்க நீச்சல் குளம் அருகில் இருக்கிறதா? அந்தப் பொன்னான வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள்.

★ அடிக்கடி தண்ணீரால் வாயைக் கொப்பளியுங்கள். தேன், எலுமிச்சம், பழச்சாற்றுடன் தண்ணீரைக் கலந்து வாயைக் கொப்பளித்தால் இன்னும் நல்லது.

★ நசநசப்பு, கசகசப்பு, வியர்வை, இலேசான எரிச்சல் தரும் தேகம், அத்தனைக்கும் இதமான முதல் நிவாரணம் குளிர்ந்த நீரின் தழுவல் மட்டும் தான்.

★ வெறும் காலுடன் புல் தரையில் சில நிமிடங்கள் நடப்பதும், முழங்கால் வரை நீரிலே சில நிமிடங்கள் நிற்பதும் உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் என்று ஆய்வொன்று தெரிவிக்கிறது.

என்ன இனித் தினமும் தண்ணீருக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தீர்மானித்து விட்டீர்களா?


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IJ

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-10-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது

57 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

பெட்டிகியூரியுடன் தொலைபேசியில் உரையாடிய மோனிக்கா மிகக் கடினமான வார்த்தைகளைப்பாவித்தாள். ஜனாதிபதி கிளின்ரனுக்கும் தனக்குமிடையிலுள்ள நெருக்கமான தொடர்புகள் பற்றிய முழுவிபரங்களையும் தன்னுடைய பெற்றாருக்குக் கூறிவிடப்போவதாக கூறினாள்.

தனக்கு இருந்த மனவேதனையில் மோனிக்கா இவ்வாறு தெரிவித்தாளே தவிர, உண்மையில் அவற்றைப் பற்றி தன் பெற்றாரிடம் கூறுவதற்கு மோனிக்கா விரும்பியதில்லை.

மோனிக்கா இவ்வளவு தூரம் தன்னை ஜனாதிபதி கிளின்ரனுடன் சேர்த்து வசை பாடிய போதும் மறுப்பாக கியூரி எல்லாவற்றையும் அமைதியாகவே கேட்டுக் கொண்டிருந்தாள்.

பெட்டிகியூரியுடன் உரையாடிய பின்னர் லிண்டா ட்ரிப்புடன் மோனிக்கா தொலைபேசியில் தொடர்பு கொண்டு கியூரிக்கும் தனக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலைப்பற்றி அவளிடம் கூறினாள். வழக்கம்போல் மோனிக்காவின் வார்த்தைகள் அத்தனையையும் லிண்டா பதிவு செய்து கொண்டாள்.

பின்னர் கிளின்ரன்–மோனிக்கா விவகாரம் விசா ரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த ஒலிப்பதிவு நாடா பகிரங்கமாகக் கேட்கப் பட்டது. அமெரிக்க மக்கள் மட்டுமல்லாமல் உலகிலுள்ள பலரும் இந்த அந்தரங்க உரையாடலைக் கேட்பதற்கேற்றவாறு வானொலி ஒலிபரப்புகளில் இவை ஒலிபரப்பப் பட்டுள்ளன.

பெட்டி கியூரியுடன் இனிமேல் தான் எத்தகைய தொடர்பும் வைத்துக்கொள்ளப் போவதில்லை என்று கூறி தொலைபேசியில் சண்டைபோட்ட மோனிக்கா அன்றிரவே கியூரியுடன் தொடர்பு கொண்டாள். தனக்கிருந்த ஆத்திரம் காரணமாக மிகக் கடுமையான வார்த்தைகளால் கியூரியைத் திட்டிவிட்டதற்காக மன்னிப்புக் கோரினாள். ஆனால் கியூரி தனக்கே உரித்தான அந்தப் பெருந்தன்மையுடன் மோனிக்காவை எப்போதோ மன்னித்து விட்டாள்.

கியூரியிடம் மன்னிப்புக் கோருவதற்கு தான் விரும்புவதாக லிண்டா ட்ரிப்பிடம் மோனிக்கா தொடர்பு கொண்டு சொன்னாள். ஆனால் லிண்டா– "அவ்வாறு நீ கியூரியிடம் மன்னிப்புக் கோட்டால் உன்னுடன் நான் பேச மாட்டேன். உன்னுடனான எத்தகைய தொடர்பினையும் நான்வைத்துக் கொள்ளமாட்டேன்" என்று எச் சரித்திருந்தாள்.

மோனிக்கா இடையில் அமெரிக்காவின் மேற்குக் கரையிலுள்ள வேன்கூவர்வரை சென்று திரும்பினாள். தன்னுடைய குடும்பத்தாருடன் சென்றிருந்த அவள் அங்கு நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்து கொண்டு திரும்பினாள்.

மேற்குக் கரையிலிருந்து திரும்பும்போதே தனக்கு வாழ்க்கையில் பலத்த ஏமாற்றத்தையும். சிக்கல்களையும் ஏற்படுத்திய வாஷிங்ரனை விட்டு வெளியேறிவிடவேண்டும் என்று தீர்மானத்துடன் தான் திரும்பினாள்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.செயலகத்தில் தனக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேலையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தொலைபேசியில் அறிவித்தாள். தனது பென்டகன் வேலையையும் இராஜினாமா செய்துவிட்டதாக அறிவித்தாள். நியூயோர்க்குக்கு மிக விரைவில் தான் வரவிருப்பதாக அவளுடைய தாயாருக்கு தொலைபேசியில் அறிவித்தாள். இவற்றையெல்லாம் முடித்து விட்டு நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள். டிசம்பர் 24ம் திகதியன்று வாஷிங்ரனை விட்டு நீங்குவதற்கு அவள் ஏற்பாடுகளைச் செய்திருந்தாள். இதற்கிடையில் நியூயோர்க்கில் தனக்கு ஏற்ற ஒரு வேலையை ஏற்பாடு செய்து தருவதாக வாக்களித்திருந்த வேர்ணன் ஜோர்டனுடன் தொடர்பு கொண்டாள். பென்டகன் வேலையை இராஜினாமா செய்து விட்டதாக ஜோர்டனிடம் கூறியபோது, பிரமிப்படைந்த அவர், "ஒரு புதிய வேலையைத் தேடிக் கொள்வதற்கு முன்னர் இப்படி அவசரப்பட்டு இவ்வாறு செய்யலாமா?" என்று கேட்டார். அடுத்த வாரம் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

நவம்பர் மாதத்தில் பென்டகன் அலுவலகப் பணியின் பொருட்டு மோனிக்கா பிரிட்டனுக்கும் பெல்ஜியம் நாட்டுக்கும் சென்று வந்தாள். அவ்வாறு அவள் பயணம் செய்வதற்கு முன்னர் அவசரமாக இரு கடிதங்களை எழுதி கூரியர் சேவை மூலம் கிளின்டனுக்கு அனுப்பி வைத்தாள். உரிய காலத்தில் அக்கடிதங்கள் பெட்டி கியூரியிடம்போய்ச் சேர்ந்த போதும் அவை கிளின்ரனிடம் சேர்க்கப்படவில்லை. அவள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று திரும்பியதும் பெட்டிகியூரியுடன் தொடர்பு கொண்டு விசாரித்த பொழுதுதான் கடிதங்கள் கொடுக்கப் படவில்லை என்பதை அறிந்துகொண்டாள். மீண்டும் கியூரியுடன் சண்டை போட்டாள். அன்றைய தினமே கிளின்ரனிடம் கியூரி மோனிக்காவின் கடிதங்களைக் கொடுத்து, இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யலாமா என்று கேட்டார். கிளின்ரன் தனது வழக்கறிஞர்களைச் சந்தித்து உரையாட வேண்டியிருப்பதனால் அன்றைய தினம் வசதிப்படாது என்று கூறிவிட்டார்.

## தவிப்பும் தாபமும்



டிசம்பர் 5ம் திகதியன்று இலண்டனில் வைத்து வெள்ளை மாளிகை பாதுகாப்புப் பிரிவு அதிகாரியான பொப் ரைரர் என்பவரை விமான நிலையத்தில் மோனிக்கா சந்தித்தாள். அன்று மாலையில் வெள்ளை மாளிகையில் நடைபெறவிருந்த கிறிஸ்மஸ் பார்ட்டியில் தன்னுடன் இணைந்து கலந்து கொள்வதற்கு மோனிக்காவுக்கு அழைப்பு விடுத்தார். அவளும் சம்மதித்தாள்.

விருந்தினர்களை கைகொடுத்து வரவேற்கும் கட்டத்தில் மோனிக்கா பொப் ரைரருடன் இணைந்து வந்திருப்பதைக் கண்டார். ரைரருடன் சில வார்த்தைகள் பேசிய கிளின்ரன், "பென்டகனில் இந்தப் பெண்ணை நன்றாக கவனித்துக் கொள்கிறீரா?" என்று தமாசாக கேட்டார்.

மோனிக்கா முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு எதுவிதமான வார்த்தையும் பேசாமல் கிளின்ரனுக்கு வெறுமனே கையைமட்டும் கொடுத்தாள். இருப்பினும் அன்றைய தினம் கிளின்ரன் மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தாரென்றும், அத்தகைய கவர்ச்சியில் மயங்கி விடாமல் இருப்பதற்காகத்தான் எவ்வளவோ முயற்சித்ததாகப் பின்னர் கூறியிருக்கிறாள்.

கிறிஸ்மஸ் விருந்து முடிந்து வீடு திரும்பியதும் பெட்டிகியூரியிடமிருந்து மோனிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த தொலைபேசித் தகவல் 'பேஜரில்' பதியப்பட்டிருந்ததை அறிந்து அதனைக் கேட்டாள்.

அடுத்தநாள் டிசம்பர் 6ம் திகதி சனிக்கிழமையன்று தான் வெள்ளை மாளிகைக்கு வரவிருப்பதாகவும் மாளிகையைச் சுற்றிப் பார்க்க வரும் சிலரை அழைத்துக்கொண்டு இடங்களைக் காட்டப் போவதாகவும் அந்த பதியப்பட்ட செய்தி கூறியது. இச்சந்தர்ப்பத்தில் மோனிக்கா வெள்ளைமாளிகைக்கு வந்தால் கிளின்ரனை சந்திப்பதற்கு தான் ஏற்பாடு செய்து தருவதாகவும் செய்தியில் மேலும் கூறப்பட்டிருந்தது.

தனது கணினியில், தன்னுடைய உள்ளக் கிடக்கைகள் அனைத்தையும் விவரித்து ஒரு கடிதத்தை அச்சிட்டு எடுத்தாள். 'இன்று மாலையில் நான் உங்களைச் சந்திக்கப்போவது மனவருத்தத்தையே உங்களுக்கும் எனக்கும் தரப்போகிறது. நீங்கள் என்னை முற்று முழுதாக உதாசீனம் செய்த பின்னர் நான் கோபப்படாமல் எவ்வாறு சாதாரணமாக இருக்க முடியும்? உங்களை நான் சந்திக்கும்போது அந்த இடத்தில் நீங்கள் என்னைக் கட்டி அணைத்தபடி இருக்கவேண்டும். அங்கு வேறு எவரும் இருக்கக்கூடாது. இதுவே எனது விருப்பம்.' இதுதவிர வேறு பல பழையசம்பவங்களையும் நினைவூட்டி, தன்னைத்துன்புறுத்தி விட்டதாகவும் குறிப்பிட்டிருந்தாள். 'இறுதியாக நீங்கள் எனக்கு குட் பை சொல்ல வேண்டியிருக்கும். அது வேதனையாகவே இருக்கும்.' என்று குறிப்பிட்டாள். இதனை எழுதிமுடித்து விட்டு கியூரியுடன் தொடர்பு கொண்டு வெள்ளை மாளிகையின் தென் மேற்கு வாயிற்புறமாக நாளை உங்களைச் சந்தித்து ஒரு கடிதத்தை தரப்போகிறேன், என்று சொல்லிவிட்டாள் மோனிக்கா.

அடுத்தநாள் கியூரியிடம் குறிப்பிட்டபடி மோனிக்கா வெள்ளை மாளிகை சென்றாள். கியூரியைச் சந்திப்பதற்காகக் குறிப்பிட்டிருந்த வாயிலை அடைந்த மோனிக்கா தொலைவில் கிளின்ரன் ஒரு பெண்ணுடன் சுவாரசியமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு ஓவல் அலுவலகத்துக்குப் போவதைக் கண்டாள். கிளின்ரனுடன் சென்ற பெண் யாரென்பதை அடையாளம் கண்ட மோனிக்கா கடும் கோபமுற்றாள். மோனிக்காவின் வெள்ளை மாளிகை வேலையை விட்டு விலகிச் செல்வதற்குக் காரணமாக இருந்த நார்ஷா ஸ்கொட் என்பவர்தான் கிளின்ரனுடன் சென்றாள்.

அங்கு நின்ற வெள்ளைமாளிகை காவலர் ஒருவரிடம், பெட்டிகியூரியைச் சந்திப்பதற்காக தான் வந்திருப்பதாகக் கூறி, "அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்து தரலாமா?" என்று கேட்டாள். அதற்கு அவர் "பெட்டிகியூரி வெள்ளைமாளிகையைச் சுற்றிப்பார்க்க வந்த குழுவினருடன் திரிவதால் இப்போது முடியாது" என்று கூறிவிட்டார்.

(வருவாள்)

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**ஏறாவூர் வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | ஏ.எஸ்.சர்ஜீனா, இல.913, தைக்கா ஒழுங்கை, ஏறாவூர். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பட்டாணி இளவரசி

## பாப்பா முரசு சிறுகதை

முன்னொரு காலத்தில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒருமகன் இருந்தான். மகன் மிகவும் அழகான, துடிப்பான இளவரசன். அதிபுத்தி சாலி. அதனால், தன்னை திருமணம் செய்து கொள்ளும் இளவரசியும் மிகவும் அறிவுத்திறன் நிரம்பியவளாக, நுண்ணறிவு, நுண்திறன் மிக்கவளாக இருக்க வேண்டும் என்ற விரும்பினான்.

அதிலும் இளவரசி என்றால் ஆபத்துகளும் நிறைந்திருக்கும். எனவே "மிகவும் விழிப்பாக இருக்கக் கூடிய இளவரசியைதான் மணப்பேன்" என்று பிடிவாதம் பிடித்தான். பெற்றோரும் எத்தனையோ இளவரசிகளை கொண்டு வந்து மகன் முன் நிறுத்தினர்.

அவன் வைத்த சின்ன பரீட்சையிலேயே அனைவரும் தோற்றுப்போகவே, பெற்றோர் மனம் வெறுத்தனர். 'இனி நம் ஒரே மகனுக்கு திருமணம் ஆகாதா.... இந்த பரந்த தேசத்தை ஆளவாரிசு இல்லாமல் போய் விடுமோ?' என்று மனம் கலங்கினர்.



ஆனால், இளவரசனோ, "என் விருப்பப்படி இளவரசி எனக்கு கிடைப்பாள். அவளுக்காக நான் எவவளவு நாட்கள் வேண்டுமானாலும் காத்துக் கொண்டிருப்பேன்." என்று பிடிவாதம் பிடித்தான்.

ஒரு நாள்–

பயங்கர இடியுடன் கூடிய மழை பெய்தது. அப்போது 'பட்.... பட்....' என்று கதவு தட்டும் சப்தம் கேட்டது.


ஓர் இளவரசி முற்றிலும் நனைந்த உடையுடன் ஈரம் சொட்டச்சொட்ட, உடல் நடுங்க நின்று கொண்டிருந்தாள். அவளை அழைத்து வந்து புத்தாடை கொடுத்து சிறப்பான உணவை அளித்தனர்.

தோழியருடன் விளையாட வந்த இடத்தில் வழிதவறி வந்துவிட்டதாகக் கூறினாள் இளவரசி. இரவில் அவளது கட்டில் மீது ஒரு பட்டாணியை போட்டு அதன் மீது இருபது மெத்தைபோட்டு, மெத்தைகள் மீது இருபது படுக்கை விரிப்புக்கள் விரித்து அதில் இளவரசியை படுக்கச் சொன்னார்கள்.

அடுத்தநாள் காலை எழுந்ததும் இளவரசியிடம் "சுகமாக உறங்கினாயா?" என்று கேட்டார் ராணி. "இல்லையம்மா.... நான் சிறிது கூட கண் மூடவில்லை. என் படுக்கை அடியில் என்ன இருந்ததோ தெரியல..... ஒரே உறுத்தலா இருந்ததால் சரியான தூக்கமில்லை," என்றாள்.


அசந்து போன ராணி விஷயத்தை தெரிவிக்க... இளவரசன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து இளவரசியை ஆசையுடன் மணந்து கொண்டான். இதுவரை எத்தனையோ இளவரசிகள் கண்டுபிடிக்காத விஷயத்தை இவள் கண்டுபிடித்ததால் அந்த பட்டாணியை எடுத்து இங்கிலாந்தின் ரோயல் மியூசியத்தில் வைத்தனர். அதை பொதுமக்கள் கண்டு மகிழ்ச்சி, ஆரவாரம் செய்தனர். இன்றும் அந்த பட்டாணி ரோயல் மியூசியத்தில் உள்ளது.





பூமிக்குள் இருக்கும் தங்கப்புதையலை எடுக்க இரண்டுபேர் செல்கிறார்கள். யார் போகும் பாதையால் சென்றால் புதையலைச் சென்றடைய முடியும்?

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **14.10.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **363**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 361

**பரிசுக்குரியவர்:**
செல்வி. சம்சுல் மர்ஸியா,
முஸ்லிம் மகளீர் கல்லூரி, கொழும்பு-04.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.டீ.எம். யூனுஸ்,<br>மட்/மத்திய மகா வித்தியாலயம், காத்தான்குடி 03. | செல்வன். க. மனோராஜ்,<br>விபுலானந்தா மகா வித்தியாலயம், பண்டாரிக்குளம்-வவுனியா |
| ப. சத்யா,<br>புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு-03. | எம். எச். ராஷிதா,<br>பாலர் பாடசாலை, பெரியமுல்லை, நீர்கொழும்பு. |
| எஸ். குமரேஸ்,<br>புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். | கே. ரமேஸ்,<br>தமிழ் மகா வித்தியாலயம், ராகலை. |
| சி. மிதுனா,<br>இராமநாதன் இந்து மகளீர் கல்லூரி, கொழும்பு-04. | பாத்திமா றுஸ்தா,<br>அமீனா மகா வித்தியாலயம், மாத்தளை. |
| த. அமலன்,<br>ரோயல் கல்லூரி, கொழும்பு-07. | சி. கவிஷாலினி,<br>தேசிய இந்து கல்லூரி, புசல்லாவ. |

## சல்யூட் எப்படி வந்தது?



பொலிஸ்காரர்கள் தமது உயரதிகாரிகளைப் பார்க்கும் போது 'சல்யூட்' அடிப்பார்கள் அல்லவா? இந்த 'சல்யூட்' எப்படி வந்தது தெரியுமா?

சில் நூற்றாண்டுகளுக்கு முன் 'நைட்கள்' என்று அழைக்கப்படும் படை வீரர்கள் இருந்தனர்.

இவர்கள் முகமும் தலையும் மூடிய உருக்கினால் செய்த தலைக்கவசம் அணிந்து வந்தனர். இவர்கள் தனது மேல் அதிகாரிகளைப் பார்த்ததும் முகத்தை மூடியிருக்கும் தலைக்கவசத்தின் ஒரு பகுதியை உயர்த்தி வணக்கம் தெரிவிப்பார்கள்.

பிறகு தலைக்கவசத்திற்குப் பதிலாக தொப்பிகள் போடத்தொடங்கினர். அப்போது பிரபுக்களைப் பார்த்ததும் தொப்பியை மேலே தூக்கி வணக்கம் கூறினார்.

இப்படி செய்யும்போது இவர்கள் கையில் உள்ள வெடி மருந்துக் கறைகள் தொப்பியை அழுக்காக்கி விட, அதைத் தவிக்கத்தான், வலது கையை உயர்த்தி சல்யூட் அடிக்குத் தொடங்கினார்.

## அஸாஸின் பக்



'அஸாஸின் பக்' எனப்படும் மூட்டைப் பூச்சி அரை அங்குலம் அளவுடைய மிகச்சிறிய பூச்சியாகும். ஆனால் இது தன்னை விட அளவில் பெரிய பூச்சிகளை ஒரு நிமிடத்தில் கொன்றுவிடும்.

பூச்சிகளை இது முதலில் தனது முன்னங்கால்களால் பலமாகப் பிடித்துக் கொள்ளும். பிறகு தனது குழாய் போன்ற வாயினால், தனது விஷத்தை மற்றப் பூச்சிகள் மேல் ஏற்றும். இதன் மூலம் இதனிடம் பூச்சிகள் செயலிழந்து விடும்.

பிறகு அந்தப் பூச்சியை தனது உணவாக்கிக் கொள்ளும்.

## செய்து பாருங்கள்



**தேவையான பொருட்கள்:**

முட்டை ஓடு ஒன்று, வார்னிஷ், பிரஷ், வர்ணத்துணிகள், கத்தரிக்கோல், சிறிய பிளாஸ்டிக் தட்டு ஒன்று.

**செய்முறை:**

* முட்டை ஓட்டைச் சுத்தம் செய்துவிட்டு அதன்மேல் வார்னிஷ் அடித்துக் காய வைத்து விடுங்கள்.
* கறுப்புத் துணியால் கண்களுக்கு இரண்டு வட்டங்களும், வாய், மூக்கு பகுதிக்கு ஒரு வட்டம், சிவப்புத் துணியில் இரண்டு காதுகள் வெட்டிக் கொள்ளுங்கள்.
* பூனைக்கு மீசை வைக்க, கறுப்புத்துணியை மெல்லியதாகவும் நீளமாகவும் ஆறு துண்டுகள் வெட்டவும். பின் கண், மூக்கு, வாய், மீசைப் பகுதிகளை ஒட்டவும்.
* சிவப்பு நிறக்காதையும் ஒட்டிவிடுங்கள்.
* இப்போது பிளாஸ்டிக் தட்டின் மேல் பசை பூசி முட்டைப் பூனையாரை ஒட்டி விடுங்கள்.



## விறு விறு தொடர்

# 16 சீம்லா விசீலா

**மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**

"ஒண்ணும் செய்யலை. ஒரு பரிசை ரகசியமா வைச்சிட்டு வந்தேன். அந்தப் பார்சல்ல வெள்ளைப் புடவை வெச்சிருந்தேன். கல்யாணம் நடந்து முடிஞ்சதும் உன் புது புருஷனை கொலை செய்யப் போறேன்னு மிரட்டல் லெட்டரும் வெச்சிருந்தேன்!."

"ம்?"

"அதைப் பார்த்துட்டு போலீஸ்ல சொல்லிட்டா. போலீஸ் ரொம்ப சாமர்த்தியமா நான் தங்கியிருந்த ஹொட்டலுக்கு தேடிக்கிட்டு வந்துடுச்சி, நான் அவங்ககிட்ட மாட்டிக்காம தப்பிச்சிட்டேன்."

"அய்யோ! இப்போ போலீஸ் உங்களைத் தேடிகிட்டிருக்கா?"

"ஆமாம். அவங்க ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டு, ஹோட்டல்ஸ் இப்படி என்னைத் தேடிட்டிருப்பாங்க. அதனால தான் ராத்திரி ரகசியமா பதுங்கி இருக்கிறதுக்காக இங்கே வந்தேன்."

"இப்போ என்ன செய்யப் போறீங்க? காலைல எழுந்து ஊருக்குப் போகப் போறீங்களா?"

"ஊருக்கா?" என்று சிரித்தான். "காலையில அந்த முகூர்த்தத்துக்கு நான் போக வேணாமா? தாலி கட்டற வைபவத்தைப் பார்க்க வேணாமா? தாலி கட்டி முடிஞ்சதும் ஆகாஷை சுட வேணாமா? அப்பதானே நான் அனுப்பிச்ச வெள்ளைப் புடவையை அவகட்ட முடியும்!"

"அய்யோ! வேணாம் சார்! கொலை எல்லாம் பண்ணாதீங்க!"

"எனக்கு அவ துரோகம் செஞ்சது சரியா?"

"சரியில்லைதான்!."

"அதுக்குத்தான் தண்டனை!"

"உங்களைத்தான் போலீஸ் தேடிகிட்டிருக்கே. நீங்க இப்போ கல்யாண மண்டபத்துக்குப் போனா உங்களைப் பிடிச்சிடமாட்டாங்களா?"

"பிடிச்சிடுவாங்கதான்!."

"பின்னே?"

"அதான் எப்படி இதை நடத்தறதுன்னு யோசிச்சிட்டிருக்கேன்."

தன் அணைப்பில் இருந்த அவளை விடுவித்தான். அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

"சுரேகா, என் திட்டத்துக்கு நீ உதவி செய்வியா? செஞ்சா உனக்கு... உனக்கு... ஒரு லட்சம் தர்றேன்!," என்றான்.

"ஒரு லட்சமா?" என்று வியந்தாள் சுரேகா.

தனது திட்டத்திற்கு உதவி செய்தால் ஒரு லட்சம் தருவதாக ரஞ்சித் சொன்னதும் சுரேகா வெகுவாக பிரமிப்பில் ஆழ்ந்தாள்.

அவளுக்கென்று உள்ள பேங்க் சேமிப்புக் கணக்கில் நான்காயிரம் மட்டுமே வைத்திருப்பவள் அவள். அதையே அவளின் சக தோழிகள் பொறாமையாக பெருமூச்சு விட்டுக் குறிப்பிடுவதுண்டு. ஒரு லட்சத்திற்கு எத்தனை சைபர் என்பது கூட தெரியாத சுரேகா வார்த்தைகளின்றி ரஞ்சித்தைப் பார்த்தாள்.

"என்ன, திகைச்சுப் போயிட்டே சுரேகா?"

"போதையில வாய்க்கு வந்ததை எல்லாம் பேச வேணாம்!" என்றாள்.

"நான் சொன்னது நிஜம்! எங்கே அடிச்சு சத்தியம் செய்யட்டும் சுரேகா?" என்று அவன் வைத்த கையை அவள் விலக்கவில்லை.

"சொல்லு, செய்றியா?"

"என்ன செய்யணும்?"

"ரொம்ப சின்ன வேலைதான்!"

"என்ன?"

"உன்கிட்ட பட்டுச்சேலை இருக்கா?"

"வாடகைக்குக் கிடைக்கும்."

"ரைட், நாளைக்கு நீ வாடகைக்கு ஒரு பட்டுச் சேலை எடுத்துக் கட்டிக்கிட்டு நல்லா ரிச்சா மேக்கப் செய்துகிட்டு, வாடகைக்கு கவரிங் நகைகள் வாங்கிப் போட்டுகிட்டு ஒரு பணக்கார வீட்டுப் பொண்ணு மாதிரி ஒரு டாக்ஸில நான் சொல்ற கல்யாண மண்டபத்துக்குப் போகணும்!"

"அதாவது உங்க காதலிக்கு கல்யாணம் நடக்கப் போற கல்யாண மண்டபத்துக்கு அப்படித்தானே?"

"கரெக்ட்!"

"சரி, அங்க போயி?"

"நான் சொல்லித் தர்ற மாதிரி நடந்துக்கணும்."

"எனக்கு உதறுமே! நடிக்கத் தெரியாதே!"

"ஒரு லட்சம் உனக்குக் கிடைக்கப் போவுதுன்னு நினைச்சிப் பாரு! நடிப்புத் தானா வரும் ஒண்ணும் பிரமாதமில்லை."

"சரி, அங்க நான் யார்க்கிட்ட என்ன சொல்லணும்?"

"சொல்றேன், அவன் பேரு ஆகாஷ்!"

"யாரு?"

"என் காதலி தீபிகாவோட கழுத்துல தாலி கட்டப்போறவன்."



"சரி!"

"அந்தக் கல்யாணம் நடந்து முடிகிற வரைக்கும் நீ முதல் வரிசையில உட்கார்ந்து காத்துக்கிட்டிருக்கணும். தாலி கட்டி முடிச்சு கொஞ்சம் பரபரப்பு ஓய்ஞ்சதும் அந்த ஆகாஷ் கிட்ட நீ போகணும்!"

"போயி?"

"ரொம்ப முக்கியமான ஒரு விஷயம் ரகசியமாப் பேசணும்னு சொல்லி, மண்டபத்திலேயே அவனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற மண மகன் அறைக்கு அவனைக் கூட்டிக்கிட்டு வரணும்."

"அப்புறம்?"

"அந்த அறையில ஒரு சின்ன சிட் அவுட் அதாவது பால்கனி மாதிரி பகுதி இருக்கு. அங்க வந்து நின்னா காத்து வரும். ரோடு தெரியும். அவனை அந்த சிட்-அவுட் பகுதிக்கு கூட்டிக்கிட்டு வரணும்."

"அப்புறம்?"

"அவ்வளவுதான் நீ செய்ய வேண்டியது. மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்."

"எப்படி? எனக்குப் புரியலையே."

"சுரேகா, அந்தக் கல்யாண மண்டபத்தோட அமைப்பு அந்த ரூமோட அமைப்பு எல்லாம் நான் கரெக்ட்டாப் பார்த்து வெச்சிருக்கேன். அந்த ரூம் முதல் மாடில இருக்கு. அந்தக் கல்யாண மண்டபத்துக்குப் பக்கத்தில ஒரு கவர்ன் மெண்ட் ஆபீஸ் இருக்கு. அந்த ஆபீஸ் ஒரே ஒரு மாடி உள்ள கட்டிடம். அந்தக் கட்டிடத்தோட மொட்டை மாடிக்கும் இந்த அறையோட சிட்-அவுட்டுக்கும் நடுவுல இருபதடி தூரம்தான் இருக்கு. வெறும் இருபதடி தூரம்!"

"சரி!"

"ஆகாஷைக் கொலை செய்ய நான் துடிப்போட சுத்திகிட்டிருக்கேன்னு போலீசுக்குத் தெரியும். அவங்க நான் ஏதாவது ஒரு வேஷத்தில கல்யாண மண்டபத்துக்கு வருவேன்னு எதிர்பார்த்து மண்டபத்துக்கு உள்ளேயும், வெளியேயும் ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செஞ்சி வெச்சிருப்பாங்க. என்னைப் பிடிக்க பலவிதமான யோசனைகள் பண்ணி வெச்சிருப்பாங்க. ஆனா நான் மண்டபம் பக்கமே வரமாட்டேன். நான் இப்ப சொன்னனே அந்த கவர்ன்மெண்ட் ஆபீஸ், அந்த மொட்டை மாடில காத்துக் கிட்டிருப்பேன். நீ ஆகாஷை அந்த சிட்-அவுட்க்கு அழைச்சுட்டு வர்ற வரைக்கும் காத்திருப்பேன்."

"அதுக்கப்புறம்?"

"அங்கேருந்து குறி பார்த்து அவனை சுடுவேன்."

"அய்யோ!"

"என் குறி மேல சந்தேகமே வேணாம். தூரமும் வெறும் இருபதடிதான்! அதனால சரியாச்சுட்டுடுவேன். அவன் அலறிகிட்டு விழுவான்."

"நான்?"

"அவன் சரிஞ்சதும் நீ உடனே அந்த ரூமை விட்டு நைஸா வெளில வந்துடு. மண்டபம் பரபரப்பா இருக்கும். நீ கூலா வெளில வந்துடு. தட்ஸ் ஆல்."

சுரேகா யோசித்தாள்.

"நான் தனியாய் பேசணும்னு கூப்புட்டா ஆகாஷ் வருவானா?"

"வர வைக்கிற மாதிரி பேசணும்."

"என்ன பேசணும்? அதையும் சொல்லிடுங்க!"

"ம்?" ரஞ்சித் சற்றே யோசித்து, "உங்கப்பா பத்தி ஒரு முக்கியமான தகவல் உடனே சொல்லணும்னு சொல்லு. இன்னொரு முக்கிய மான விஷயம்..."

"என்ன?"

"அவனை நீ தனியாப் பேச அழைச்சுட்டுப் போறதை கூடுமான வரைக்கும் வேற யாரும் கவனிக்காம இருந்தா நல்லது, என்ன செய்றியா?"

"எனக்கு பயமா இருக்குங்க. இதெல்லாம் பழக்கமில்லை."

"எனக்கு மட்டும் என்ன, கொலை செய்றது பழக்கமான விஷயமா? ஒரு லட்சம் உனக்கு வேணுமா, வேணாமா?"

"வேணும், அவ்வளவு பணம் இருந்தா இந்த கருமாந்திரத் தொழிலையே விட்டுடுவேன்."

"விட்டுட்டு என்ன செய்வே?"

"கொஞ்ச நாள் நான் ஒரு பியூட்டி பார்லர் கடையில வேலை பார்த்திருக்கேன். ஒரு லட்சம் இருந்தா சின்னதா ஒரு இடம் பிடிச்சி பியூட்டி பார்லர் சொந்தமா ஆரம்பிச்சி கௌரவமா தொழில் நடத்துவேன்."

"வெரிகுட்..! அப்போ நான் சொன்ன மாதிரி செய்ய உனக்குச் சம்மதம்தானே?"

"பணம் எப்போ கொடுப்பீங்க?"

"அம்பதாயிரம் இப்பவே தர்றேன். மிச்சம் அம்பதாயிரம் நாளைக்கு ராத்திரி நானே இங்கே தேடி வந்து இதே வீட்ல வெச்சித் தர்றேன்!" என்ற ரஞ்சித் சூட்கேஸ் திறந்து பேண்ட்டுகளுக்கு அடியிலிருந்து ஒரு ஐநூறு ரூபாய் கட்டை எடுத்து அவள் கையில் திணித்து, "இப்ப என் மேல நம்பிக்கை வருதா?" என்றான்.

(தொடர்ந்து வரும்)

# அறிமுகங்கள் 03 அனுபவங்கள்

பேசும்படம் இதழில் வெளியிட்டேன்.

பேசும்படம் கடைக்கு வந்த அதே தினத்தில், இயக்குநர் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் எனக்கு ஃபோன் செய்து, தெய்வநாயகியின் விலாசத்தைக் கேட்டு வாங்கினார். சில நாட்களில் அவர் தெய்வநாயகியை, கே. ஆர். விஜயாவாக மாற்றி, 'கற்பகம்' படத்தில் அறிமுகப்படுதினார்.

## மகளை நடிக்க வைக்க மறுத்த பெற்றோர்

இதற்கிடையே 'கற்பகம்' படம் வெளியாவதற்கு முன்பே, ஒரு ஃபோட்டோகி ராபர், நடிப்பதற்கு வாய்ப்பு வாங்கித் தருவதாக ஆசை காட்டி, தெய்வநாயகியை கவர்ச்சியாக படம் எடுத்து, எக்கச்சக்கமான பிரின்ட் போட்டு விற்று விட்டார். அவை, ஒரு படம் பத்து பைசா என்று பிளாட்பாரத்தில் விற்கப்பட்டன. அப்போது அந்தப் படத்திற்கு ஏககிராக்கி.

இதை அறிந்த தெய்வநாயகி என்னிடம் வந்து, அழ ஆரம்பித்து விட்டார். "எல்லாரும் அதைப் பற்றி கேவலமாக பேசுகிறார்கள். நான் முன்னுக்கு வர வேண்டியவள்!" என்று சொன்னாள். நான் ஒரு யுக்தி சொல்லிக் கொடுத்தேன். "யாராவது அந்தப் படத்தை எடுத்து வந்து காண்பித்து, "என்ன இப்படி...." என்று ஆரம்பித்தால், ஐய்ய... என்ன அக்கிரமமிது? என்னுடைய முகத்தை எவளுடைய உடம்பிலே வைத்து... முகம் என்னுடையதுதான். உடம்பு என்னுடையதல்ல' என்று அடித்துப் பேசிவிடு!" என்றேன்.

> திரையுலகிலும், பத்திரிகையுலகிலும் கடந்த 50க்கும் அதிகமான ஆண்டுகளாகப் பணியாற்றிவர் காதம்பரி பாசு. பேசும்படம் சினிமா சஞ்சிகையின் புகைப்படக்காரராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர். இவரது அறிமுகத்தால் சினிமாவில் நடிக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் பலர் அந்த அறிமுகங்கள் சிலருடன் ஏற்பட்ட சில அனுபவங்கள் தான் இவை:



தெய்வநாயகிக்கு ரொம்ப சந்தோஷம்.

ராமன் தெருவில், புதிதாக வீடு கட்டி கே. ஆர். விஜயா கிரஹபிரவேசம் செய்த போது, நான் அழைக்கப்பட்டிருந்தேன். அவர் தன் கணவர் வேலாயுதத்திடம் என்னை அறிமுகம் செய்து, "நான் சினிமாவில் நுழைவதற்கு முன், என்னைக் காரில் ஏற்றமாட்டேன்... டாக்சியில் வா... என்றார். இன்று நம்மிடம் எத்தனை கார்கள் இருக்கின்றன?" என்று சொன்னதும் என் மனம் வேதனையடைந்தது. "தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். அவள் விளையாட்டாகத்தான் சொன்னாள்" என்று சமாதானம் செய்தார் வேலாயுதம்!

என் வீட்டிற்கு அருகாமையில்தான் விஜயாவின் பங்களா இருக்கிறது. எப்போதாவது காரில் எதிர் எதிரே சந்தித்தால் ஒரு புன்சிரிப்பை மட்டும் அவிழ்த்து விடுவாள் அந்த புன்னகை அரசி!

**என்** உறவினர் ஒருவருக்கு தெரிந்த ஒரு குடும்பம்.

அங்கு ஒரு நாள் சென்றேன். அந்த வீட்டில் ஒரு பெண் சிகப்பாய், அழகாய் இருந்தார். எப்பொழுதும் ஒரு அழகான பெண்ணை பார்த்து விட்டால் அந்தப் பெண்ணை எப்படியாவது படம் எடுத்து விடுவேன்.

அப்பெண்ணை படம் எடுக்க வேண்டும் என்ற என் விருப்பத்தை பெண்ணின் தாயாரிடம் தெரிவித்தேன். அந்தப் பெண்ணின் வீட்டார் "என்னத்துக்குங்க அநாவசியமாக எடுத்துக் கிட்டு.... ஏதாவது அவசியம் இருந்தால் பரவாயில்லை, இப் பொழுது வேண்டாம்....." என்று கூறி விட்டனர். என் உறவினரைப் பார்த்தேன் பரிதாபமாக. அவர் அந்தப் பெண்ணின் தகப்பனாரைப் பார்த்தார். கண்கள் பேசின. "சும்மா எடுத்துத் தருகிறேன். வீட்டில் மாட்டி வைக்கலாம்," என்று நான் வற்புறுத்தவும் பெற்றோர் சம்மதம் தெரிவித்தனர்.

நான் எப்பொழுதும் ஒரு பெண்ணை 40, 50 படங்கள் எடுப்பேன். அந்தப் பெண்ணையும் அப்படித் தான் எடுத்தேன். அந்தப் படங்களை பிரின்ட் போட்டுப் பார்த்தால் பிரமாதமாக வந்திருந்தது. அதோடு நிறுத்த எனக்கு திருப்தி ஏற்படவில்லை. அவர்களை அசத்த வேண்டும் என்பதற்காக மிகவும் நன்றாக இருந்த ஒரு படத்தை 20க்கு 30 இன்ஞ்ச் அளவில் பெரிய படமாக போட சொன்னேன்.

மறுநாள், ஃபோட்டோ ஸ்டூடியோவிற்கு படத்தை வாங்கச் சென்றேன். படத்தை பார்த்த எனக்கே பிரமிப்பாக இருந்தது. அந்தப் படத்தையே சில நிமிடங்கள் கையில் வைத்து பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது கீழ்பாஸ் வேட்டி கட்டிய ஒரு தெலுங்கர் என் தோள் பக்கமாக எட்டி எட்டி படத்தைப் பார்த்தார். அதைக் கண்டு நான் பெருமையுடன் அந்தப் படத்தை அவரிடம் கொடுத்தேன். அவர், தான் ஒரு தெலுங்கு படத்தயாரிப்பாளரென்று கூறி, "பெண் அழகாக இருக்கிறாளே.... யார்? என்று கேட்டார். "என் பிரண்ட். ...' என்றேன். 'சினிமாவில் நடிப்பாளா?' என்று கேட்டார். 'அவர்கள் வீட்டில் அனுமதிக்கமாட்டார்கள்..'என்றேன்.

"அட்ரஸ் கொடுங்கள்... நான் கேட்டுதான் பார்க்கிறேன்," என்றார் அவர். வீட்டு நம்பர் எனக்கு தெரியாது. நான் அவர்கள் வீட்டிற்குப் போனபோது குறித்து வைத்துக் கொள்ளவில்லை.

பிறகு நான் என் வண்டியை பாண்டி பஜாரிலேயே நிறுத்தி விட்டு தெலுங்கு தயாரிப்பாளர் காரில் அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். படங்களையும் அவர்களிடம் கொடுத்தேன். அவர்கள் பிரமித்துப் போனார்கள். தயாரிப்பாளர்களையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து அவர் எதிர்பார்க்கிற விஷயத்தையும் சொன்னேன். சந்தோஷத்தை பிரதிபலித்துக் கொண்டிருந்த அவர்கள் முகத்தில் துன்ப சாயல் படர்ந்தது.

முதலில் பெண்ணை நடிக்க வைக்க சம்மதிக்கவில்லை. பிறகு, நான் விவரமாக எடுத்துச் சொல்லி சம்மதிக்க வைத்தேன். தயாரிப்பாளருக்கு ரொம்ப சந்தோஷம்.

அந்தப் பெண்தான் புகழ் பெற்ற 'பைரவி' கீதா. பிறகு கீதா.

பின் கீதாவின் படங்கள் வெளியாகும் அதை யெல்லாம் பார்த்து விட்டு, டெலிஃபோன் மூலமாக என் கருத்துக்களைச் சொல்வேன்.

**காதம்பரி பாசு**

(நிறைந்தது)

சாமார் 22 அடி உயரமுள்ள மதிலின்மேலிருந்து கீழே தரையில் குதிக்கப்போவதாக ஆராச்சியார் துரைராசா அவர்கள் கூறிய வார்த்தையை அரசாங்க அதிபர் நம்பவே இல்லை. ஆனால் தான் இந்தச் சாதனையைச் செய்யப் போவதாக ஆராச்சியார் பிடிவாதமாக இருந்தார். அரசாங்க அதிபர், "ஆராச்சியார், உங்களுக்கு வயது ஐம்பத்திமூன்றாகிறது. இந்த வயதில் உங்களால் கோட்டை மதிலிலிருந்து கீழே பாய முடியுமா? உங்கள் கைகால் எல்லாம் முறிந்து வீணாகச் சாகப் போகிறீர்கள்!" என்று கூறி அனுமதிதர மறுத்து விட்டார்.

இருப்பினும் துரைராஜா அண்ணர் தனது பிடியில் சற்றும் விட்டுக் கொடுக்கவில்லை. அவருடைய பிடிவாதம் தாங்க முடியாமல், "நான் அனுமதி தருகிறேன். ஆனால் நீங்கள் பொலிசாரிடம் சென்று அவர்களுடைய அனுமதியைப் பெற்று வாருங்கள்!" என்று அரசாங்க அதிபர் கூறிவிட்டார்.

அரசாங்க அதிபர் கூறியபடி பொலிசாரிடம் அனுமதி பெறுவதற்காக ஆராச்சியார் சென்றார். அவருடைய கோரிக்கையைக் கேட்டதும், பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கிண்டலும் கேலியுமாக எள்ளி நகையாடினர். இருப்பினும் துரைராசா அவர்கள் கோரிக்கையில் பிடிவாதமாக இருந்தமை யினால், தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் நோக்குடன், தலைமைப் பொலிஸ் அதிகாரி, "நீர்போய் ஒரு டாக்டரைக்கண்டு இப்படியான ஒரு சாதனையை நிலைநாட்டுவதற்கு உமது உடம்பில் வலு இருக்கிறதா, என்பதை, உறுதிப்படுத்தும் ஒரு சான்றிதழை வாங்கி வாரும்!" என்று கூறி அனுப்பிவிட்டார்.

ஆராச்சியார் அரசாங்க மருத்துவ மனைக்குச் சென்றார். இத்தகைய சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கு தங்களுக்கு அதிகாரம் கிடையாது என்று கூறி, "ஒரு தனியார் மருத்துவரிடம் சென்று உமது கோரிக்கையைக் கூறி சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்!" என்று கூறி அனுப்பிவிட்டார்கள்.

அரசாங்க மருத்துவரல்லாத டாக்டர்கள் சிலரை ஆராச்சியார் அணுகினார். அவர்களும் சாக்குப்போக்குச் சொல்லி அவரது கோரிக்கையை நிராகரித்து விட்டனர்.

கோட்டைமுனை அரசடி வீதியில் தனியார் மருத்துவமனை ஒன்றை நடத்தி வந்த டாக்டர் தருமரெத்தினம் அவர்களிடம் சென்ற ஆராச்சியார், "எனது உடலை பரிசோதனை செய்து ஏதாவது கோளாறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து ஒரு சான்றிதழ் தாருங்கள்," என்று கேட்டுக்கொண்டார்.

உண்மையில் டாக்டர் தருமரெத்தினம் அவர்களிடம் அத்தகைய சான்றிதழ் என்ன காரணத்துக்காகத் தேவைப்படுகின்றது என்ற உண்மையைக் கூறவில்லை. அவரும் ஆராச்சியாரின் உடல் நிலை நல்ல திருப்திகரமாக இருப்பதாக ஒரு சான்றிதழை வழங்கினார்.

அந்தச் சான்றிதழுடன் பொலிஸ் அதிகாரியை அணுகி தன்னுடைய சாதனைக்கு அனுமதி தருமாறு கோரினார். அவர்களுக்கும் எதுவும் செய்ய முடியவில்லை. அரசாங்க அதிபருடன் தொலைபேசியில் பொலிஸ் அதிகாரி தொடர்பு கொண்டு நிலமையைச் சொன்னார். அரசாங்க அதிபரும் அனுமதி வழங்கும்படி கூறினார். ஆனால் ஆராச்சியார் துரைராசா அவர்களிடம், அவருடைய கைபட ஒரு கடிதத்தை வாங்கும்படி சொன்னார். அவர் செய்யப்போகும் சாதனையின் பயனாக அவருடைய உடலுக்கோ உயிருக்கோ எந்தப்பாதிப்பு ஏற்பட்டாலும் அதற்கு அவரே தான் பொறுப்பு என்ற கருத்துப்பட ஆராச்சியாரிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்க அதிபர் பொலிஸ் அதிபருக்கு கூறினார்.

எதுவித தயக்கமுமில்லாமல் மேற்படி கடிதத்தை பொலிஸ் அதிகாரியிடம் எழுதிக் கொடுத்தார். அவரும் அனுமதியைக் கொடுத்தார்.


"கோட்டை மதில் மீதிருந்து கீழே தரையில் குதிப்பதற்கான சாதனையைப் புரிய வேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது?" என்று ஆராச்சியாரைப் பலரும் விசாரித்தனர். இதற்கு அவர் கூறிய காரணம் இது தான்:

"இந்தியாவிலிருந்து வந்த ஓர் இளைஞன் முற்றவெளியைச் சுற்றியுள்ள தெருவில் மூன்று நாட்கள் இரவு பகலாக ஓடிச்சாதனை புரிந்தான். இதனைப் பின்பற்றி நமது இளைஞர்களும் வார முடிவு நாட்களில் முற்ற வெளியைச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே ஒருவர் செய்து காட்டிய சாதனையை நம்மவர்களும் பின்பற்றி ஓடித்திரிவதில் பலன் என்ன இருக்கிறது? ஆகவே புதுமையாக ஒரு சாதனையை நிலைநாட்ட வேண்டும் என்று விரும்பினேன். அதற்காக இத்திட்டத்தை நான் வகுத்தேன். இதற்கு மற்றுமொரு காரணமும் இருக்கிறது.

நமது கச்சேரி மதிலோடு ஒட்டிய சுற்றுத்திடலில் அடிக்கடி ஒரு பசுமாடு வந்து மேய்கிறது. இதனைப் பிடிப்பதற்காக நாங்கள் பெரும்முயற்சி செய்து பார்த்தோம். ஆனால் முடியவில்லை. அந்த மாடு, நாங்கள் பிடிக்கப்போகும் போது, இந்த உயரமான மதில்மேலிருந்து கீழே தரையில் பாய்ந்து, எந்த விதமான பாதிப்புமில்லாமல் தானாக நடந்து செல்கிறது. அறிவுகுறைந்த அந்த ஒரு பசுமாடு இந்த உயரத்திலிருந்து பாய்ந்து எதுவிதமான பங்கமுமில்லாமல் நடந்து போகும்போது, ஆறறிவு படைத்த ஒரு மனிதனால் இதைச் செய்யமுடியாதா?" என்று எல்லோருடைய வாயையும் அடைத்தார்.



## ஆராச்சியாரின் அற்புத சாதனை



தொடா சைக்கிள ஒட்டத்தில் பங்கு பறறிய ஆராச்சியார் துரைராசா சைக்கிளுடன் வலது புறத்தில் (கறுத்த கண்ணாடியுடன்) காணப்படுகிறார். அவரை உற்சாகப்படுத்துவதற்காக அவருடன் சைக்கிளில் ஓடிய இரு இளைஞர்களும் உற்சாக வரவேற்பளித்த பொதுமக்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

ஆராச்சியார் துரைராசா அவர்கள் தனது சாதனைக்காக மற்றுமொரு முன்னேற்பாட்டையும் செய்யப் போவதாகக் கூறினார். தான் தாரையில் பாயப்போகும் இடத்தில் 6 அடி ஆழம், 6 அடி அகலம், 6 அடி நீளம் கொண்ட ஒரு குழி பறிக்க வேண்டும். அதில் ஓர் அடி உமி, ஓர் அடி மண் என்ற ரீதியில் குழி நிரப்பப்படவேண்டும். 'இத்தகைய ஒரு குழி அமைக்கப்பட்டால் எந்த உயரத்திலிருந்து பாய்ந்தாலும் பஞ்சுமெத்தையில் பாய்வதுபோல் இருக்கும்' என்று விளக்கமளித்தார்.

இந்தக்குழியை அமைப்பதற்கும் விளம்பரம் முதலானவற்றைச் செய்வதற்கும் பணம் தேவைப்படுமல்லவா? இதற்காக பண வசூலுக்காக ஒரு சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டது அந்நிருபம் கச்சேரிப் பணியாளர்கள் அனைவரிடமும் சில ஊழியர்களால் கொண்டு செல்லப்பட்டது. பணிபுரியும் ஒவ்வொருவரும் அந்த நிருபத்தில் கையொப்பமிட்டு தாங்கள் வழங்கப்போகும் பணத்தொகையையும் குறிப்பிட்டிருந்தனர்.

கச்சேரியில் சிறாப்பர் என்ற பணம் வழங்கும் அலுவலர் பகுதிக்கு மேற்படி பணம் வசூலிக்கும் நிருபம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு உதவிச் சிறாப்பராகக் கடமைபுரிந்தவர் ஆராச்சியார் துரைராசாவின் இளைய சகோதரரான கந்தையா என்பவர். அவரிடம் அந்த நிருபம் கொடுக்கப் பட்டதும் அதில் காணப்பட்ட வாசகங்களைப் படித்துப்பார்த்ததும் கடும் கோபமுற்றார். அதனைச்சுக்கு நூறாகக் கிழித்து எறிந்து விட்டு தன்னுடைய தமையனாரைக் கண்டமாதிரித்திட்டினார்.

இந்தச் சம்பவம் பற்றி அரசாங்க அதிபரிடம் கூறப்பட்டதும் அவர் சிரித்தவாறு, "சிறாப்பர் கந்தையா செய்ததுதான் சரியான வேலை ஆராச்சியாரை என்னிடம் கூட்டி வாருங்கள்!" என்று கூறினார்.

கடுகடுத்த முகத்துடன் தன் முன் வந்து நின்ற ஆராச்சியாரை தன்முன்புறமிருந்த இருக்கையில் அமரச்செய்து பல புத்திமதிகளைக் கூறினார். இறுதியில், "இந்திய இளைஞன் தொடர்ந்து சைக்கிள் சவாரி செய்ததுபோல் நீரும் முற்றவெளியைச் சுற்றி ஞாயிற்றுக்கிழமை காலை ஓடத்தொடங்கும். இதற்காக எவரிடமும் பணம் வசூல் செய்யத் தேவையில்லை. செலவேதும் ஏற்பட்டால் அதனை நான் பொறுப்பேற்கிறேன்!" என்று கூறி ஆராச்சியாரை இதற்குச் சம்மதிக்க வைத்தார். உடனடியாகவே ஆராச்சியாருக்கு வெள்ளை அரைக்காற்சட்டையும் மேல்சட்டையும் புதிதாகத் தைப்பதற்கு தையல்காரர் ஒருவரை அழைத்து ஏற்பாடு செய்தார் அரசாங்க அதிபர்.

அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டபடி அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை ஆராச்சியார் துரைராசா அவர்கள் வின்சென்ற் மகளிர் கல்லூரியின் முன்புறம் தன்னுடைய சைக்கிள் சவாரியை ஆரம்பித்தார். அவருக்கு இருமருங்கிலும் வேறு இரு இளைஞர்கள் துணையாக சைக்கிள் ஓடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கச்சேரிக்கு அருகாமையில் மட்டக்களப்பு வாடிவீடு அமைந்துள்ளது. இதன் நிருவாகியிடம், ஆராச்சியார் கேட்பதைக் கொடுக்கும்படியும் அதற்கான பணத்தினை தான் தருவதாகவும் அரசாங்க அதிபர் கூறியிருந்தார். இதன்படி மூன்று அல்லது நான்கு சுற்றுக்கள் ஓடிமுடிந்ததும், ஆராச்சியார் வாடி வீட்டு முன்புறமாக காலை ஊன்றி சைக்கிளை நிறுத்துவார். வாடிவீட்டு முகாமையாளர் ஒரு போத்தலில் சாராயமும் சோடாவும் கலந்து அதன்மேல் மூடியுடன் ஒரு குழாயையும் பதித்துக் கொடுப்பார். ஒருகையில் அந்தப்போத்தலை ஏந்திய வண்ணம், அடிக்கடி அதனைச் சுவைத்தபடி தனது சைக்கிள் ஓட்டத்தை ஆராச்சியார் தொடர்வார்.

காலை 8 மணியளவில் ஆராச்சியார் சைக்கிள் ஓடத்தொடங்கினார். நேரம் செல்லச் செல்ல, கடும் வெயில் எரித்தது பகல் 10 மணியாகும் போதே ஆராச்சியார் களைத்துப் போனார். இருப்பினும் அவர் மனம் தளரவில்லை; உறுதியுடன் தனது ஓட்டத்தைத் தொடர்ந்தார்.

ஒரு மணியளவில் அரசாங்க அதிபரும் கச்சேரி உயர் அதிகாரிகளும் பள்ளிவாசலுக்கு எதிரேவந்து சேர்ந்தனர். முன் ஏற்பாட்டின்படி மேளம், நாதஸ்வரம் வாசிப்போர் குழுவொன்றும் அங்கு வந்து சேர்ந்தது. பூமாலையும் கையுமாக நின்றிருந்த அரசாங்க அதிபர் தனது கையை நீட்டி ஆராச்சியாரை சைக்கிள் ஓட்டத்தை நிறுத்தும்படி சைகை செய்தார். சைக்கிள் நிறுத்தப்பட்டதும் தனது கையிலிருந்த மாலையை ஆராச்சியாருக்கு அணிவித்தார். மேளதாளம் முழங்கியது. பட்டாசுகளும் கொழுத்தப்பட்டன.

கடைத்தெரு, பிரதான வீதி, மத்திய வீதி போன்ற முக்கிய வீதிகளினூடாக ஆராச்சியார் துரைராசா ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். கடைக்காரர்கள் அனைவரும் பெரும் பட்டாசு கொழுத்தி மாலை சூடி ஆராச்சியாரைப் பாராட்டினார்கள்.

**(இன்னும் வரும்)**

இரா.பத்மநாதன்

## கலை உலகில் கருணாநிதி 03

என்ன செய்வது? வீட்டுக்கு ஓடினார்.

கருணாநிதியின் தாயாரின் பெட்டியைத் திறந்து, தங்கச் சங்கிலியை எடுத்துப் போய் அடகு வைத்து விட்டு அந்தக் காசில், சிக்கலைத் தீர்த்தார்.

ஆனால், சங்கிலியைக் காணாததை அறிந்த தாயார், ஒரு மந்திரவாதியைக் கூப்பிட்டு குறி கேட்டார். பகுத்தறிவுவாதி கருணாநிதி பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார். வேறுவழி?

பெரியார் திருவாரூருக்குச் சென்றால் அங்குள்ள சிங்கம் என்ற சுயமரியாதைக்காரர் இல்லத்தில்தான் தங்குவார். சிலசமயம் மாவூரில் இருந்த பெரும் நிலப் பிரபுவும், பிராமணருமாகிய சர்மா பங்களாவில் தங்குவது வழக்கம்.

"நாளெல்லாம் பார்ப்பன எதிர்ப்பு. அவரது வீட்டில் விருந்து; தங்கலா?" என்று தொண்டர்கள் மனங்குமுறினர். ஆனால், பெரியாரிடத்தில் நேரில் சொல்ல பயம்.

திருவாரூர் சிங்கம் வீட்டில் நானும், பெரியாரும் தங்கியிருந்தபோது, தோற்றத்திற்கு மிகமிகச் சிறிய பையனாகக் காணப்பட்ட ஒருவர் பெரியாரிடத்தில் வந்தார். எடுத்த எடுப்பிலேயே பெரியார் மாலூர் சர்மா வீட்டில் தங்கியதைச் சொல்லி, "அது எங்களுக்கெல்லாம் பிடிக்கவில்லை," என்று சொன்னான் அந்தச் சிறுவன். பெரியார், "நாம் அங்கே ஒருநாள் தங்கிய போதிலும் அவர்களைத் திட்டிக் கொண்டு தானே இருக்கிறோம். அதையும் கேட்டுக் கொண்டு நமக்கு விருந்தளித்து, கார் வசதி, தங்க பங்களா வசதி செய்து தருகிறார்களே! அதை ஏன் மறுக்க வேண்டும்?" என்று கேட்டார். "என்ன இருந்தாலும் அது கொள்கைக்கு நேர் விரோதம்," என்றான் சிறுவன். அன்றோடு பெரியாரும் அங்கு போவதை நிறுத்திக் கொண்டார்.

'பெரியாரிடமே வாதிட்டு வென்ற அந்தச் சிறுவன்-கருணாநிதிதான்.'

சினிமா பின்னணிப் பாடகரும், இசையமைப்பாளருமான சிதம்பரம் ஜெயராமனின் தங்கை பத்மாவதியைத்தான் கருணாநிதி திருமணம் செய்திருந்தார். ஜெயராமனுக்கும், கருணாநிதிக்கும் ஒரேநாளில்தான் திருமணம் நடந்தது. (ஜெயராமனுக்கு வைதீக திருமணம்; கருணாநிதிக்கு சுயமரியாதைத் திருமணம்.)

'உதயணன்-வாசவதத்தா' என்றொரு படம். தியாகராஜ பாகவதர் கதாநாயகனாக நடித்தார். அந்தப் படத்திற்கு ஏ.எஸ்.ஏ.சாமி தான் கதைவசனம். அப்போது சாமி டைரக்டராகவில்லை. படப்பிடிப்பின் போது ஒரு நாள் சாமியிடம் சிதம்பரம் ஜெயராமன், "எனக்கு ஒரு மைத்துனர் இருக்கிறார். பெயர் கருணாநிதி. நாடகமெல்லாம் நன்றாக எழுதுவார். அவரை உங்களுக்கு அசிஸ்ட்டண்டாக வைத்துக் கொள்ள முடியுமா?" என்று கேட்டார். சாமியும், 'ஆகட்டும், பார்க்கலாம்,' என்றார். ஆனால், 'உதயணன் வாசவதத்தா' படம் வெளியான போது அதில் ஹீரோ-தியாகராஜபாகவதர் இல்லை. அவர் லட்சுமி காந்தன் கொலை வழக்கில் சிக்கி சென்னையில் மத்திய சிறையில் இருந்தார்... என்று



அறந்தை நாராயணன் 'தமிழ் சினிமாவில் கதை' நூலில் குறிப்பிடுகிறார்.

பத்திரிகையாளர் எம்.எஸ்.பாசு (காதம்பரி பாசு) 'பாசரசு' என்றொரு பத்திரிகை நடத்தியிருக்கிறார். 1946ம் ஆண்டு ஆகஸ்ட் மாத 'பாசரசு' இதழில், பி.கே.முத்துசாமி என்பவர் 'என் பிரயாணக் கட்டுரை' என்ற தலைப்பில் எழுதிய 'சேலம் ஜூபிடர் ஸ்டூடியோ ரவுண்ட் அப்' கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'சென்னையிலிருந்து கிளம்பும் போதே ஜூபிடர் பிக்சர்ஸ் ஸ்ரீ எஸ்.கே.,யிடமிருந்து ஸ்ரீ சோமசுந்தரம் அவர்களுக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கிக் கொண்டு போயிருந்தேன்.

'அந்த ஸ்டூடியோவில்தான் கதை, வசனகர்த்தா ஏ.எஸ்.ஏ. சாமி குடியும், குடித்தனமுமாக இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். சாமி எங்களை வரவேற்று, வீட்டுக்குள் சென்று தனது 'ட்ரேட் மார்க்' சில்க் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு எங்களை கூட்டிக் கொண்டு ஸ்டூடியோவை சுற்றிக் காட்டினார். போகும் போது பேசிக் கொண்டே போனதில் அவர் இப்பொழுது ஒரு டைரக்டர், 'ராஜ்குமாரி' என்ற தமிழ்ப் பட தயாரிப்பை அவரை நம்பி விட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டோம்!'

இந்தக் கட்டுரையில் கருணாநிதி பற்றி எந்தக் குறிப்பும் காணப்படவில்லை.

பத்தாம் வகுப்பில் முதல் வருடம் பெயில் ஆனார் கருணாநிதி. பிறகு, இரண்டாவது வருடம் பரீட்சை எழுதினார். அதிலும் அவுட்! வீட்டில் உள்ளவர்கள் திட்டினார்கள். இதனால் கருணாநிதி வீட்டில் கோபித்துக் கொண்டு வேதாரண்யத்துக்கு அருகில் உள்ள கோடியக் கரையில், போய் உட்கார்ந்து கொண்டார்.

பிறகு, அவரது தந்தை முத்துவேலர் கோடியக்கரைக்கு சென்று, மகனை சமாதானப்படுத்தி வீட்டுக்கு அழைத்து வந்தார்.

மூன்றாவது முறையாக மீண்டும் பத்தாம் வகுப்பு பரீட்சை எழுதிய கருணாநிதி அந்த தடவையும் பெயில் ஆனார். அத்தோடு பள்ளிப் படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டார்!

'முரசொலி' முன்னாள் துணையாசிரியர் பி.முருகேசன் தன் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ள விஷயம் இது:

கருணாநிதி பூம்புகார் கலைக் கல்லூரி விழா ஒன்றில் பேசும் போது, "நான் எஸ்.எஸ்.எல்.சி., படித்த போது, தேர்வு எழுதாமல், அப்போது தஞ்சைக்கு சுற்றுப் பயணம் வந்த பெரியாரோடு கூட்டங்களில் கலந்து கொள்ளப் போய் விட்டேன். அதனால் எஸ்.எஸ்.எல்.சி., தேறவில்லை," என்று குறிப்பிட்டுள்ளார்.

'குடியரசு பத்திரிகையில் பெரியார். கருணாநிதிக்கு கொடுத்த மாதச் சம்பளம் ரூ.40. 'விமானி' என்ற புனைப் பெயரில் 'குண்டுவீச்சு' என்ற பகுதியை கருணாநிதி எழுதிவந்தார். 'பெரிய இடத்துப் பெண்' என்ற கதையை எழுதினார். பெரியார் நிதி விழாவில் 'பிரேத விசாரணை' என்ற நாடகத்தை நடத்தி பெரியாருக்கு ஆயிரம்ரூபாய் வசூலித்துக் கொடுத்தார்.

ஆனாலும், பெரியாரின் அடக்குமுறையை கருணாநிதியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

*(வருவார்)*

ஆர்.சி.சம்பத்

# மறுபுறம்

**ம**னசைக் கட்டுப்படுத்திப் பார்த்தான் ராகவன். முடியவில்லை.

கல்யாணமானவன் இன்னொரு பெண் மேல் விருப்பம் வைக்கலாமா? தவறு என்றாலும் செய்தால் என்ன பெரிதாக விளைந்துவிட போகிறது? என்று யோசித்தான்.



அவன் யோசிப்பிற்கு காரணம் இருந்தது.

கணவன் இறந்த அந்த இடத்திற்கு வேலைக்கு வந்த பெண்கள் நாலைந்து பேர் இருக்கிறார்கள். அவனுடைய பிரிவில். எல்லோருமே கிட்டத்தட்ட முப்பத்தைந்து வயதிற்குள் கனவு கண்டு கொண்டிருக்கும் காலத்தில் வாழ்க்கையை இழந்தவர்கள்.

ராகவன் கொஞ்சம் உதவியாளர்.

ஏதாவது ஒரு சந்தேகம் என்றால் இவனைத்தான் தேடி வருவார்கள். அது இவனுக்குப் பெருமையாகவும், சாதகமாகவும் இருந்தது. அதைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்த்தான்.

அது போன்று வேலைக்கு வந்த பெண்களில் சில பேர் ராகவனிடம் வழிய ஆரம்பித்தார்கள்.

அந்த இளம் விதவைகளில் சாந்தி சபலபுத்தியுடையவள் அல்ல. ராகவன் அவளிடம் வாய் விட்டுப் பார்த்து வாங்கிக் கட்டிக் கொண்ட சந்தர்ப்பங்கள் ஏராளம்.

"கண்டபடி புத்தியை மேய விடறது தப்பு!" என்று பளிச் சென்று பலரறிய பேசிவிடுவாள்.

**அ**ன்று வீட்டில் அவன் மனைவி அழுது கொண்டிருந்தாள். அருகே போனான். "என்ன ஆச்சு சங்கரி?" என்றான்.

ராகவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"என்னடா ஆச்சு?"

"இனிமே நான் வேலைக்குப் போகமாட்டேங்க!" என்று அழுதாள்.

"ஏன்? என்னடா பிரச்சனை?" என்றான்.

**ஹரிணி**

"இன்னிக்கு மீட்டிங் நடந்தது. முடிஞ்சதும் எல்லோரும் போயிட்டாங்க. நானும் மனேஜரும் மட்டும் தான். அந்த நாயி கிட்ட வந்து கைய புடிச்சு ஏதேதோ பேசுது! ஓங்கி அறைஞ்சிட்டு வந்துட்டேன்!" என்று சொல்லிவிட்டு அழுதாள்.

அதிர்ந்து போனான் ராகவன். ■

# நேர் கோடுகள்

"நந்து, நந்து பாடம் படிச்சிட்டியா? நீ இண்டைக்கு நல்லாவே இல்லை. என்னடா கண்ணா?" அவன் எதையுமே சட்டைசெய்யாமல் எழுந்துபோய் கட்டிலில் சரிந்தான். நந்தனுக்கு ஏழுவயது. ஐங்கர் கேமா தம்பதிகளின் ஒரே மகன். துடிப்பும் புத்திசாலித்தனமும் அவனோடு கூடப்பிறந்தவை. ஆனால் இன்று சோர்வாக....!

நேற்று! "அப்பா அப்பா நாளைக்கு மாதுவுக்கு பேர்த்டே அப்பா. ஏதாச்சும் வாங்கித்தாங்கப்பா!" என்று அடம் பிடித்தான். மாலை அப்பாவோடு கடை தெருவுக்கு போனான். அவனுக்கு எதைவாங்குவது



என்று எதுவுமே புரியவில்லை. மான்குட்டி, கரடி பொம்மை ரோசாப்பூ தொப்பி, முயல்சப்பாத்து எதுவுமே பிடிக்க வில்லை. ஏதோ ஒன்று. எது என்று புரியவில்லை. ஆனால் அவளுக்கு அதுதான் விருப்பமாக இருக்க வேணும்! என்று மட்டும் நினைத்தான். "அப்பா, அப்பா!" திடீரென்று உற்சாகமானான். "எனக்கு அந்த கண்ணன் பொம்மை வேணும்!" மேகவண்ணத்தில் புல்லாங்குழலுடன் நின்ற அந்த இடையன் கண்ணனை அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. வாங்கியும் கொண்டான்.

"ஏன் கேமா நந்துவுக்கு என்ன?"

"தெரியேல்லை. சரியா சாப்பிடகூட இல்லை!"

"ஏன்ரா நந்துக்குட்டி ரீச்சர் ஏசினாங்களா?"

"ம்.. ம்!"

"அப்ப சுகமில்லையா?"

"இல்லை!"

"அப்ப ஏன் சோம்பலாய்!"

"அப்பா எனிமேல் நான் ஸ்கூலுக்கு போகமாட்டன்!" அதுவரை அடக்கிவைத்து இருந்தமாதிரி அழத்தொடங்கினான்.

"ஏன் நந்து அப்பாவிட்டை சொல்லமாட்டியா?"

"இல்லைப்பா எனக்கு பிடிக்கேல்லை. அவ கூடாது!"

**இணுவில் உத்திரன்**

"ஆ- யார் கூடாது? சுபாவா, ராசியா, ஆமாதுவா!"

"ம்!"

"ஏன் நேற்று கூட கண்ணன் பொம்மை வாங்கிக் கொண்டு போனாயே?"

"இல்லைப்பா. அவ இண்டைக்கு என்னோடை விளையாடேல்லை, சாப்பிட வரவே இல்லை. என்கூட பேசக்கூட இல்லை. எல்லாம் அந்த சங்கரோடைதான். எனக்கு அழுகை அழுகையா வந்திச்சப்பா!"

"ஏன் நந்து நீ அவகூட சண்டை போட்டியா?"

"இல்லைப்பா. நான் கூப்பிடவும் அவ வரவே இல்லை. சங்கரோடை தான் விளையாடினா!" என்றபடி அழத்தொடங்கினான்.

"இஞ்சை நீ நல்ல பிள்ளை தானே! அழாமல் நித்திரை கொள். எனி திங்கட்கிழமை தானே ஸ்கூல். பிறகுபார்ப்பம் என்ன!"

அடுத்தநாள். "என்னங்க நீங்கள்? அவனுக்கு ஏழுவயது. சின்னப்பிள்ளைதானே. நீங்கள் காதல் அது இது என்று ஏதோ எல்லாம் சொல்லுறியள்."

"இல்லைக்கேமா. அன்பின்ரை சக்தியும் உணர்ச்சியும் சின்ன பருவங்களிலை கூட இப்படி வெளிப்படலாம். இதை லிபிடோ கொம்பிளைக்ஸ் என்று சொல்லுவினம். நீ பயப்படாதை! அவனுக்குக் காதலைப்பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது. ஆனால் காதல் என்கிறது ஒருத்தருக்கு திடீரென்று வாற ஒரு உணர்ச்சி இல்லை. நியூரோ கெமிக்கல் அவரவர் வளர்ச்சிக்கு ஏற்ப ரத்தத்திலை பாய்ந்துகொண்டுதான் இருக்கும். இது இந்தப்பருவத்துக்கான ஒரு வெளிப்பாடு. அல்லது ஏதோ ஒருவிதமான அன்பு. அவ்வளவுதான்!"

"அதுசரி அவன் ஸ்கூலுக்குபோகமாட்டானாமே...!"

"மம இவ்வளவு நாளும மாதுவோடைதான் பேசி, விளையாடி, சாப்பிட்டு என்று எல்லாமே. அதனாலை அவமேலை ஒரு அன்பு. அதிலையும் அவளுடைய பிறந்தநாளுக்கான எதிர்பார்ப்போடை போனான். அவள் திடீரென்று உதாசீனப் படுத்தினதை அவனாலை தாங்க ஏலாமல் போச்சு. அதனாலை தன்னை தானே தாழ்த்திக் கொண்டான். இந்த தாழ்வு மனப்பான்மையாலை தான் ஸ்கூலுக்கு போக மறுக்கிறான்!"

"அவனை எப்படியாவது சமாதானப் படுத்துங்கோ ஐங்கர்!"

"சின்ன வயதிலை இருந்தே பிள்ளைகளின்ரை சின்ன சின்ன பிரச்சனைகள், உணர்ச்சிகளை எல்லாம் சரியா புரிஞ்சுகொள்ள வேணும். கேமா. சின்ன வயதிலை ஏற்படுகிற பாதிப்புக்கள், காயங்கள் தான் பிற்காலத்திலை மன நோயாளியாகவோ, குரோத மனத்தையோ உருவாக்கிவிடுகுது. சரியான அரவணைப்பும் அக்கறையும் இல்லை என்றால் அதுகளுக்கும் பெற்றோரிலை ஒரு அன்பு, விசுவாசம் இல்லாமலே போய்விடும்,

"அதுசரி சிலநேரம் நீங்கள் செல்லங் கொடுக்கிற மாதிரியும் இருக்கே!"

"இல்லைகேமா. இப்பவெல்லாம் நிறைய பிள்ளையள் பெற்றோரையே ஏமாற்றுதுகள். நாங்கள் நல்ல ஒரு நண்பனைபோல பழகவேணும். அப்பதான் தங்களின்ரை எந்த ஒரு பிரச்சனையையும் சரி. மாற்றங்களையும் சரி மறைக்காமல் எங்களிட்டை சொல்லுங்கள்."

திங்கட்கிழமை. மதிய இடைவேளை. எல்லோரும் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். எல்லாவற்றையும் சிரித்தபடியே பார்த்துக் கொண்டு இருந்தான் நந்து. இப்போது உதாசீனம் சரி, நட்புறுசரி எதையுமே நேசிக்கும் மனம் நிறையவே இருந்தது.

"நந்து. நந்து!" ஊன்று கோலின் உதவியோடு மாலா நின்றாள்.

"எனக்கு ஒரு படம் கீறித்தாறியா?"

"ஓ கீறித்தாறேனே மாலா!"

"நந்து நந்து என்னோடை யாருமே பேசுறதும் இல்லை., விளையாடுறதும் இல்லை."

"இனிமேல் நான் உன்னோடைபேசுறன். விளையாடுறன். என்ன? இஞ்சை பார் கண்ணன் பொம்மை. உனக்கு பிடிச்சிருக்கா மாலா?"

"ஓ.. நல்ல கண்ணன்!"

"அப்ப நீயே வைச்சு கொள்ளன் மாலா!"

"ஐயோ வேண்டாம் நந்து. உன்னோடை அப்பா அடிப்பாரே!"

"இல்லை மாலா. என்ரை அப்பா நல்ல அப்பா. நீயே வைச்சுக்கொள்!"

அந்தக் கண்ணனை அவளிடம் கொடுத்தபோது அவனுடைய உலகத்தில், அவனுடைய மனத்தில், அவனுடைய நீதி மன்றத்தில், அவன் மிக மிக உயரத்தில் நிற்பதாக ஏதோ ஒரு உணர்வு.

நீதி, உயர்ந்தமதி, கல்வி, அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்! ●

# 'கலியாணமும் கால்கட்டும்'

**சில** நாட்களாகவே அம்மா எதற்கெடுத்தாலும் என்னை வெந்து சினந்து கொண்டிருக்கின்றாள். 'எவனுடனாவது ஓடிப் போகிறேனா இல்லையா பார்?' என்று ஆத்திரமடைந்து, வெதும்புமளவிற்கு அவளுடைய நச்சரிப்பு பொறுக்க முடியாமல் போய்க் கொண்டிருக்கிறது.

எனது சித்தி சிறிது தொலைவில் உள்ள எங்கள் சொந்தக் கிராமத்தில் ஆசிரிய தொழில் புரிந்து வருகின்றாள். வெள்ளிக்கிழமை வீடு வந்து திங்கள் வரை எங்களுடன் தங்குவாள். நாற்பது வயதாகியும் விவாகம் அமைந்து வரவில்லை.

இன்று வெள்ளிக்கிழமை. கோயிலால் நான் வீடு திரும்பி வந்து பார்த்த போது சித்தி எனது அழுக்கடைந்த உடுப்புக்களையெல்லாம் 'சேர்வ் எக்ஸெலில்' ஊற வைத்து கும்மியபடி இருந்தாள். அவளுக்கு என்மேல் அப்படியொரு பாசம்!



சித்திக்கு நான் பிள்ளையாக பிறந்திருக்கக் கூடாதா? என நினைத்து எனது மனம் தவிக்கும்....

சித்தி என்னைக் கண்டதும் கேட்டாள்.... "ஏன் நர்த்தனா, கோயிலுக்குப் போய் என்ன வேண்டிக் கும் பிட்டனி?"

'வோசிங் பவுடர்' நுரையை இரு கைகளாலும் அள்ளி எடுத்து குமிழிகளை ஊதியும் உடைத்தும் விளையாடினேன்.

"சித்தி.... எனக்கு என்னுடைய மனதிலை ஒரு வெறுமை அனலாக காய்ந்து கொண்டிருக்குது..... எனக்கு ஏன் சித்தி ஒரு தம்பியோ தங்கச்சியோ இல்லாமல் போய் விட்டனர்?" குளோரின் கலந்த நுரை கண்களில் பட்டுவிடாதபடி கவனத்துடன் புறங்கையால் கண்ணீரை அழுத்தித் துடைத்தேன். நாசியால் நீர் கசியாதபடி சுவாசத்தை உள்ளிழுத்தேன்.

சித்தி என்னை உற்றுப் பார்த்தாள். எதற்காகவோ உடனேயே தலையைத் தாழ்த்தி முகத்தி மறைத்தபடி துணிகளைப் பிழிந்து மறு 'பேசினில்' போட்டாள்....."இதை நீ உன்னுடைய அப்பா உயிருடன் இருந்த காலத்தில் கேட்டிருந்தால்.... உனக்குத் தம்பிதான் கிடைக்காவிட்டாலும் இந்தக் கேள்விக்கு அர்த்தமென்றாலும் இருந்திருக்கும். இந்த வீட்டிலை உனது அம்மா தாரம் இழந்தவள்.... நான் முதிர் கன்னி..... நீ விவாக வயதை நெருங்கி விட்ட குமர்!"

சித்தி குழாய் நீரில் துணிகளை அலம்பவும், நான் அவற்றை எடுத்துச் சென்று கொடியில் விரித்தேன்.

காலமும் நேரமும் என்ன மாதிரி விரைந்து போய்க் கொண்டு இருக்கின்றன.... நடக்கக் கூடாதவை நாம் தடுத்தும் நடந்து விடுகின்றன. நடக்க வேண்டியவை நாம் முயற்சித்தும் நடப்பதாக இல்லை!

சித்திக்கு கல்யாணம் சரிப்பட்டு வராதது போல, எனக்கும் ஏற்பட்டு நானும் குமராகவே இருந்து விட்டால், வீட்டில் ஒரு நன்மை தீமைக்கோ ஆண்துணை இல்லாமல் போய்விடும் என்று நினைத்து வருந்தியே அம்மா நோயாளியாகி விட்டாள்.....

எனது மேலான படிப்புக்குக் காரணமாகவே நல்லதொரு வரன் கிடைக்க வேண்டும் என்று நினைத்து கவனமும் முயற்சியும் எடுத்து எவ்வளவு கஷ்டப்பட்டு படித்தேன். மூன்று தடவைகள் முயற்சித்தும் பல்கலைக் கழக அனுமதி ஒரு சில புள்ளிகளால் தட்டுப்பட்டு போய்விட்டது!

வெளிநாடுகளிலெல்லாம் பல் கலைக்கழக

**திருமலை வீ.சந்திரகாந்தி**

அனுமதி வெட்டுப் புள்ளிகளால் தீர்மானிக்கப்படுவதில்லை. கல்லூரிப்படிப்பு முடிந்ததும் எல்லோருமே தத்தமக்கு இயன்ற துறைகளில் மேல் படிப்பினைத் தொடரலாம். அரசாங்கம் கடனுதவியும் வழங்கும். தொழில் வாய்ப்பு ஒன்று கிடைத்த பின்னர் கடனை அடைக்கலாம்.

சித்தி இரவு உணவு ஒழுங்கினை அம்மாவுடன் ஒத்தாசையாக இருந்து செய்து கொடுத்த பின்னர் என்னைத் தேடி வந்தார்.

நான் சித்தியின் பாடசாலைப் பரீட்சை விடைத்தாள்களை சுவாரசியமாக படித்துக் கொண்டிருந்தேன். ஒரு மாணவி மரத்திற்கு ஐந்தறிவு என்று எழுதியிருக்கவும் எனக்கு 'குபீர்' என்று சிரிப்பு வந்தது. மற்றொரு சரித்திர 'பாட மாணவி' துட்டகைமுனு எல்லாளனை தற்கொலை செய்தான் என எழுதியிருந்தாள்!

நான் விடைத்தாள்களை மறைத்தபடி.... "சித்தி.... இந்த மாணவிகள் வழங்கியிருக்கும் விடைகள் நீங்கள் கற்றுக் கொடுத்தவைதானே?" என்று சிரித்தபடி கேட்கவும் அவரும் சிரித்தவாறே வந்து என் அருகில் அமர்ந்து கொண்டார்.

"நர்த்தனா.... எங்களுடைய நாட்டில் இன்று பெண்களுடைய நிலைமை எந்த மட்டத்தில் இருக்கின்றது என்பதற்கு இந்த விடைத்தாள்கள் ஒரு சிறிய எடுத்து காட்டு. ஊடகத் துறைகள் முதல் பல்கலைக் கழக மட்டம் வரையிலும் 'பெண்ணியம்' பற்றி பேசாத புத்தி ஜீவிகளே இல்லை! பெண்ணியத்திற்கு சார்பற்ற கருத்தொன்றினை வாய் தவறி யாராவது உச்சரித்து விட்டாலே போதும். அதைக் கண்டிக்க பாய்ந்தடித்து வருவதற்கு சங்கங்களும் உண்டு. ஆனால் ஒரு பெண்ணுக்கு தேவையான கல்வி வாய்ப்பையோ தொழில் வாய்ப்பையோ பெற்றுக் கொடுப்பதில் இவர்கள் எந்தளவில் முயற்சி செய்கின்றார்கள்?" சித்தி வினவினாள்.

எனக்காக தொழில் வாய்ப்பு ஒன்றினைக் கேட்டு எங்கள் கிராமத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரை நானும் சித்தியும் சந்தித்துக் கதைத்ததும்.... "நீங்கள் இப்போ இடம் பெயர்ந்து நகருக்குப் போய் ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது.... உங்களுக்கு இனிமேல் எனது 'கோட்டாவில்' வேலை தருவதற்கு இல்லை!" என்று அவர் தட்டிக் கழித்ததும் எனது நினை விற்கு வந்தன.

"பிள்ளை.... சித்தியையும் கூட்டிக் கொண்டு வா சாப்பிட!" அம்மா குரல் கொடுத்தாள்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே அம்மா தொண தொணத்தாள். "வெளிநாட்டு மாமாவுக்கு கடிதம் போடு கடிதம் போடு என்று எத்தனை தடவை சொன்னாலும் கேட்பதில்லை. அவர் மனம் வைத்தால் ஒரு விடிவு வந்துவிடும் என்றாலும் நம்புவதில்லை."

விடிவு என்று அம்மா சொல்வது மாமா மனம் வைத்தால் என்னை வெளிநாட்டுக்கு எடுத்து விடுவார் என்ற கருத்துப்படவா? அல்லது அங்கு தொழில் புரியும் அவரது மகனுக்கு என்னை மணப் பெண்ணாக எடுத்து விடுவார் என்ற தொனிப்பிலா என்பது எனக்குப் புரியவில்லை.

சித்தி சாப்பிடத் தொடங்கும் ஆயத்தமாக கருவேப்பிலை போன்ற ருசியும் வாசனையும் சேர்க்கும் பதார்த்தங்களை கோப்பை விளிம்பில் ஒதுக்கியபடியே.... "வெளிநாட்டு உறவையெல்லாம் ஒரு கட்டத்துக்கு மேல் நாங்கள் நம்பியிருப்பது அநாவசியம்... அதை இப்போ விட்டுத்தள்ளு!" என்று எதையோ நினைத்தபடி அடித்துப் பேசினாள்.

'அவர்களுக்கு அவர்கள் அளவிலான கஷ்டம். எங்களுக்கு எங்கள் நாளாந்த கஷ்டம். பாசம் வருவதற்கும் கிட்ட இருந்தால்தானே.....' நான் எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

மின் விளக்கை அணைத்து விட்டு சித்திக்கு அருகாமையில் படுத்திருந்தேன்.

"நர்த்தனா.... உனக்கு உன்னுடைய வெளிநாட்டு மச்சான் பற்றி ஏதாவது எதிர்ப்பார்ப்பு இருக்கின்றதா?"

ஒரு கணம் யோசித்துப் பார்க்கின்றேன்.... எங்களுடைய நாட்டுக்கும் அவர்களுடைய நாட்டுக்கும் வெகு தூரம்... எங்களுக்கும் அவர்களுக்குமான உறவும் அப்படித்தான்.....!

'பெட்சீற்றால்' கண்ணீரைத் துடைத்தபடி..... "இல்லை சித்தி.... அம்மாவில் மாமாவுக்கு அன்பு இருக்கலாம். ஆனால் என்னில் அவருக்கு அன்பு இருக்க நியாயம் இல்லை"

சித்தி தனது போர்வையை விலக்கி எழுந்து அமர்வதை இருட்டில் ஸ்பரிசத்தால் உணர்கிறேன்.

"நர்த்தனா.... அம்மா உன்னுடன் கதைக்கப் பயப்படுகின்றா. ஆனால், எது யதார்த்தமோ அதுதான் செயலுருவில் வெளிவரும்... பக்கத்து வீட்டில் வசிக்கும் அன்ரி சில நாட்களாக உன்னை தனது மகனுக்குக் கேட்டு அம்மாவுக்குத் தொந்தரவு கொடுத்து வருகிறா. அம்மாவும் சொல்லுகின்றா 'பெடியன் கொஞ்சம் அப்படி இப்படித் தான். ஒரு கால் கட்டை போட்டால் திருந்தி விடுவான்' என்று. நீ யோசித்து முடிவெடு"

படுக்கையால் எழுந்து மின் விளக்கைப் போடுகின்றேன்.

உயர் கல்வி வசதி ஒரு பெண்ணுக்கு வழங்கப் பட்டால்.... இரத்த உறவுகள் இருகரம் நீட்டி சொந்தம் பாராட்டும் நிலை இருக்குமானால்.... சிலாகித்து பேசுமளவிற்கு பெண்ணியம் நடைமுறையில் பேணப்பட்டால்.....

இன்னமும் ஒரு பெண் தறிகெட்ட ஒரு ஆடவனுக்கு கால்கட்டாக பயன் படுத்தப்படும் நிலை நீடிக்க முடியுமா? எனது பதிலை எதிர்பார்த்து சித்தி கண்கள் கலங்க என்னைப் பார்க்கின்றாள்.... ▭

மகிழ்ச்சி எங்கே வருகிறது?
மனத்திலா?

மனம் எங்கே இருக்கிறது?

மூளையிலா?

அப்போ மகிழ்ச்சி எங்கே
மூளையிலிருந்தா வருகிறது?

எங்கிருந்து வந்தாலென்ன? மனம் பொங்குவது மூளைக்குத் தெரிகிறது. அதுமட்டுமா? மகிழ்ச்சி என்று வந்துவிட்டால் நரம்பு, தசை, இரத்தம் உடம்பு முழுவதும்தானே நிலை கொள்ளாமல் பூரித்துத் துடிக்கின்றன!

மூளையா, நரம்பா, உடலா, மனமா.... நான் இன்பத்தில் துள்ளுவது எதனால்?

# இன்பத்தின் ஊற்று எங்கே இருக்கிறது....?



## இலக்கிய நயம்

உலுக்கியெடுக்கிற இந்த இன்பத்தைத் தாங்க மாட்டாமல் உடல் நடுங்குகிறது. கண்களில் கண்ணீர் பொங்குகிறது. இதயம் படபடவென அடித்துக் கொள்கிறது. நரம்புகள் அதிர்கின்றன. இரத்தத்திற்குப் பதில் தேன் ஓடுவதாக மனம் இனித்து இலேசாகி சிறகடித்து விண்ணில் பறக்கிறது. மூளைக்குள் மில்லேனிய பிறப்பு நாளின் வாண வேடிக்கைகள் தெரிகின்றன. எல்லாவற்றையும் மூளைதான் கட்டுப்படுத்துகிறதா?

மூளையின் கொண்டாட்டம்தானா இந்த இன்பம்?

அப்படியானால், 'எதனால் இந்த இன்பம் என்று ஏன் இந்த மூளை பகுத்தறிய மாட்டாமல் இருக்கிறது?'

உடலெல்லாம் உழுதுசெல்லும் இன்பத்தின் ஏர்முனை உள்ளத்தில் களி துள்ள தேன் தடவிய மயிலிறகு, எண்ணமெல்லாம் ஒளி நிரப்பிய பாலமுதுச் சந்திரன்....

இவையெல்லாம் யாரால்? எப்படி? எங்கிருந்து வந்து என்னை இப்படி ஆட்டுவிக்கின்றன என்று இந்த மூளை பகுத்துணராதது ஏன்?

சரி, இந்த இன்பப் பெருக்கை வேறு யாரிடமாவது பகிர்ந்து கொள்ளவாவது இந்த மூளை துணை செய்கிறதா? தான் அனுபவிப்பதை எடுத்துச் சொல்லுமளவுக்கு இதனிடம் வார்த்தைகள் கிடையாது; வழிவகையும் தெரியாது.

எப்படி நாம் வலியை பிறருக்கு உணர வைத்துவிட முடியாதோ, அப்படியே தான் அளவற்ற இன்பமும். யாருக்கும் தெரியப்படுத்திவிட முடியாத திண்டாட்டம் உள்ளுக்குள் மூச்சுத் திணறலை ஏற்படுத்தும்.

நண்பர்களிடம் சொல்லிப் பகிர்ந்துகொள்ளக் கூடிய இன்பங்களும் உண்டுதான். அது பரவாயில்லை. ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம்.

ஆனால்...

காதல்! அந்த இருவரைத் தவிர வேறுயாரிடமும் பகிர்ந்து கொள்ளப்பட முடியாதது.

எப்படிச் சொல்லமுடியும்?

அதற்குரிய வார்த்தைகள் உலகத்துப் பாஷைகள் எவற்றிலேனும் இருக்கின்றனவா? போகட்டும். அந்த மூச்சுத் திணறலில் ஒரு துளியைத்தானும் வெளிப்படுத்திவிடச் சொல் உண்டா?

உடலில், நரம்புகளில், இரத்தத்தில், சித்தத்தில் பரவும் சுகமான வாதையை.... சொல்ல முடியா அந்தரத்தை.... இந்த உலகிலிருந்து கழற்றி வீசப்பட்டுவிட்டதான அந்த விண்வெளி நீச்சலை.... மனதின் மாய்ச்சலை மூன்றாம் நபருக்கு எப்படிக் கடத்த முடியும்?

துளையிடப்பட்ட மூங்கில் இசையாக அழும் சுகம்போல் ரணப்பட்ட இதயம் வலியில் துடிப்பதே இன்பமாகும் விந்தை! வயிற்றுக்குள்ளிருந்து சிறகடித்துக் கிளம்பும் பட்டாம் பூச்சிகள்.... தொண்டைக்குள் பறந்து, மூச்சைத் திணறவைத்து, தலைக்குள் நிரம்பி படபடத்து கும்மாளமிடும் வேதனை!

தருவது **முழடில்யன்**

அடடா வலியில் இத்தனை சுகமா?

ஒரு பார்வையில் நுழைந்து இதயத்தினுள் புகுந்து கொண்டவள் தருகிற இன்ப வாதை!

வண்டுகளின் குடியிருப்பு அவள் கூந்தல். அந்த அடர் இருளை அகற்றிவிடும் ஒளிவிளக்கு அவள் வதனம்! அந்த வெளிச்சத்திலேயே ஆற்றங்கரைக் கருமணலாகப் பளபளக்கின்ற அவள் கூந்தலின் இழைகள். பார்த்தாலே தெரிந்துவிடுகிறது அதன் மணமும் குளிர்ச்சியும். அவள் உலவிய இடங்களிலெல்லம் காற்று உற்சாகத்துடன் அசைவதிலிருந்து புரிகிறது. குளிர்ச்சியும் வாசனையுமாய் நடந்துலவுகின்ற நந்தவனத்தைப் பார்த்தால் காற்றுக்கே களிப்பேறிப் பாடத் தோன்றாதா?

காற்று பாடுகின்றது. சந்தேகமில்லை. அதோ! மரங்கள் எல்லாம் தலையாட்டுகின்றனவே!

அந்தப் பெண்தான் அவன் விரும்பித் தன் நெஞ்சினுள் வைத்திருப்பவள். காற்று அகன்ற வெளியில் விட்டு விடுதலையாகிக் களிப்பில் துள்ளுகிறது. அவன் என்ன செய்வான். நெஞ்சில் குடியிருப்பவள் அவனுக்குள் இன்பக் காட்டாறைப் பொங்கிச் சுழித்தோட வைக்கிறாள். வெளியேயும் சொல்லி ஆற்றிக் கொள்ள முடியாத மகிழ்ச்சித் திணறல்.

யான்நயந்து உறைவோள்

தேம்பாய் கூந்தல்

வளம்கெழு சோழர்

உறந்தைப் பெருந்துறை

நுண்மணல் அறல் வார்ந்தன்ன

நன்னெறி யவ்வே

நறும்தண்ணியவே.

(குறுந்தொகை: 116)

# ஸ்போர்ட்ஸ்

## மினி உலகக்கோப்பைப் போட்டிகள்

கென்யத் தலைநகர் நைரோபியில் 11 நாடுகள் கலந்து கொள்ளும் மினி உலகக் கோப்பைப் போட்டிகள் 3ம் திகதி முதல் 16ம் திகதி வரை நடைபெறுகின்றன.

முதல் சுற்றுப் போட்டிகளில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், கென்யா, மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து அணிகள் விளையாடி கால் இறுதிக்குத் தகுதிபெறும். கால் இறுதியில் இவை தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, ஸிம்பாப்வே, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகளுடன் விளையாடவுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியில் அரை இறுதிப் போட்டியில் விளையாடியதால் தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, ஸிம்பாப்வே பாகிஸ்தான், அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் நேரடியாகவே கால் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுவிட்டன.

மினி உலகக் கோப்பைப் போட்டி விவரங்கள் வருமாறு:

3ம் திகதி - இந்தியா எதிர் கென்யா.
4ம் திகதி - இலங்கை எதிர் கென்யா.
5ம் திகதி - இங்கிலாந்து எதிர் பங்களாதேஷ்.
7ம் திகதி - அவுஸ்திரேலியா எதிர் இந்தியா அல்லது கென்யா.
8ம் திகதி - பாகிஸ்தான் எதிர் இலங்கை அல்லது மே.இ.தீவுகள்
9ம் திகதி - நியூஸிலாந்து எதிர் ஸிம்பாப்வே
10ம் திகதி - தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து அல்லது பங்களாதேஷ்.
11 ம் திகதி - முதலாவது அரை இறுதிப் போட்டி.
12ம் திகதி - இரண்டாவது அரையிறுதிப் போட்டி
15ம் திகதி - இறுதிப்போட்டி.

## கரைகாணும் புயல்கள்

கிரிக்கெட் உலகில் அதிக வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்கிய பெருமை மேற்கிந்தியத் தீவுகள் அணியையே சாரும்.



மல்கம் மார்ஷல், அன்டி ரோபேர்ட்ஸ், மைக்கல் ஹோல்டிங், ஜொயல் கார்னர், கொலின் குரோஃப்ட் ஆகியோரிலிருந்து கொட்னி வோல்ஷ், கேட்லி அம்புரோஸ் வரை பெரிய பட்டியலே போடலாம்.

இவர்களில் நீண்டகாலம் நிலைத்து நின்று எதிரணியைச் சிதறடித்தவர்கள் என்ற பெருமையைப் பெறுபவர்கள் வோல்ஷும் அம்புரோஸும் தான்.

40 வயதை நெருங்கும் இவர்கள் 'இன்றும் தாம் இளைஞர்களுக்கு ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல' என்பதை நிரூபித்துள்ளார்கள். எதிரணியினரைக் கிலி கொள்ள வைத்த இந்த இரட்டையரில் கொட்னி வோல்ஷ் உலகில் அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்தவர் என்ற சாதனையுடன் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இவரைத் தொடர்ந்து 400 டெஸ்ட் விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ள கேட்லி அம்புரோஸ் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

கொட்னி வோல்ஷ், கபில் தேவ், ரிச்சர்ட் ஹாட்லி, வாஸிம் அக்ரம் ஆகியோருக்கு அடுத்தபடியாக 400 டெஸ்ட் விக்கெட்டுக்களைச் சாய்த்த 5வது நபர் அம்புரோஸ்.

இந்த மகிழ்ச்சியோடு தனது ஓய்வை அறிவித்த அம்புரோஸ், "இளைஞர்களுக்கு வழிவிடவே நான் ஒதுங்குகிறேன்,"என்று தெரிவித்தார். ஆனால் அம்புரோஸின் இந்த முடிவு மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் இரசிகர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

வோல்ஷ் மற்றும் அம்புரோஸ் ஆகிய இருவரும் தமது ஓய்வு அறிவிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் விவியன் றிச்சர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இவர்களின் ஓய்வு மேற்கிந்திய அணியில் ஒரு வெற்றிடத்தை உருவாக்கவே செய்யும். இருப்பினும் இளைஞர்களுக்காக வழிவிடும் இவர்களின் உணர்வு உண்மையிலேயே உன்னதமானது.

# சிந்தியா பதில்கள்

**சமயோசிதமாகத் தப்புதல் என்றால் என்ன? இதற்கும் ஏதாவது கதை இருக்கிறதா?**

மு.ந.நௌஷாட் முஹமட், அக்கரைப்பற்று-02.

எதற்குத்தான் கதை இல்லை? ஜென் குருவான 'இக்கியு' மிகுந்த புத்திசாலித் துறவியாகக் கருதப்பட்டவர்.

இவரது இளம் வயதில் ஒரு மடாலயத்தில் சீடராக இருந்தபோது நிகழ்ந்தது இது:

ஒரு நாள் குருவின் தேநீர்க் கோப்பையை எடுத்துச் சென்ற போது, கைதவறிக் கீழே போட்டு உடைத்துவிட்டார். திடுக்கிட்டார் இக்கியு. குருவின் கோபத்திற்கு ஆளாகவேண்டுமே என்று அச்சமுற்றார். சற்றுநேரம் யோசித்த பிறகு, ஒரு தீர்மானத்திற்கு வந்தவராக புன்முறுவலோடு குருவிடம் சென்றார். வணங்கினார்.

"என்னப்பா?" என்று கேட்டார் குரு.

"மனிதர்கள் ஏன் சாகிறார்கள்?" என்று கேட்டார் இக்கியு.

"அது இயற்கை அப்பா, இந்த உலகில் பிறந்தவை எல்லாம் இறந்துதான் ஆக வேண்டும். எல்லாவற்றிற்கும் அழிவு உண்டு. மரணம் தவிர்க்க முடியாதது!" என்று பதிலளித்தார் குரு.

"அப்படித்தானிருக்க வேண்டும் சுவாமி! இதோ சற்று முன்னர் உங்கள் தேநீர்க் கோப்பையும் செத்துவிட்டது!" என்று சொல்லிவிட்டு அமைதியாகத் திரும்பினார் இக்கியு.

**காதலியிடமிருந்து பதில் எதிர்பார்ப்பதற்கும் சிந்தியாவிடமிருந்து பதில் எதிர்பார்ப்பதற்கும் என்ன வித்தியாசம்?**

இரா.தர்மசீலன், கொழும்பு-11.

அங்கே இருக்கும் 'திக் திக்' இதயத் துடிப்பு இங்கே இருக்காது!

**'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள். கல்வியின் அழகு எதில் தெரியும்?**

ராஜி பிரேமநாதன், தலவாக்கலை.

கேள்வியில்!

**தலைப்பு ஒன்றின் கீழ் கவிதை எழுதுவதா? அல்லது கவிதையை எழுதிவிட்டு தலைப்பு ஒன்றை வைப்பதா சிறந்தது?**

எம்.எம்.எம்.இமாம்ஹசன், ஹெம்மாதகம.

அது, நீங்கள் எழுதப் போவது தலைப்பா? அல்லது கவிதையா என்பதைப் பொறுத்தது.

**திடீரென உங்கள் முன் ஒரு தேவதை தோன்றி, "சிந்தியா! உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள் தருகிறேன்" என்று கூறினால் நீர் என்ன கேட்பீர்?**

மஹரிபா, பண்டாரவளை.

என் தேவைகளைச் சட்டென்று சொல்லி முடித்துவிட முடியாது. முதலில் அந்தத் தேவதையை என்னுடனேயே தங்கிவிடும்படி கேட்பேன்.

**கண்ணை மூடாமல் தும்மவும், வாயைத் திறக்காது கொட்டாவி விடவும் ஆசையாக உள்ளது. என்ன செய்யலாம்?**

மொஹமட் இர்ஹாம், காத்தான்குடி-05.

எல்லோருக்கும் வேலை வாய்ப்பு, 2000 ரூபா சம்பளஉயர்வு, இளைஞர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள், பெண்களுக்குத் தங்கச் சங்கிலிகள்... இவையெல்லாவற்றுக்கும் மேலாக இரண்டெடுத்தாருடன் பேசி உடனடியாகச் சமாதானம்... இர்ஹாம்! பச்சைக் கட்சித் தலைவரைச் சென்று பாருங்கள்!

**கவுண்டமணி-விவேக் ஒப்பிடுக?**

ஏ.எல்.முஹம்மட் றஸ்மி, அட்டாளைச்சேனை-02.

ஒருவர் உதைத்தும், மற்றவர் கதைத்தும் சிரிக்கவைக்கிறார்கள். கவுண்டருக்குக் கூட்டணி வேண்டும். செந்திலோ சத்தியராஜோ கூட்டுச்சேரும்போது தான் அவரது எகத்தாளம் எகிறும். விவேக்கின் பலம் மிமிக்ரி தெரிந்திருப்பது. நம்பியார், சிவாஜி, கருணாநிதி, கமல், ரஜினி என்று இஷ்டத்துக்கு நையாண்டி மேளம் வாசிக்கிறார். எம்.ஆர். ராதாவைப் பின்பற்றுகிறார். கவுண்டருக்கு ஏ.வீரப்பனோ வேறுயாருமோ அவர் பகுதியை எழுதித் தருகிறார்கள். விவேக் விரைவில் படம் ஒன்றை இயக்கப்போகும் அளவிற்கு விஷயம் உள்ளவர்.

**அது என்ன பச்சைப் பால்? பால் வெள்ளை நிறம் அல்லவா?**

பி.எம்.பைசுல், கரம்பை.

பச்சை விறகு, பச்சைத் தண்ணீர், பச்சைப் பொய் எல்லாம் பச்சை நிறத்திலா இருக்கின்றன? பச்சைப் பாலாயிருந்தாலும் காய்ச்சிய பாலாயிருந்தாலும் நிறம் வெள்ளைதான்.

**எனது அபிமான நடிகர் விஜயகாந்தைப் பற்றியும், அவரது முகவரியும் தருவீர்களா?**

ரா.கௌரீஸ்வரன்,பாரதிபுரம், வவுனியா.

மதுரைக்காரர், இனிமையாகப் பழகும் நல்ல பண்பாளர். பேத்திகள் போலத் தோன்றும் நடிகைகளைக் கட்டிப்பிடித்துக் காதல் பண்ணுவதை நிறுத்திவிட்டாரென்றால் நடிப்புத் துறையைப் பொறுத்தும் அவர் பாராட்டுக்குரியவராவார். முகவரி: இல. 16, 100 அடிரோடு, எம்.எம்.டி.ஏ.காலனி, அரும்பாக்கம், சென்னை 600 106.



**மற்றவர்கள் கஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் பேசி அறுப்பவர்கள் பற்றி?**

ஐ.அஸ்மி அஹமட், திக்குவல்லை.

சமாளிக்கக் கஷ்டம்தான். பொருத்தமில்லாத இடங்களிலெல்லாம் சும்மா "ஓ ஓ, சரி சரி அப்படியா?" என்று சொல்லிக் கொண்டிருப்பேன். அதையும் மீறிப் பேசிக் கொண்டிருந்தால், சம்பந்தமில்லாத ஓரிடத்தில் 'ஹாஹாஹா' என்ற பெரிதாகச் சிரித்துவிட்டு, சுற்றுமுற்றும் எதையோ தேடுவதுபோல் பார்ப்பேன். இவ்வாறு பேச்சைத் தொடர நான் எந்தத் தூண்டுதலையும் தராத நிலைமையிலும் தங்கள் விடாமுயற்சியைத் தொடர்பவர்கள் இருக்கிறார்கள். மனிதத் துன்பங்களின் பட்டியலில் இதையும் சேர்க்க வேண்டும்.

ஒரு ஜோக் ஞாபகத்திற்கு வருகிறது!

ஒரு கருத்தரங்கில் ஒருவர் சொற்பொழிந்து கொண்டிருந்தார். முடிப்பதாகத் தெரியவில்லை. கூடி இருந்தவர்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் கலைய ஆரம்பித்துவிட்டனர். கடைசியில் ஒரே ஓர் ஆள் மட்டும்தான் மிஞ்சியிருந்தார். ஒருவாறு பேச்சை முடித்துக் கொண்ட பேச்சாளர் அந்த ஒருவரைப் பார்த்து சந்தோஷத்துடன் நன்றி சொன்னார். "என் கருத்துக்களை நீங்கள் மட்டுமாவது ஆர்வத்தோடு கேட்டீர்களே, மிக்க நன்றி!" என்றார். அதற்கு அந்த ஆள், "என்னைத் தெரியவில்லையா? உங்களுக்கு அடுத்துப் பேச இருக்கும் ஆள் நான் தான். நீங்கள் எப்போது முடிக்கப் போகிறீர்கள் என்று காத்திருக்கிறேன்!" என்றார்.

**நடைபெறவிருக்கும் தேர்தலைப் பற்றி உமது கணிப்பு என்ன?**

ஆர்.நித்தியானந்தன், நாவலப்பிட்டி.

இலங்கை போன்ற நாடுகளில் நடைபெறும் கருத்துக் கணிப்புகள் மிகச் சரியான முடிவுகளை வெளிப்படுத்துவதில்லை. இருந்தபோதிலும் பல்வேறு கணிப்புகளும் நீலக் கட்சியினருக்கே ஜெயம் என்று குறிப்பிடுகின்றன. எனது விருப்பம் எந்தக் கட்சி ஆட்சிக்கு வருவதாக இருந்தாலும் சிறுபான்மைக் கட்சியினரின் ஆதரவோடுதான் அரசமைக்கும் படியாக முடிவுகள் இருக்க வேண்டும். வத்தலோ தொத்தலோ ஒரு தீர்வை நடைமுறைக்குக் கொண்டுவர எடுக்கும் முயற்சிகள்தான், சிறுபான்மையினத்தவர் கொஞ்சமாவது மூச்சுவிடக் கூடிய சூழலை உருவாக்கும். இல்லாதுபோனால் வாய்திறக்கத் தரப்படும் சந்தர்ப்பத்தில் இங்கே சிலர் சண்டையைப் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்க, நாசமாய்ப் போகும் நம்குடி.

**அங்கிகளின் கூர்ப்புக் கொள்கையை வெளியிட்ட சாள்ஸ் டாவின் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

எம்.எம்.ஸமான், ஹொரவப்பொத்தானை.

இங்கிலாந்து.

**எந்த விடயத்தைச் செய்யத் தொடங்கினாலும் பயம் தான் எனக்குத் துணையாக வருகிறது. அதை விரட்ட என்ன வழி?**

ஈ.சிந்து, கொலன்ட்.

ஏன் அதை விரட்ட வேண்டும்? பயம் இருப்பது ஒன்றும் கூடாததில்லை. வாழ்க்கைக்குப் பயம் தேவைதான். அது இருந்தபடியால்தான் இத்தனை ஆயிரமாண்டுகளாக மனிதகுலமும் தப்பிப் பிழைத்து வந்திருக்கிறது. பயத்தை ஒழிக்க வேண்டாம். முன்னே செல்லத் தடையாக அது குறுக்கே நந்திமாதிரி அமர்ந்திருக்கும் சமயங்களில் மட்டும் துணிச்சலைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டு வெற்றிநடை போடுங்கள்!

# மன்னாதி மன்னன்

26

இராஜகுமாரன்

**சி**வபெருமானும் உமையவளும் கூறிய கதைகள் அனைத்தையும் தன்னிடம் கூறியேயாக வேண்டுமென்று என் மனைவி பிடிவாதமாக இருந்தாள். தெய்வீக இரகசியத்தை வெளியிலே கூறினால் விபரீதம் ஏற்படுமென்று அவளிடம் எடுத்துரைத்தேன். ஆனால் அவள் தன் பிடிவாதத்தில் விட்டுக் கொடுக்காமலே இருந்தாள். என்னால் வேறு எதுவுமே செய்ய முடியவில்லை. அவள் விருப்பப்படி சிவபெருமான் உமாதேவியாருக்குக் கூறிய கதைகள் அனைத்தையும் என் மனைவியிடம் கூறினேன். வேறு எவரிடமும் இக்கதை களைக் கூற வேண்டாம் என்று வற்புறுத்தி சத்தியமும் வாங்கிக் கொண்டேன்.

அடுத்தநாட் காலையில் தண்ணீர் எடுத்து வருவதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றாள் என் மனைவி. அவளுடைய சிநேகிதிகள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டிவைத்து, நான் கூறிய தெய் வீகக் கதைகள் அத்தனையையும் அவர்களிடம் கூறிவிட்டாள். பெண்களின் காதுகளில் எந்த இரகசியத்தைக் கூறினாலும் அவர்கள் அத்தனையையும் பரகசியமாக்கி விடுவார்கள்.

ஆற்றங்கரையில் எனது மனைவியின் சிநேகிதிகள் கேட்ட புதிர்க்கதைகள் அத்தனையும் ஒரு சில நாளிகைக்குள் அந்த நகர் பூராவும் பரவிவிட்டது.

காலையில் எனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வழமைபோல் ஆலயத்திற்குச் சென்றேன். ஆலயத்தில் முன்வாயில் கதவினை முதல் நாளிரவு பூட்டி விட்டே சென்றிருந்தேன். ஆனால் நான் அடுத்த நாள் போய்ப் பார்த்த போது கதவு திறந்திருந்தது. ஏதோ விபரீதம் நடந்திருப்பதை உணர்ந்து கொண்டேன். முன் கதவைத் தாண்டி எனது



வலது காலை உள்ளே எடுத்து வைத்ததும், "நில் அங்கே! உள்ளே வராதே! நான் உமாதேவியாருக்குக் கூறிய கதைகள் அனைத்தையும் உன் மனைவி மூலமாக பரகசியமாக்கி விட்டாய். ஆகவே எங்களுக் குரிய பூசைகளைச் செய்வதற்கு உனக்கு அருகதை கிடையாது. இந்தக் குற்றத்திற்காக நீ இப்பொழுதே வேதாளமாகக் கடவாய். கானகத்தில் முருங்கை மரத்தில் அந்தரத்தில் தொங்குவாய். போய்விடு!" என்று அசரீரியாக குரல் எழுந்தது. அக்குரல் சாட்சாத் சிவபெருமானுடையதே என்பதை அர்ச்சகன் உணர்ந்து கொண்டான். தரையில் விழுந்து அழுது புரண்டு "சிவபெருமானே! நான் செய்த பாவத்திற்காக இத்தகைய கொடிய தண்டனையை எனக்கு வழங்கி விட்டீர்கள். இதிலிந்து விமோசனம் பெற வழியே இல்லையா பிரபு?" என்று கேட்டான்.

"இருக்கிறது. உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்துக்கருகே காளிகோயில் ஒன்றிருக்கிறது. அங்கே ஒரு முருங்கைமரம் தென்படுகிறது. அந்த முருங்கை மரத்தில் தொடர்ந்து முப்பது ஆண்டுகள் தலைகீழாய் தொங்குவாய். அந்தக் காட்டில் தவம் செய்துவரும் ஞானசீலன் என்ற முனிவன் உன்னை வசப்படுத்தி அஷ்ட சித்திகளையும் பெற முயற்சிப்பான். இதற்கு உஜ்ஜயினி பட்டணத்தை ஆண்டு வரும் விக்கிரமாதித்த மன்னனின் உதவியை நாடுவான். விக்கிரமாதித்த மன்னன் முருங்கை மரத்தில் தொங்கும் உன்னை பிடித்துக் கொண்டு போவான். அப்பொழுது நான் உமாதேவியாருக்குக் கூறிய இருபத்தி நான்கு கதைகளையும் நீ மன்னனிடம் கூற வேண்டும். மன்னன் முதல் இருபத்திமூன்று கதைகளுக்குமான புதிர்களை விடுவிப்பான். ஆனால் இருபத்தி நாலாவது கதையின் விடையைக் கூற முடியாது தடுமாறுவான். அவனே விக்கிர மாதித்த மன்னன என்பதை நீ அறிந்து கொள்வாய்.

ஞானசீல முனிவன் ஆயிரம் மன்னர்களுடைய தலைகளைக்கொய்து காளிக்குப் பலி கொடுக்க திட்டமிட்டிருக்கிறான். ஏற்கனவே தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது மன்னர்களின் தலைகளை அந்தமுனிவன் வெட்டி பலி கொடுத்துவிட்டான். மாவீர னான விக்கிரமாதித்த மன்னன் காளியின் வரம் பெற்றவன். அவனுடைய தலையையே தனது வேள்விக்கு ஆயிரமாவது தலையாக வெட்டிப் பலியிடுவதே முனிவனின் நோக்கம்.

விக்கிரமாதித்தனிடம் இந்த உண்மைகளை விளக்கிக் கூறி, "ஞானசீல முனிவனின்

## தேவ இரகசியத்தை வெளியிட்ட பூசாரி

நோக்கம் நிறைவேறாமல் செய்ய வேண்டியது உன் பொறுப்பு. அந்த முனிவன் அவனுடைய நோக்கத்தில் வெற்றி பெறுவானானால் அவனால் மூவுலகங்களுக்கும் பேராபத்தே ஏற்படும். ஆகவே விக்கிரமாதித்தன் தந்திரோபாயமாக அந்த முனிவரின் தலையை வெட்டிப் பலியிடுவானானால் விக்கிரமாதித்தனுக்கே அஷ்டசித்திகளும் கைவரப் பெறும். இதனால் உலகம் நன்மை அடையும்!" என்று சிவபெருமான் வேதாளமாக மாறிவிட்ட அர்ச்சகரிடம் கூறியது.

இதனைக் கேட்ட அர்ச்சகன் மீண்டும் சிவபெருமானை நோக்கி, "சிவபெருமானே அத்துடன் என்னுடைய சாபம் நீங்கி விமோசனம் அடைவேனா?" என்று கேட்டான்.

இதற்குப் பதிலளித்த சிவபெருமான், "இல்லை விக்கிரமாதித்த மன்னன் இரண்டாயிரம் ஆண்டுகள் உயிர் வாழப் போகிறான். அந்த மன்னனுடைய துணைவனாக நீ இருக்க வேண்டும். விக்கிரமாதித்த மன்னன் புரியும் சகல நல்ல காரியங்களிலும் நீ பங்கேற்க வேண்டும். இரண்டாயிரமாமாண்டு விக்கிரமாதித்தன் சகாப்தம் முடிவடைந்ததும் நீ சொர்க்கம் செல்வாய்." என்று கூறி மறைந்தார்.

இந்தச் சம்பவங்களை வேதாளம் விக்கிரமாதித்தனிடம் கூறியது. இதனைக் கேட்க விக்கிரமாதித்தனுக்கு வியப்பாக இருந்தது. வேதாளம் தொடர்ந்து "மன்னவரே! நீர் இப்பொழுது என்னை ஞானசீல முனிவனிடம் தூக்கிக் கொண்டு போக வேண்டும். அவன் பெருமகிழ்ச்சி அடைந்து ஓமகுண்டத்தில் தீ வளர்ப்பான். அதில் உம்முடைய தலையை வெட்டிப் பலியிடுவதற்கு முயற்சிப்பான். அதற்கிடந்தராமல் அந்த முனிவனுடைய தலையை நீரே வெட்டி ஓமத் தீயில் போட்டு விட வேண்டும். அப்பொழுது காளிகாம்பாள் தோன்றி உமக்கு வேண்டிய வரங்களைத் தந்தருளுவாள்!"

விக்கிரமாதித்தன் வேதாளத்திடம், "ஞானசீல முனிவரின் தலையை வெட்டி ஓம குண்டத்தில் போடுவதற்கு ஏதாவது தந்திரோபாயங்கள் இருக்கின்றனவா?" என்று கேட்டான். "ஆமாம் இருக்கின்றது!" என்று கூறிய வேதாளம் அந்த முறையை விளக்கிக் கூறியது.

"நம்மைக் கண்டதும் ஞானசீலமுனிவன் பெருமகிழ்ச்சியடைவான். அவனுடைய பூசையில் உம்மையும் கலந்து கொள்ளும்படி கேட்பான். அவனுடைய ஆச்சிரமத்துக்கு அப்பால் என்னைச் செல்லும்படி கூறிவிடுவான். நானும் வெளியேறி விடுவேன். பூசைக்கு ஆயத்தமாக உம்மை நீராடிவிட்டு வருமாறு கேட்பான். நீர் நீராடி வந்ததும் காளியின் சந்நிதியில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து கும்பிடும்படி உம்மைக் கேட்பான். அந்த மாதிரி வீழ்ந்து கும்பிட உமக்குத் தெரியாது என்றும் அந்த முறையைச் செய்து காட்டுப்படியும் முனிவனிடம் நீர் கேட்க வேண்டும். முனிவன் சாஷ்டாங்கமாக வீழ்ந்து காட்டுவான். உம்முடைய கழுத்தை வெட்டுவதற்காக முனிவன் கூர்மையான பெரிய கத்தியை அங்குவைத் திருப்பான். முனிவன் தரையில் வீழ்ந்ததும் எந்தவிதமான தாமதமும் இல்லாமல் அந்தக் கத்தியால் அவனுடைய தலையை வெட்டி ஓமகுண்டத்தில் போட்டுவிட வேண்டும்".

வேதாளம் கூறியதைப் போல், விக்கிரமாதித்தனையும் வேதாளத்தையும் கண்ட ஞானசீல முனிவன் தனது கனவு வெகு சீக்கிரம் நனவாகப் போகிறது என்று களிப்புற்றான். வேதாளத்தை வெளியே செல்லுமாறு கூறிவிட்டு விக்கிரமாதித்தனை குளித்து விட்டு வருமாறு கேட்டுக் கொண்டான்.

விக்கிரமாதித்தனும் குளித்து விட்டு வந்து நின்றபோது, காளிதேவியின் முன் வீழ்ந்து வணங்குமாறு முனிவன் கேட்டான். தான் அரண்மனைவாசி என்பதனால் எவ்வாறு வீழ்ந்து வணங்க வேண்டும் என்பது தெரியாது என்று கூறி வணங்கிக் காட்டுமாறு, வேதாளம் கூறியது போல் முனிவரிடம் சொன்னான்.

முனிவன் சாஷ்டாங்கமாக வீழ்ந்ததும் வாளினை எடுத்து விக்கிரமாதித்தன் ஒரே வீச்சில் ஞானசீல முனிவரின் தலையை வெட்டினான். அத்தலை தானாகவே உருண்டோடிச்சென்று ஓம குண்டத்தில் விழுந்தது.

இந்த வேளையில் காளிகாம்பாள் விக்கிரமாதித்தன் முன்தோன்றி, "மன்னவனே! உனக்கு என்ன வரம் வேண்டும்?". என்று கேட்டாள்.

"ஞானசீல முனிவன் தனது சுயநலத்துக்காக வெட்டி வீழ்த்திய தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது அரசர்களையும் உயிர்த்தெழ அனுக்கிரகம் செய்ய வேண்டும்!" என்று விக்கிரமாதித்தன் வேண்டிக் கொண் டான். அவ்வாறே காளிகாம்பாள் வரம் கொடுத்தாள்.

அரசர்கள் அத்தனைபேரும் உயர் பெற்றெழுந்து வந்து அம்பாளையும் வணங்கி விக்கிரமாதித்த மாமன்னனுக்கு தமது நன்றியையும் கூறிவிட்டுச் சென்றனர்.

இத்தனை கதைகளையும் விக்கிரமாதித்தனுடைய சிம்மாசனத்திலிருந்த இரண்டாவது படிக்கட்டில் தோன்றிய பதுமை போஜ ராஜ மன்னரிடம் கூறி முடித்தது. மன்னனைப் பார்த்து "போஜ ராஜரே! இத்தகைய வீரதீரச் செயல்களைப் புரிந்த மாமன்னன் விக்கிரமாதித்தமன்னனைப் போல் ஆட்சி புரியக் கூடிய தகுதி உமக்கும் இருக்கிறதா? அப்படியானால் நீர் இந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்து கொள்ளலாம்!" என்று கூறியது.

இந்தக் கதைகள் அவ்வளவையும் இரண்டாவது நாள் முழுவதும் கேட்டுமுடித்த போஜ ராஜன் களைத்துப் போய் தனது அந்தப்புரம் திரும்பினான்.

*(மன்னன் வருவான்..)*

# அக்கரைச் சிரிப்பு



ஜோர்ஜ்: நாயைப் போலவே குதிரையும் மனிதர்களுக்கு நல்ல நண்பன்.
பீட்டர்: என்ன சொன்னாய்?
ஜோர்ஜ்: நாயைப் போலவே குதிரையும் மனிதர்களுக்கு நல்ல நண்பன் என்று சொன்னேன்.
பீட்டர்: உளறாதே. வீட்டுக்குள் நாம் நுழைந்ததும், குதிரை வந்து மடியில் குதித்தால் என்னவாகும் தெரியுமா?

**

ஷீலா: உன் கணவர் உன்னிடம் அன்பாக இருக்கிறாரா?
ஸ்டெலா: என் மேல் அவர் உயிரையே வைத்திருக்கிறார். தூக்கத்தில் கனவில் கூட என் நினைப்புத்தான். ஆனால் பெயரை மட்டும் தான் மாற்றிச் சொல்லிவிடுகிறார்.

**



ஜோன்: நான் அதிகமாகப் பேசுவதில்லை.
ஜோய்: நானும் தான். எனக்கும் கூடத் திருமணமாகி விட்டது.

**

கணவன்: குடிக்கிறதால நீ ரொம்ப அழகாகத் தெரிகிறாய்.
மனைவி: உங்களுக்குப் பைத்தியமா? நான் குடிப்பது இல்லையே!
கணவன்: நீ குடிக்கிறதா சொல்லலை. நான் குடிக்கிறதைச் சொன்னேன்.

**

பீட்டர்: உன் மகனிடம் 'என்னை மாதிரியே நடித்துக் காட்டாதே' என்று கண்டித்தாயா?
ஜோர்ஜ்: ஆம். ஒரு முட்டாள் மாதிரி நடந்து கொள்ளாதே, என்று கண்டித்திருக்கிறேன்.

**




ஸ்மித்: தோமஸின் அப்பா மூன்று வருடங்களாக இரவில் தூங்குவதே இல்லையாம்.
போல்: என்ன, புது விதமான நோயாக இருக்கிறதே.
ஸ்மித்: இது நோய் ஒன்றுமில்லை. அவர் மூன்று வருடங்களாகக் கொம்பனி ஒன்றில் நைட் வோட்ச்மனாக இருக்கிறாராம்.

**

மனைவி: எனக்காக, குடிப்பதைத் தயவு செய்து நிறுத்தி விடுகிறீர்களா?
கணவன்: உனக்காக நான் குடிப்பதாக யார் சொன்னது.

**

அவர்: என் அண்ணன் வேலை செய்யும் இடத்தில், அவருக்குக் கீழே 5 ஆயிரம் பேர் இருக்கிறார்கள்.
இவர்: அப்படியானால் அவர் ஒரு பெரிய உயர் அதிகாரியா?
அவர்: அப்படியெல்லாம் இல்லை. அவர் கல்லறையில் புல்வெட்டும் தோட்டக்காரராக இருக்கிறார்.





பெண்களின் அழகோ இரகசியம் அதை
எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு - 06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lepik.com/arul


→ ஹனோவர் நகரில் 'எக்ஸ் போ 2000' சர்வதேச கண்காட்சியொன்று அண்மையில் ஏற்பாடாகியிருந்தது.


பல நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பலவகையான உற்பத்திப்பொருட்கள் இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

இந்தக் கண்காட்சியின்போது ஃபின்லாந்து நாட்டைச் சேர்ந்த ரொக் இசைக் கலைஞர்கள் அறுபேரும் தமது தலையலங்காரத்தை விசித்திரமாக மாற்றிக் கொண்டு ஸ்டைலிலாக(?) காட்சியளித்தார்கள்.

'லெனின் கிராண்ட் கௌ போய்ஸ்' என்று தமது இசைக்குழுவுக்குப் பெயர் சூட்டியிருக்கிறார்கள் இவர்கள்.

அந்தக் கண்காட்சியில் இவர்களது இசைநிகழ்ச்சியும் இடம் பெற்றது. இசை நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் தம்மை அறிமுகப்படுத்துவதற்காக கண்காட்சிச்சாலையின் மேல் முகட்டில் அணிவகுத்து நின்ற காட்சிதான் இது.

அதெல்லாம் சரி, மேற்கத்திய இசைக் கலைஞர்கள் என்றால் அவர்களது தலையலங்காரங்கள் விசித்திரமாக அமைக்கப்பட்டிருப்பதன் காரணம் தான் என்ன? ■

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணழகுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# ஸ்டைல்?




↓ சிம்மமும் கன்னியும் ராசியாகிவிட்டது. அதாகப்பட்டது இந்தக் கடல் சிங்கத்துடன் இளம் பெண்ணொருத்தி நட்பாகி விட்டார்.

அமெரிக்காவின் நியூயோர்க் கண்காட்சியின்போது கடல் சிங்கத்தின் அருகில் சிரித்தபடி நின்று போஸ் கொடுத்தார் இவர். இவரது பெயர் கிறிஸ்டினா ஜோன்ஸன்.

கடல் சிங்கத்துடன் சிரித்தபடி நின்று போஸ் கொடுக்கும் பெண்ணே உன்னால் காட்டுச் சிங்கத்தோடு நின்று போஸ் கொடுக்க முடியுமா?

# ராசி




அவுஸ்திரேலிய நகர் சிட்னியில் இடம்பெற்ற ஒலிம்பிக் அங்குரார்ப்பண வைபவம் கண்கவர் நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒரு திருவிழா போன்று களைப் பட்டது.

அவுஸ்திரேலியக் கண்டத்தின் இயற்கை அழகின் வர்ணஜாலங்களைப் பிரதி பலிக்கும் செடிகள், கொடிகள், பூக்கள் மற்றும் அபூர்வ உயிரினங்களின் வடிவங்களை நடனக்காரர்கள் அரங்கின் நடுவே இசையோடு பார்வையாளர்களை மகிழ்வித்தனர்.

அவுஸ்திரேலியக் கடலில் மிதக்கும் ஜெலிமீன்கள் வடிவங்கள் கூட மிகப் பெரிதாக அமைக்கப்பட்டு அரங்கில் தோன்றி ஆட்டம் போட்டன.



# ஒலிம்பிக் திருவிழா



அவுஸ்திரேலிய கண்டத்தில் இருக்கும் அழகிய மலர் ஒன்றும் பெரிய வடிவில் உருவாக்கப்பட்டு, அது அரங்கில் கொண்டு வரப்பட்டு மலர்வது போல நடனமாடினார்கள்.

## 3வது பிறந்தநாள் வாழ்த்து

கனடா ரொரன்ரோவில் வசிக்கும் கதிர் காமநாதன் - தயாநிதி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஆரண்யா தனது 3வது பிறந்த நாளை 04.10.2000 அன்று ரொரன்ரோவிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பூட்டி, அம்மப்பா, அம்மம்மா, பெரியமாமா, மாமி, சித்தி, சின்னமாமா, நோர்வேயில் வசிக்கும் அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், கனடாவில் வசிக்கும் மாமாமார், மாமிமார், மச்சான்மார், சுவிஸில் வசிக்கும் மாமா, லண்டனில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், நெதர்லாந்தில் வசிக்கும் சித்தப்பா,



க. ஆரண்யா 04.10.2000

சித்தி, தம்பி, கனடாவில் வசிக்கும் அப்பம்மா, முல்லைத்தீவில் வசிக்கும் சின்ன அப்பம்மா, அப்பப்பா, சித்தப்பா, சித்தி, தங்கை மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: க. கதிர்காமநாதன் (அப்பா) ரொரன்ரோ-கனடா.
தொலைபேசி இல: (1416) 65 3002.